# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

■ சுடர்: 29 ■ கதிர்: 011 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 21, சனி 07.12.2013

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30


24



இடியுடன் கூடிய மழை

28°C 24°C



08

மோடி சவாலானவரே



பக்கம் 07

மறைந்தார் மண்டேலா



பக்கம் 23

இந்தியாவை சாய்த்தது தென்னாபிரிக்கா

# நல்லிணக்கத்துக்கு சாத்தியமே இல்லை

## அரசின் செயற்பாடுகள் அதனை வெளிப்படுத்துகின்றன அமெரிக்கக் குழுவிடம் நேற்று முறையிட்டார் சம்பந்தன்

திருகோணமலை, டிசெம்பர் 7
"இலங்கை ஆட்சியாளர்களின் அடாவடிச் செயற்பாடுகளால் நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பேயில்லை" என்று இலங்கை வந்துள்ள அமெரிக்க உயர் குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று எடுத்துரைத்தார்.
இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அமெரிக்காவின் வெளிவிவகாரங்களைக் கையாளும், அமெரிக்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டேமியன் நேர்பி தலைமையிலான மூன்று சிரேஷ்ட நிலை அதிகாரிகள் இலங்கைக்கு நேற்று



முன்தினம் வியாழக்கிழமை வருகை தந்தனர்.
இலங்கை அரசுக்கு எதிராக அடுத்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் மற்றுமொரு பிரேரணையைக் கொண்டு வருவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளுக்காக இங்கு வந்துள்ள இவர்கள் நேற்றுத் திருகோணமலை மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்டனர்.
திருகோணமலைக்கு சென்ற இந்தக் குழுவினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்

21 ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க காலக்கெடு

யாழ்ப்பாணம்,டிசெ.7
யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் சட்டவிரோதமாகத் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு அரசு அறிவித்துள்ளது.
15 ஆம் திகதிக்குப் பின்னர் இது குறித்து அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்

21 ஆம் பக்கம் பார்க்க

# நெடுந்தீவை விட்டு நேற்று ஈ.பி.டி.பி. வெளியேற்றம்

## தீவகத்தில் பல அலுவலகங்களுக்கு மூடுவிழா கமலின் கைதை அடுத்துத் திடீர்த் தீர்மானம்

யாழ்ப்பாணம்,டிசெ.7
நெடுந்தீவுப் பிரதேச சபை தவிசாளர் றெக்ஷயன் படுகொலையைத் தொடர்ந்தும் அந்தக் கொலை தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் (ஈ.பி.டி.பி) சேர்ந்த கமல் எனப்படும் கந்தசாமி கமலேந்திரன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதையடுத்தும் நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினர் நேற்றுத் திடீரென வெளியேறினர். அங்கிருந்த கட்சி அலுவலகங்கள் இழுத்து மூடப்பட்டு உறுப்பினர்கள் அனைவரும் நெடுந்தீவை விட்டு வெளியேறினர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த விசேட ஈ.பி.டி.பி குழுவின் தலைமையில் இந்த மூடு விழா நேற்று நடத்தப்பட்டது. அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்றின், ஊர்காவற்றுறைப் பிரதேச சபை தலைவர் என். ஜெயகாந்தன் மற்றும் கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் ஐங்கரன்

21 ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத ஆயுதம் குறித்து ரி.ஐ.டி. தீவிர புலன் விசாரணை

யாழ்ப்பாணம்,டிசெ.7
யாழ்ப்பாணத்தில் இன்னும் சட்ட விரோத ஆயுதங்கள் பல உள்ளன. அவை குறித்து பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் (ரி.ஐ.டி) தான் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். விசாரணையில் எமது பங்கு குறைவானதே என்று யாழ். பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் கூறினர். இந்தச் சந்திப்பில் காங்கேசன்துறைப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயஸ்ரீ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான ரணவீர பத்திரண உட்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.
யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் துப்பாக்கி முனையில் கொள்ளைகள் இடம்பெற்றன. அது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொள்வதாகக் கூறி வருகின்ற போதும் இதுவரை எவரும் கைதாகவில்லை.
இந்த நிலையில் நெடுந்தீவில் பிரதேச சபைத் தவிசாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய

21 ஆம் பக்கம் பார்க்க

## கடனுக்காக மனைவியை விற்க முயன்றார் கணவன்

*யாழ். பொலிஸாரால் கைது*

யாழ்ப்பாணம்,டிசெ.7
வங்கிக் கடனை அடைப்பதற்கான பணத்தைப் பெறுவதற்காக தாலி கட்டிய தனது மனைவியை தகாத நடத்தையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்திய கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.
மனைவி கொடுத்த முறைப்பாட்டை அடுத்து கணவனைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். இதனையடுத்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இந்தத் தகவலை நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயஸ்ரீ கூறினார்.
அரியாலையில் கடந்த 28 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
அதே இடத்தைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர் சுன்னாகத்தில் உள்ள வங்கி ஒன்றில் கடன் பெற்றுள்ளார். அந்தக் கடனை அடைக்க முடியாமல் அவர் திண்டாடியுள்ளார்.
இந்நிலையில் கடனை அடைப்பதற்கான

21 ஆம் பக்கம் பார்க்க

## குடாநாட்டு கொலைகளுடன் கமலுக்கு தொடர்பு உள்ளதா?

*ஆராய்கிறது பொலிஸ்*

யாழ்ப்பாணம்,டிசெ.7
2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற படுகொலைகளுடன் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலுக்கு தொடர்பு உள்ளதா என்பது பற்றி பயங்கரவாத மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணையை முன்னெடுக்கக் கூடும் என்று காங்கேசன் துறைப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயஸ்ரீ தெரிவித்தார்.
ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான கமலின் உதவியாளர் ஒருவர் யாழ்.நகரில் துப்பாக்கியுடன் கைது செய்

21 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலை வீர வேங்கை மண்டேலா காலமானார்

கொழும்பு, டிசெ.7
தென்னாபிரிக்காவில் நிறவெறி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி கறுப்பின மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த தலைவரும், தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலா நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

(விரிவான செய்தி 7 ஆம் பக்கத்தில்)

## கட்டாயக் கருத்தடை அறிக்கையை வெளியிட அதிகாரிகள் பின்னடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7
கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட கட்டாயக் கருத்தடை தொடர்பான, சுகாதார அமைச்சின் விசாரணைகள் முடிவுற்ற போதும், அது தொடர்பான விசாரணை அறிக்கையை வெளியிடுவதில் தொடர்ந்தும் அதிகாரிகள் பின்னடித்து வருகின்றனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் 3 கிராமங்களில் 50 பெண்களுக்குக் கட்டாயக் கருத்தடை மேற்கொள்ளப்பட்டிருந்தது.
கடந்த செப்ரெம்பர் மாதம் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டிருந்த இந்த நடவடிக்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காகச் சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனால் மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

21 ஆம் பக்கம் பார்க்க

## 23 ஆவது தடவையாக இலங்கைக்கு அகாஷி

யாழ்ப்பாணம், டிசெ. 07
இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி 23 ஆவது தடவையாக இலங்கைக்கு நாளை ஞாயிற்றுக் கிழமை வருகிறார். இவர் வடபகுதிக்கும் பயணம் மேற் கொள்வார் என்று கூறப்படுகிறது.



21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘கோவில் நகரம்’ இறுவட்டு நல்லூரில் நேற்று வெளியீடு



யாழ்ப்பாணம்,டிசெ.7
வடக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய ‘கோவில் நகரம்’ இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ் ண ஐயர் ஆசியுரை வழங்கினர். சிறப்பு விருந்தினர்கள் யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன், உயர்கற்கை நெறி பீடாதிபதி ச.சத்தியசீலன், யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையப் பணிப்பாளர் தே.தேவானந்த், கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து கல்வி அமைச்சர் த.குருகுலராசா ‘கோவில் நகரம்’ இறுவட்டின் முதல் பிரதியை ‘கொனிக்கா கலர் லாப்’ உரிமையாளர் வீ.சிறிதரனிடம் வழங்கினார். இறுவட்டுத் தயாரிப்பில் பணியாற்றிய தொழில் நுட்பவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

‘சாரங்கம்’ இசை மன்ற மாணவிகளின் இறை வணக்கம், தமிழ் வாழ்த்து என்பனவும் இடம்பெற்றன. நன்றியுரையை நல்லூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி கு.ரஜனி வழங்கினார். (த-7)

# அல்லாரை இராணுவ முகாமில் சூட்டுப் பயிற்சியை நிறுத்துக

## அப்பகுதி மீனவர்கள் முகாம் பொறுப்பதிகாரிக்கு மனு

தென்மராட்சி,டிசெ.7
சாவகச்சேரி அல்லாரை படை முகாமில் துப்பாக்கி சுடும் பயிற்சியினை நிறுத்துமாறு கோயிற் குடியிருப்பு கடற்றொழிலாளர் அமைப்பு முகாம் பொறுப்பதிகாரிக்கு நேற்று வெள்ளிக்கிழமை மனு ஒன்றை வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடலேரிப் பகுதியில் மீன் பிடிப்பதற்கு நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் அந்த நேரத்துக்குப் பின்னர் கடலில் வந்த தொழிலாளி ஒருவர் பயிற்சியின் போது சுடப்பட்ட ரவைகளில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பிக் கரை சேர்ந்துள்ளார்.

இராணுவ முகாமில் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி இடம் பெறுவதால் கடற்றொழிலாளர்கள் பி.ப. 3 மணிக்கு முன்னர் கடலுக்குச் சென்று காலை 6 மணிக்கு முன்னர் கரை திரும்ப வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் காலை 6 மணிக்குக் கடலேரியை நோக்கி துப்பாக்கி சுடும் பயிற்சிகள் இடம்பெற்றபோது தாமதமாக வந்த தொழிலாளி ஒருவர் மயிரிழையில் தப்பி உள்ளார்.

நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் கடலேரியில் தொழில் செய்வோர் மிகவும் பாதிப்படைகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட நீரியல் வளப் பணிப்பாளர், யாழ். அரச அதிபர், தென்மராட்சிப் பிரதேச செயலர், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆகியோருக்கு முறையிட்டுள்ளதாகவும் மீனவர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (த-9)

## முன்பள்ளி கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ.7
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடத்தும் முன்பள்ளிக் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

வட மாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜெயா - தம்பையா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசாவும், கௌரவ விருந்தினர்களாக அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வலிகாமம் கல்வி வலய ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ஆர். இருதயநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-400)

## இந்திய மீனவர் கரை ஒதுங்கினர்

யாழ்ப்பாணம், டிசெ.7
கடல் அலை காரணமாகப் படகு உடைந்து கடலில் மூழ்கியமையால் அதில் பயணித்த இந்திய மீனவர் நான்கு பேர் நீத்தி நெடுந்தீவில் நேற்றுக் கரை சேர்ந்தனர்.

அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (த-4)

# வீதியில் ஆசிரியரை தாக்கிவிட்டு வழிப்பறி

## பிரமந்தனாறில் சம்பவம்

மாங்குளம்,டிசெ.7
வீதியால் சென்ற ஆசிரியரை வழிமறித்துத் தாக்கி அவரிடமிருந்து கையடக்கத் தொலைபேசி, ஒரு தொகைப் பணம், மணிக்கூடு என்பன கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு பிரமந்தனாறு சித்தி விநாயகர் ஆயலத்துக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் கௌரி சங்கர் என்பவரிடமிருந்தே 10 ஆயிரம் ரூபா பணம், கையடக்கத் தொலைபேசி, பெறுமதிமிக்க மணிக்கூடு, தல்லக்கவசம் என்பவற்றை இனந்தெரியாத நபர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தன்னைத் தாக்கியவர்கள் சரளமாகத் தமிழில் பேசியதாகவும், சம்பவம் இடம்பெற்றுச் சில மணி நேரத்தில் தொலைபேசி இலக்கத்திற்கு பணம் மீள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் அதன் இலக்கமும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர் தெரிவித்தார். (த-400.422)

## இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.7
விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நாவலர் வீதி, நல்லூரைச் சேர்ந்த செல்வராஜா கிருபாகரன் (வயது 23) என்ற இளைஞர் சிகிச்சை பயனளிக்காது நேற்று அங்கு உயிரிழந்தார்.

இது குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# சனசமூக நிலையங்களுக்கான நிதி அடுத்த ஆண்டிலாவது கிடைக்குமா?

யாழ்ப்பாணம், டிசெ.7
வடக்கு மாகாண சபையால் சனசமூக நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்த நன்கொடை நிதி கடந்த மூன்று வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அடுத்த ஆண்டிலாவது அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையினால் ஒவ்வொரு வருடமும் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை, கழக நன்கொடை என்பன வழங்கப்பட்டு வந்தன.

கடந்த 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஊடாகப் பெரும்பாலான பிரதேச சபைகள், நகர சபைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் வந்தன. இதனையடுத்து இந்தச் சபைக் கூடாகச் சனசமூக நிலையங்களுக்கும், நூலகங்களுக்கும் வழங்க வேண்டிய நன்கொடையை வடக்கு மாகாண சபை நிறுத்தியிருந்தது.

இதனால் இதுவரை காலமும் அந்த நன்கொடை நிதி வழங்கப்படவில்லை. இந்த நிலையில் வடக்கு மாகாண சபையைத் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கூட்டமைப்பினாலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மேற்படி நன்கொடை நிதி, புதிய வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அடுத்த ஆண்டு வழங்கப்படுமா என்று சமூக ஆர்வலர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (த-5)

# பருத்தித்துறை முனைக் கரையில் ஒதுங்கியது உருக்குலைந்த சடலம்



பருத்தித்துறை, டிசெ.7
பருத்தித்துறை முனைக் கடற்கரையில் சிதைவடைந்தநிலையில் கரையொதுங்கிய சடலம் ஒன்றைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

இந்தச் சடலம் அடையாளம் காண முடியாதவாறு மிகவும் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. மேலங்கி எதுவும் இன்றி நீல நிற ‘டெனிம்’ நீளக் காற்சட்டை அணிந்த நிலையில் இந்தச் சடலம் நேற்றுக் கரையொதுங்கியது.

கடற்கரைக்குச் சென்ற பொது மக்கள் வழங்கிய தகவல்களை அடுத்து பருத்தித்துறைப் பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் அது தொடர்பாகப் பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ.கே.நடராஜாவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டு அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரிக்கு உத்தரவிட்டார். சடலத்தை மீட்டு உடற்கூற்றியல் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறும் அவர் பொலிஸாருக்கு பணித்தார்.

இதனை அடுத்து சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-400-422)

## போலி நகைகளை 3 ஆவது தடவை அடகு வைக்க முயன்ற பெண்கள்

### பொலிஸாரினால் கைது

**“ சந்தேகம் கொண்ட வங்கி அதிகாரிகள் அவர்கள் கொண்டு வந்த நகைகளைப் பரிசிலித்த போது அனைத்தும் போலியானவை என்று தெரிய வந்துள்ளது.**

*யாழ்ப்பாணம்,டிசெ.7*
*அச்சுவேலியிலுள்ள அரச வங்கி ஒன்றில் இரண்டு தடவைகள் போலி நகைகளை அடகு வைத்த பெண்கள் மூன்றாவது தடவையாகவும் போலி நகைகளை அடகு வைத்த போது வங்கியாளர்களால் இனங்காணப்பட்டுப் பொலிஸார் மூலம் கைது செய்யப்பட்டனர்.*

*அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயஸ்ரீ தெரிவித்தார்.*

*இருபாலை மற்றும் மன்னாரைச் சேர்ந்த இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.*

*குறித்த பெண்கள் இருவரும் கடந்த 29 ஆம் திகதி போலி நகைகளை அரச வங்கியொன்றில் அடகு வைத்துள்ளனர். அவற்றைப் போலி என்று அறி யாத வங்கியாளர்கள் அதற்கு ஒரு இலட்சத்து 84 ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுத்துள்ளனர். மறுநாள் முற்பகலும் போலி நகைகளை அந்தப் பெண்கள் அதே வங்கியில் அடகு வைத்தனர். அதற்கும் வங்கியாளர்கள் 1 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுத்தள்ளனர். அதேதினம் பிற்பகலும் குறித்த பெண்கள் போலி நகைகளை அடகு வைக்க அந்த வங்கிக்குச் சென்றுள்ளனர்.*

*இதனால் அவர்கள் மீது சந்தேகம் கொண்ட வங்கி அதிகாரிகள் அவர்கள் கொண்டு வந்த நகைகளைப் பரிசீலித்த போது அனைத்தும் போலியானவை என்று தெரிய வந்துள்ளது. அதனையடுத்தே பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். (த-4-86)*

## கற்பகப்பிள்ளையார் கஜமுகாசூர சங்காரம்

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்று வரும் பிள்ளையார் கதை படிப்பின் 20ஆம் நாளான இன்று முற்பகல் கதை படிப்பும் மாலை 6மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து கஜமுகா சூர சங்காரமும் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 11 மணிக்கு இறுதி 21ஆம் நாள் பிள்ளையார் கதை படிப்பு ஆரம்பமாகி நிறைவுறும். (த)

# 7 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் கடந்த வாரத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.7
யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜஸ்ரீ தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருநகரில் வீடு புகுந்த திருடர்கள் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துள்ளனர். யாழ் நகரில் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கோப்பாய் மத்தியில் வீடு புகுந்த திருடர் வெளிநாட்டு நாணயங்களையும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் கைதான சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதே பகுதியில் கடந்த முதலாம் திகதி 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அதிபர் அறைக்குள் இருந்த 8 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடர்கள் அபகரித்துள்ளனர். கச்சாய் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை வீடு புகுந்த திருடர்கள் 46 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியைத் திருடிச் சென்றுள்ளனர். உடுவிலில் சைக்கிளில் சென்ற பெண்ணிடமிருந்து 500 ரூபா பணமும், கைத்தொலைபேசியும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. குப்பிளானில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அராலி மத்தியில் வீடு புகுந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள் திருடப்பட்டுள்ளது என்றார். (த-4-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புக்கு இ.போ.ச.பஸ் கட்டணம் ரூ.484

யாழ்ப்பாணம், டிசெ.7
யாழ்.டிப்போவினால் நடத்தப்பட்டுவரும் யாழ்ப்பாணம்-கொழும்பு பஸ் சேவைக் கட்டணமாக 484ரூபாவே அறவிடப்படுகிறது என்று முகாமையாளர் செ.குலபாலசிங்கம் அறிவித்துள்ளார். இந்த இ.போ.ச.பஸ் யாழ்ப் பாணத்தில் இருந்து காலை 6.45 மணிக்கும், கொழும் பில் இருந்து காலை 6 மணிக்கும் சேவையில் ஈடுபட்டு வருகிறது என்றும்- இதுவரை காலமும் அரைச் சொகுசு கட்டணமாக 726 ரூபா அறவிடப்பட்டபோதும் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் புதிய கட்டணமாக 484 ரூபா அறவிடப்பட்டு வருகிறது என்றும் முகாமையாளர் அறிவித்திருக்கிறார். (ஓ)

## பயிர்ச் சிகிச்சை முகாம்

தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள விவசாயிகளின் பயிர்ச் செய்கை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்நோக்குடன் பயிர்ச் சிகிச்சை முகாம் எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சித்தங்கேணி நாமகள் வாசிகசாலையில் நடைபெறவுள்ளது.
தொல்புரம் பகுதி விவசாயிகள் பயிர்களின் பிரச்சினைக்குரிய மாதிரிகளுடன் வருகைதந்து ஆலோசனைகளையும் தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபால சுந்தரம் அறிவித்துள்ளார்.(வ-14)

# நீதிமன்றுக்கு அருகில் பெண்கள் போராட்டம்



வலி. வடக்கு. டிசெ.7
புத்தூரில் படுகொலை செய்யப்பட்ட அமிர்தலிங்கம் மைதிலி (வயது -27) என்பவரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவரின் வழக்கு நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட இருந்த நிலையில் மல்லாகம் நீதிமன்றத்துக்கு அண்மையில் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்று கூடி பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த சில மாதங்களாக படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் பெண்களுக்கு நீதி வேண்டி குறிப்பிட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் பெண்கள் அமைப்புக்கள் இத்தகைய அமைதியான விழிப்புணர்வுப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.
நேற்றைய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுமார் இரண்டு மணித்தியாலத்துக்கு மேல் பதாகைகளை ஏந்திய வண்ணம் காங்கேசன்துறை வீதியில் நின்றனர்.
அதையடுத்து அந்த இடத்துக்கு விரைந்துசென்ற தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடிவிட்டுச் சென்றனர். (வ-86)

# படையினர் வசமுள்ள நிலங்களை மீட்க அரசியல் ரீதியில் அணுக வேண்டாம்

## *வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.டிசெ.7
வடமாகாண அமைச்சுக்கு உட்பட்ட 400 ஏக்கர் விவசாய நிலங்கள் விடுவிக்கப்படாது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.
அவற்றை விடுவிப்பதற்கு அரசியல் சார்ந்த பிரச்சினையாக இல்லாமல் பொதுப் பிரச்சினையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
வடமாகாணத்தில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வங்கி அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று வடமாகாண விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

“ – ”

**இறக்குமதி தாராளமாக நடைபெறுவதால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை சந்தைப் படுத்த முடியாமல் வருமானம் பாதிக்கப் பட்ட நிலையில் உள்ளனர். வங்கிகளில் கடன் களைப் பெற்றமையால் வங்கிகளுடன் முரண் பட வேண்டிய பிரச்சினை களையும் எதிர் கொண்டு வருகின்றனர்.**

விவசாயிகளது பொருளாதாரத்தை தரமுயர்த்துவதற்கு துறை சார்ந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.
பொருத்தமான பயிர்களை காலநிலைக்கு ஏற்ப பயிரிடுவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.
விவசாயிகள் தற்போது எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் ஒன்றாக வங்கிகளில் பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர்.
இதனால் வங்கிகளில் கடன்களை மீளச் செலுத்துவதற்காக சில சலுகைகளை எதிர்பார்த்து நிற்கின்றனர்.
கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் விவசாய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் உற்பத்தியிலும் பெரும் வீழ்ச்சியைக் காண முடிகின்றது.
இறக்குமதி தாராளமாக நடைபெறுவதால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை சந்தைப்படுத்த முடியாமல் வருமானம் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.
வங்கிகளில் கடன்களைப் பெற்றமையால் வங்கிகளுடன் முரண்பட வேண்டிய பிரச்சினைகளையும் எதிர் கொண்டு வருகின்றனர்.
எனவே எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்யாமல் விவசாயிகளை மீட்டெடுக்க கடன்களை மீளச் செலுத்துவதற்கு சலுகைகளை வங்கிகள் வழங்க முன்வர வேண்டும்-என்றார். (வ-14)

# மக்களை அந்தரிக்கவிட்ட தீவுப்பகுதி படகுச் சேவை

யாழ்ப்பாணம்.டிசெ.7
நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச் சேவை நேற்று முன் தினம் வியாழக்கிழமை முதல் ஸ்தம்பிதமடைந்தது. இதனால் படகுப் பயணத்துக்காக நெடுந்தீவு - குறிகாட்டுவான் துறை முகங்களுக்கு வந்த பயணிகள் பெரிதும் சிரமப்பட்டு மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.
வியாழக்கிழமைகளில் அரச படகுச் சேவை இடம்பெறுவதில்லை. பதிலாக தனியார் படகுகளே சேவையில் ஈடுபடுகின்றன. வியாழக் கிழமை பிற்பகலில் குறிகாட்டு வானில் இருந்து நெடுந்தீவுக்குப் பயணிகளுடன் சென்ற இரு படகுகளில் ஒன்று பலத்த கடல் கொந்தளிப்பால் கடல்நீரால் நனைந்த பயணிகளுடனும் அவர்களது பொருள்கள் பாதிப்படைந்த நிலையில் நெடுந் தீவைச் சென்றடைந்தது.
மற்றைய படகு இடைநடுவில் சுக்கான் உடைந்துபோன போதும் அதிர்ஷ்டவசமாக நெடுந் தீவைச் சென்றடைந்தது. நேற்று வெள்ளிக்கிழமை கடல்கொந்தளிப்பாக இருந்ததால் குமுதினிப் படகுசேவையில் ஈடுபட வில்லை.
படகுச் சேவை குறித்து பிரயாணம் செய்யவரும் மக்கள் துறைமுகங்களில் நின்று தமது ஆதங்கத்தை வெளிக்காட்டி விட்டுத் திரும்பிச் செல்வதும் வழமையாகிவிட்டது. (வ-7)

“ – ”

**குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குப் பயணிகளுடன் சென்ற இரு படகுகள் பலத்த கடல் கொந்தளிப்பால் கடல்நீரை உள்வாங்கிய வாறு கடல்நீரால் நனைந்த பயணி களுடனும் பொருள்கள் பாதிப்படைந்த நிலையில் நெடுந்தீவைச் சென்றடைந்தன.**

# இனி விதைக்கத் தயாரானால் குறுகியகால நெல்லைப் பயன்படுத்துங்கள்

## *வவுனியா, பிரதி விவசாயப் பணிப்பாளர் சகிலாபானு அறிவுறுத்து*

வவுனியா, டிசெ.7
பெரும்போக பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் குறுகிய காலத்தில் பயன்தரும் நெல் இனங்களைப் பயன்படுத்துமாறு வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சகிலாபானு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-
இந்த ஆண்டு அதிக மழை வீழ்ச்சிக்கான சாத்தியக்கூறு இல்லை என அறிவிக்கப்பட [illegible] மழையின்மையால் வயல்களில் நெற் பயிர்களுக்குப் பதிலாக புற்கள் வளர்ந்து காணப்படுகின்றன. இதனால் விவசாயிகள் வயல்களை மீண்டும் உழுது நெல்லை விதைக்கிறார்கள். அவர்கள் குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய “பி.ஜி 300” வகை நெல்லைப் பயன்படுத்துவதே சிறந்தது. இவ்வகை விதை நெல்லை எமது வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதனையொரு அவசர அறிவித்தலாகவே விடுக்கிறேன் என்று தெரிவித்தார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில் தவறி விழுந்து இளைஞர் சாவு

யாழ்ப்பாணம்.டிசெ.7

மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞன் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நாரந்தன்னை வடக்கு, தம்பாட்டியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த மகாதேவன் பிரதீப் (வயது -23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவர்.

கிணற்றடியில் நின்றிருந்த அவர் கால் இடறியமையால் தவறி விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

## 21 பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.7

பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றசசாட்டில் கடந்த வாரம் யாழ்.மாவட்டத்தில் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன் துறைப் பிரிவு பொலிஸ் அத்தியட் சகர் தமயந்த விஜய ஸ்ரீ தெரிவித்தார்.

இதனைவிட களவுக் குற்றச்சாட்டில் 5 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 3 பேரும், மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 5 பேரும் மது போதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரும், சந்தேகத்தின் பேரில் 13 பேரும், விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும், வன் புணர்வு புரிந்த குற்றச்சாட்டில் ஒருவரும், சூழலை மாசுபடுத்திய குற்றச்சாட்டில் 3 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று அவர் மேலும் கூறினார். (த-4-86)

# போரழிவு தொடர்பான மதிப்பீட்டில் சந்தேகம்

### கத்தோலிக்க குருமார் தெரிவிப்பு

கொழும்பு.டிசெ.7

போர்க் கால இழப்புக்கள் தொடர்பில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கெடுப்புத் தொடர்பில் கத்தோலிக்க, மற்றும் தமிழ்ச் செயற்பாட்டாளர்களினால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான புள்ளி விவரத்திணைக்களமும், பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சும் இந்த கணக்கெடுப்பை நடத்துகின்றன. இந் நிலையில் எந்தவொரு அரசும் தனக்குத் தானே பாதக விளைவுகளை எற்படுத்திக் கொள்ளாது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான சேதவிவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இந்தக் கணக்கெடுப்பு பணிகள் ஆரம்பமாகின. இந்தத் தகவல்களைத் திரட்டுவதற்காக 6 ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்களும் சர்வதேச சமூகமும் பிரயோகித்த அழுத்தங்கள் காரணமாகவே இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவதாகக் கத்தோலிக்க அமைப்புக்களும், தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் கணக்கெடுப்பு வரவேற்கப்பட வேண்டியது என்ற போதிலும், இந்தக் கணக்கெடுப்பின் நம்பகத் தன்மை குறித்து சந்தேகம் எழுவதாக கரித்தாஸ் அமைப்பின் முன்னாள் தலைவரும் அருட் தந்தையுமான ஒஸ்வல்ட் பிரிந்த தெரிவித்துள்ளார்.

அரசுக்குச் சொந்தமான புள்ளி விவரத் திணைக்களமும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இந்தக் கணக்கெடுப்பை நடத்துகின்றன. எந்தவொரு அரசும் தனக்குத் தானே பாதக விளைவுகளை ஏற்படுத்திக் கொள்ளாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கணக்கெடுப்பு மூலம் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்று அருட் தந்தை டெரன்ஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு ஆணைக் குழுக்களை அமைத்து நடவடிக்கை எடுப்பதாக அறிவித்த போதிலும், எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை என்று உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார். (த-5)

## மனைவி தீ மூட்டிக் கொலை கணவனுக்கு தூக்குத் தண்டனை

கொழும்பு, டிசெ. 7

மனைவியைத் தீ மூட்டிக் கொலைச்செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட கணவனுக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கொத்தட்டுவ வாசியான அநுர லக்ஷ்மன் சில்வா 2004 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் திகதியன்று தனது மனைவிக்கு வேண்டுமென்றே தீ மூட்டிக் கொலைசெய்தாரென கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சந்தேகநபர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றம் நிரூபக்கப்பட்டதையடுத்து நீதிபதி குமுதினி விக்ரமசிங்க அவருக்கு நேற்று முன்தினம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (த)

## 80 வயதாகும் போது குறைந்தது 20 பற்களாவது இருக்க வேண்டும்

கொழும்பு, டிசெ. 07

ஒருவருக்கு 80 வயதாகும் போது 20 பற்களாவது இருக்க வேண்டும் என்பது சர்வதேச தரம்.

ஆனால் இலங்கையில் ஒருவருக்கு 70 வயதாகும் போது ஒரு பல் கூட இருப்பதில்லை என சுகாதார அமைச்சு குறிப்பட்டதுடன் இதனை மாற்றியமைப்பதற்கான புதிய வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இதற்கமைய பிள்ளைகளின் பற் சுகாதாரம் குறித்து விசேட வேலைத் திட்டம் ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சிறுவர்களுடைய சிறு வயதிலிருந்தே அவர்களின் பற் சுகாதாரம் குறித்து கவனம் செலுத்தும் வகையில் விழிப்புணர்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பான கணிப்பீடு ஒன்றைச் செய்யும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. (த)

## மென்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்துத் திருட்டு

### வயோதிபர் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம்,டிசெ.7

மென்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்துவிட்டு 40 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒரு பவுண் சங்கிலி என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் வயோதிபரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். முனியப்பர் கோயிலை அண்மித்துக் கடந்த புதன் கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

வவுனியாவைச் சேர்ந்த ஒருவரே பணம், நகைகளைப் பறிகொடுத்தவராவார். மட்டக்களப்பைச் சேர்ந்த வயோதிபரே கைது செய்யப்பட்டவராவர். அவர் அங்கு நடைபாதை வியாபாரம் செய்பவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-4)



நாவற்குழி பொதுநூலகத்தில் இடம் பெற்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் எழுத்தாளர் கௌரவிப்பில் எழுத்தாளர் பி. முத்துலிங்கம் பிரதேச சபைத் தலைவர் சி. துரைராஜாவால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# முருகனூர் பாடசாலைக்கு நீர்த்தாங்கி அன்பளிப்பு

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்துக்கு சுத்திகரிப்புடன் கூடிய நீர்த்தாங்கியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. சுகாதார முறைப்படி மாணவர்கள் சுத்தமான நீரைப் பருக வேண்டும் என்பதற்காகவே இந்த நீர்த்தாங்கி இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

தொற்று நோய்களைத் தவிர்க்கும் பொருட்டு மாணவர்கள் தூய நீரைப் பருக வேண்டுமென சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்திவரும் நிலையில் வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்துக்கு 8 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நீர்த்தாங்கியை ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் சி.விஸ்வலிங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதற்கான நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற போது பாடசாலை அதிபரான பி.நேசராசாவிடம் இந்த நீர்த்தாங்கி வழங்கப்பட்டது. (க-421)

## மாகாணசபைச் சட்டங்கள் குறித்து சபை உறுப்பினர்களுக்கு கருத்தமர்வு

### விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.7

வடக்கு மாகாண சபைக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மாகாண சபைச் சட்டங்கள் தொடர்பில் விசேட கருத்தமர்வுகளை நடத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் நல்லாட்சிப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

23 வருடங்களுக்குப் பின்னர் வடக்கு மாகாண சபைக்கு முதன்முறையாக தேர்தல் நடத்தப்பட்டது.

இதனால் மாகாணசபைக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மாகாண சபை தொடர்பிலான விசேட கருத்தமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்தக் கருத்தமர்வுகள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் நல்லாட்சிப் பிரிவினால் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்துடனும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினர் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

இதற்கமைய மாகாணசபை உறுப்பினர்களுக்கு, மாகாண சபைச் சட்டங்கள், நிர்வாகம், திட்டமிடல் தொடர்பில் விசேட கருத்தமர்வுகள் நடத்தப்படவுள்ளன. (ஒ-5-50)

# காணி மோசடியில் உப அதிபர் கைது

போர்க்காலத்தில் இடம்பெயர்ந்து சென்ற ஒருவரின் காணியைப் போலி உறுதி தயாரித்து மோசடி செய்து தன்வசப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் யாழ். நகரப் பாடசாலை ஒன்றின் உப அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரைத் தலா 40 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் விடுவித்த யாழ். நீதிமன்றம் இது தொடர்பான வழக்கை ஒத்திவைத்தது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

யாழ். மடத்தடி பகுதியில் உள்ள 3 பரப்புக் காணியே இவ்வாறு மோசடி செய்யப்பட்டது.

காணி உரிமையாளர்கள் போர்ச்சூழ்நிலை காரணமாக பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து வத்தளைக்குச் சென்றுவிட்டனர். இந்த நிலையில் அந்தக் காணியை பாடசாலை உப அதிபர் ஒருவர் 2006 ஆம் ஆண்டு போலி உறுதி தயாரித்து மற்றொருவருக்கு எழுதிக் கொடுத்துள்ளார்.

சில வருடங்களின் பின்னர் இந்தக் காணியை உப அதிபர் தனது பெயருக்கு மாற்றிக் கொண்டார் என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்குக்கு குறித்த உப அதிபரும் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டார். இதன் போதே அவரை பிணையில் விடுவித்து வழக்கை ஒத்தி வைத்தது நீதிமன்றம். (த-4)

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் வலி காமம் தெற்குப் பிரதேச இளைஞர் சேவை மன்றத்தின் சம்மேளனம் யாழ். மாவட்ட ரீதியில் மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டி உடுவில் உதய சூரியன் மைதானத்தில் இன்று இரவு இடம் பெறவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கீரி மலை உதயதாரகை விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் மோதும்.

இரவு 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழகம் மோதும். (த-288,400)

# நுளம்பு பெருகும் சூழல் பேணியோர் மீது வழக்கு

தென்மராட்சி, டிசெ.7

புதிய கட்டடங்கள் அமைக்கையில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்கக் கூடிய நடவடிக்கையில் ஈடுபடாத இருவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

கைதடிப் பிரதேசத்தில் நவீல்ட் பாடசாலை வீதியில் புதிதாக கட்டடம் அமைக்கும் பணியில் ஈடுபட்ட இடத்தில் நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வகையில் பொருள்களை வைத்திருந்த ஒப்பந்தகாரர் மீதும், வரணி மகா வித்தியாலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட மலசலகூட குழியை மூடாமல் மழைநீர் தேங்க வைத்து நுளம்பு பெருகக்கூடிய வகையில் வைத்திருந்த ஒப்பந்தகாரர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை -நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டப் பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தி செய்யக்கூடிய வகையில் பொருள்களை வைத்திருந்த குடியிருப்பாளருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சாவகச்சேரி பகுதியில் வீதியோரங்களில் குப்பை போட்ட குடியிருப்பாளர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை ஆரம்பம்

*காரைநகர், டிசெ.7*

*காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரைத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.*

*திருவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீன கர்த்தாக்கள் மேற்கொண்டு வருகின்றனர். திருவிழாக் காலங்களில் தினமும் காலை 7 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து 10 மணிக்கு மாணிக்க வாசகர் பெருமான் எழுந்தருளி திருவெம்பாவை ஓதலும் முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி திரு வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.*

*எதிர்வரும் 12 ஆம் திகதி கைலாயவாகனத் திருவிழாவும் எதிர்வரும் 17 ஆம் திகதி பஞ்சரத பவனியும் அன்று நள்ளிரவு தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும் மறுநாள் அதிகாலை 5 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் மாலை 4.30 மணிக்கு திருவூடல்உற்சவமும்தொடர்ந்து தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன.*

*திருவிழா காலங்களில் ஆலயச்சூழலில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடவுள் ளதால் பக்தர்களின் நலன் கருதி சுகாதாரம், குடிதண்ணீர், பாதுகாப்பு, போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு ஆலய ஆதீனகர்த்தாக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*திருவிழா காலங்களில் தினமும் யாழ்.பஸ் நிலையத்தி லிருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளதுடன் ஆலயச் சூழலில் உள்ள ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையம், மாணிக்க வாசகர் மடாலயம் என்பவற் றில் அன்னதானமும் இடம் பெறவுள்ளது. (வ-250)*





கோண்டாவிலில் தீவிரமான பாதீனிய ஒழிப்பின்போது...

## கோண்டாவிலில் நேற்று பாதீனியம் ஒழிப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.7

நல்லூர் பிரதேச சபை நேற்று வெள்ளிக்கிழமை கோண்டா வில் பகுதியில் பாதீனிய ஒழிப்புநடவடிக்கையை ஆரம்பித்தது.

நல்லூர் பிரதேச சபைத் தலை வர் ப.வசந்தகுமார் தலைமையில் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியால யத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாடசாலைச் சுற்றாட லில் உள்ள வளவுகளில் பாதீனிய ஒழிப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம், மாகாண சபை உறுப்பினர் இ. ஆனல்ட், வித்தியாலய அதிபர் என்.வாமதேவன், பிரதேச சபை உப தலைவர் திருமதி கோமதி ரவிதாஸ் மற்றும் உறுப் பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச சபை உத்தியோ கத்தர்கள் கலந்து கொண்டு பாதீனியச் செடிகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் மூன்று மணி நேரம் வரை இந்த நடவடிக்கை இடம் பெற்றது. (வ-7)

## தென்மராட்சி பிரதேச முதியோர் சம்மேளனம்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர்கள் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள முதியோர் சங்கங்களை உள்ள டக்கி பிரதேச முதியோர்கள் சம்மேளனம் ஒன்று அண்மையில் அமைக் கப்பட் டுள்ளது.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவர் எஸ்.அருளா னந்தம் தலை மையில் நிர்வாக சபை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. பிரிவு ரீதியாக இயங்கும் சங்க அங்கத் தவர் களின் நல-னோம்பு விடயங்களை இந்தச் சபை மேற்கொள்ளும். (வ)

## இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு இம்முறை 488 பேர்

அச்சுவேலி, டிசெ.6

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு 2013/2014 ஆளணியில் 488 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதில் திறந்த நிலை போட்டிப் பரீட்சை மூலம் 122 பேரும், மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் 146 பேரும், சேவை மூப்பு திறமை அடிப்படையில் 220 பேரும் என மொத்தமாக 488 பேர் சேர்த் துக் கொள்ளப்படவுள் ளனர்.

ஆள் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் நடை பெற்று வருகின்றன. போட்டிப் பரீட்சையில் உரிய வெட்டுப் புள்ளியை பெறுபவர்களில் உயர் புள்ளி அடிப்படையில் தெரிவுகள் நடைபெறவுள்ளன.

இந்த முறை திறந்த நிலை போட்டிப் பரீட்சை மூலம் நடை பெறும் தெரிவில் பாடத்துறை களுக்கான தெரிவுகள் நடை பெறமாட்டாது என்று அறிவிக் கப்பட்டிருப்பதால் பாடத் துறை ரீதியிலான தெரிவுகள் முழுவதும் மட்டுப்படுத்தப்பட்ட நிலை யில் நடைபெறவுள்ளன.

திறந்த நிலை மட்டுப்படுத்தப் பட்ட நிலை, போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படு பவர்கள் ஒருவருட காலப் பயிற் சியின் பின்னரே பணியில் அமர்த்தப்படவுள்ளனர்.

இதுவரை காலமும் மட்டுப் படுத்தப் பட்ட நிலை போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் குறுகிய கால பயிற்சியோடு சேவையில் அமர்த்தப்பட்டு வந்தனர்.

இனிவரும் காலங்களில் அவர் கள் முழுமையான வதிவிடப் பயிற்சியின் பின்னரே சேவையில் அமர்த்தப்படவுள்ளனர். (வ-11)

## நிர்வாகசபைக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.7

வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# பாதீனியம் முற்றாக ஒழிந்தால் பொருளாதாரம் பாதுகாக்கப்படும்

### *வடமாகாண விவசாய அமைச்சர் அறைகூவல்*

யாழ்ப்பாணம், டிசெ.7

இந்திய இராணுவத்தினருடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பாதீனியம் நாம் அறியாமலேயே எமது பொருளாதாரத்தைப் பாதிக்கும் ஒன்றாகவும் இருந்துள்ளது. நாம் எமது பொருளாதார வளங்களைப் பாதுகாக்க வேண்டுமெனின் இந்த நச்சுக்களையை முற்றாக ஒழிக்க ஒத்துழைக்க வேண்டும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபை நேற்று வெள்ளிக்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தது. நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்தில் பலதரப்பட்ட மூலிகை வகைகள் உள்ளன. அவை பாதீனியக் களையினால் அழிந்து கொண்டிருக்கின்றன. ஏனைய களைகளைப் போலன்றி எமது மரபணுவையே மாற்றமடையச் செய்யும் அளவுக்கு மிக ஆபத்தான களை இதுவாகும்.

மாகாண சபை ஏற்படுத்தப்பட்டதை அடுத்து பாதீனியம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதால் அதை அழிப்பதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு அதனை முழுமையாக அகற்றச் செயற்பட வேண்டும். இதற்கென இந்த மாதத்தை பாதீன ஒழிப்பு மாதமாக பிரகடனப்படுத்திய போதும் ஒரு மாதத்தில் அதை அழித்து விட்டோம் என்றில்லாமல் தொடர்ச்சியான செயற்பாடுகள் இடம்பெறவேண்டும். விவசாயப் பாதிப்புக்குக் காரணமாக இந்தக் களையை பொது நோக்கங்களைக் கொண்ட திட்டங்களை உருவாக்கி [illegible]டு முயற்சியாக ஒத்தைழத்து இரண்டு மூன்று மாதங்களுக்குள் முற்றாகஒழிக்கவேண்டும். மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் இதனைத் தங்களது தேசியக் கடமையாகக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் - என்று கேட்டுக் கொண்டார். (வ-7)

# பொதுபல சேனா இனவாதம் பேசுவது ஏற்புடையதல்ல

### *யாழ்.மாவட்ட தமிழ்-பௌத்த சங்கம் கண்டனம்*

யாழ்ப்பாணம், டிசெ.7

பௌத்த துறவியை தலைவராகக் கொண்ட பொதுபல சேனா இனவாதம் பேசுவது கண்டிக்கத் தக்கது என்று தெரிவித்துள்ள யாழ். மாவட்டத் தமிழ் பௌத்த சங்கம், பொதுபல சேனாவுக்கு பொதுஅறிவு கிடையாது என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட தமிழ்-பௌத்த சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

போர் முடிவுக்கு வந்த பின்னர் ஜனாதிபதி எமது நாட்டில் இன, மத வேறுபா டற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக தன்னை அர்ப்பணித்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் ஜனாதிபதிக்கும், நாட்டுக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் இனவாதக்கருத்தை தெரிவித்துள்ள பொது பல சேனாவின் கருத்துக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் இங்கு பல இனத்தவர்கள் வாழ்ந்தாலும், சிங்களவரும், தமிழரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு அவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் மொழி மற்றும் சகோதர மொழியையும், கலாசாரத்தையும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். முக்கியமாக பௌத்தர்களும், இந்துக்களும் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும் ஒன்றுபட்டு நின்றால் எமது நாட்டுக்குள் அந்நிய சக்திகள் தலையிடவே முடியாது.

பௌத்தத்தின் அடிப்படை தத்துவமே, தன்னை உணர்வதும் ஒழுக்கத்தை பேணுதலும் ஆகும். பௌத்த துறவியொருவரை தலைவராகக் கொண்ட பொதுபல சேனா இனவாதம் [illegible] [illegible] பத்திரிகையாளர் சந்திப்பில், பொதுபல சேனா அமைப்பின் தலைவர் இலங்கையில் மட்டுமே இரண்டு அரசகரும மொழிகள் இருக்கின்றன. வேறு எந்த நாட்டிலும் அத்தகைய நிலை இல்லை என்று கூறியிருந்தார். ஆனால் உலகில் 43 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இரண்டு அல்லது இரண்டுக்கும்மேற்பட்ட மொழிகள் அரச கரும மொழிகளாக உள்ளன.

ஒரு வேளை அவர் இனம், மதம் எல்லாவற்றையும் துறந்த துறவி என்பதால், அவர் பொது [illegible] அல்லது [illegible] புத்த கங்களைப் படிக்கவோ தவறியிருக்கலாம்.

ஒரு அமைப்பை நடத்தும் துறவிகள் இனிமேலாவது இன, மத விரோதக் கருத்துக்களைக் கூறாது கௌதம புத்தர் போன்று துறவிக்குரிய பண்புடன் செயற்படுமாறு தமிழ் - பௌத்த சங்கம் வேண்டுகோள்விடுக்கின்றது.

பொது பல சேனாவால் தெரிவிக்கப்பட்ட மதமாற்ற தடைச் சட்டம், பசு வதைச் சட்டம் போன்ற கோரிக்கைகளை நாமும் முழு மனதுடன் ஏற்றுக் கொள்வதுடன் இவற்றுக்காக பொது பல சேனாவுடன் இணைந்து போராடவும் தயாராக இருக்கின்றோம். ஆனால் எமது நாட்டு மக்களிடையே பேரினவாதத்தையும், இனவாதம், மத வாதம் ஏற்படுத்தும் வகையில் கருத் துக்களை வெளியிட வேண் டாம் என்று கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

இதேவேளை -போர் என்றால் அழிவுகள் ஏற்படத் தானே செய்யும் என்றும் இத னைத் தவிர்க்க முடியாதென் றும் தெரிவித்துள்ள யாழ். மாவட்ட தமிழ்- பௌத்த சங் கத் தலைவர் ரவிக்குமார், இலங்கை மீதான சர்வதேச விசாரணையை ஏற்க முடி யாதென் றும் தெரிவித்துள்ளார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயலுமானால் பதவி விலகுங்கள்: அதிருப்தியாளருக்கு 'கப்டன்' சவால்

திருவள்ளூர், டிசெ.7
தே.மு.தி.க. அதிருப்தி சட்டசபை உறுப்பினர்கள் தமது பதவிகளை விட்டு விலகுவதற்குத் தயாரா? என்று சவால் விட்டுள்ளார் அந்தக் கட்சியின் தலைவர் விஜயகாந்த்.
அதிருப்தி சட்டசபை உறுப்பினர்களை ஏன் இதுவரை கட்சியில் இருந்து நீக்கவில்லை என்று அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"இது உள்கட்சி விவகாரம். இருந்தாலும் கூறுகின்றேன். அதிருப்தி சட்டசபை உறுப்பினர்கள் விஜயகாந்த் முடிந்தால் எங்களை கட்சியிலிருந்து நீக்கட்டும் என்று சவால் விட்டுள்ளார்கள். அவர்களிடம் கூறுகின்றேன். அவர்கள் தங்களது பதவிகளில் இருந்து முதலில் விலகட்டும். அதன் பின்னர் அவர்களை கட்சியிலிருந்து நீக்குகிறேன். ஆனால் அவர்களுக்குப் பதவியே முக்கியம். இயலுமானால் விலகட்டும்" என்று தெரிவித்துள்ளார் விஜயகாந்த். (ற)

# மோடி சவாலானவரே

## *பிரதமர் மன்மோகன் சிங் கூறுகின்றார்*



புதுடில்லி, டிசெ.7
பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி காங்கிரஸ் கட்சிக்கு சவாலானவரே என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.
புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
"நரேந்திர மோடி காங்கிரஸ் கட்சிக்குச் சவாலானவரே. எதிர்க்கட்சியை காங்கிரஸ் ஒருபோதும் குறைத்து மதிப்பிடாது. பிரதமர் வேட்பாளராக மோடி நிறுத்தப்பட்டு இருப்பது காங்கிரஸ் கட்சிக்கு சவால் இல்லை என்று குறிப்பிட முடியாது. ஆனால் அதுகுறித்து காங்கிரஸ்கட்சிகவலைப்படவில்லை. நாடாளுமன்றத் தேர்தலை காங்கிரஸ் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும்" என்று தெரிவித்துள்ளார்.
இந்திய மத்திய அரசு தற்போது கொண்டுவரவுள்ள புதிய சட்ட மூலமான மதக்கலவரம் தடுப்புச் சட்டம் மற்றும் இந்தியாவின் பொருளாதார நிலைமை என்பவை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,
"சிறுபான்மையினரின் வாக்குகளை கவர்வதற்காக மதக் கலவரம் தடுப்பு சட்டம் கொண்டுவர முயற்சிக்கவில்லை. இந்தியா வளர்ச்சிப் பாதையில் பயணித்துக்கொண்டு இருப்பதால் தொழிற்துறையினர் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. நாட்டின் பொருளாதாரத்தை மேலும் உயர்த்த தனியார் முதலீட்டை அதிகப்படுத்த வேண்டும் . பொருளாதார தேக்க நிலைக்கு முந்தைய பொருளாதார கொள்கையின் தவறுகளே காரணம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## மண்டேலாவின் மறைவுக்கு ஜனாதிபதி, பிரதமர் இரங்கல்



புதுடில்லி, டிசெ.7
தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மறைவுக்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.
தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஜோகன்னெஸ்பேர்க்கில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு உயிரிழந்தார்.
அவரது மறைவு குறித்து இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,
"உலக சமாதானத்துக்காக மண்டேலா ஆற்றிய தொண்டு போற்றுதற்குரியது. மண்டேலா மனித நேயத்தின் அடையாளமாகத் திகழ்ந்தார். அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று. தென்னாபிரிக்க நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் கூறியுள்ளார்.
இதுகுறித்து பிரதமர் மன்மோகன்சிங் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,
"மண்டேலா உலகின் சக்தி வாய்ந்த ஒரு மனிதர், உண்மையான காந்தியவாதி. அவரது இழப்பு தென்னாபிரிக்காவுக்கு மட்டும் அல்ல, இந்தியாவுக்கும் பெரும் இழப்பாகும். மண்டேலாவின் வாழ்க்கை இளம் தலைமுறையினருக்கு உத்வேகம் தருவதாக இருக்கும். அவரின் ஆன்மா சாந்தி அடைய நாம் அனைவரும் பிரார்த்திப்போம்" எனக் கூறியுள்ளார். (ற)

## டிசெ. 10 முதல் மீண்டும் உண்ணாவிரதம் *ஹசாரே*



புதுடில்லி, டிசெ.7
இந்திய நாடாளுமன்றத்தில் லோக்பால் சட்டத்தை நிறைவேற்றக் கோரி மகாராஷ்டிரத்தின் ராலேகான் சித்தி கிராமத்தில் டிசெம்பர் 10ஆம் திகதி முதல் மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரதத்தைத் தொடங்கவுள்ளார் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே.
இதுகுறித்து அவர் கூறுகையில்,
"லோக்பால் சட்டத்தை நிறைவேற்றுவதாகக் கூறி இரண்டு ஆண்டுகள் கடந்தும் பயன் இல்லை. மத்திய அரசு எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அதைக் குறிப்பிட்டு நான் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி டிசெம்பர் 10ஆம் திகதி முதல் மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ள உள்ளேன். 'ஜந்தந்தர மோர்ச்சா' என்ற புதிய அமைப்பு உண்ணாவிரதத்தை நடத்தும். அந்த அமைப்பு அரசியல் சார்பற்றது. எதிர்காலத்தில் அரசியல் கட்சியை உருவாக்காது. எந்தவொரு அரசியல் கட்சிக்கு ஆதரவு அளிக்காது" என்று தெரிவித்தார்.
லோக்பால் போராட்டத்துக்கு ஆதரவு திரட்ட 6 மாநிலங்களுக்கு பயணம் செய்துள்ள 75 வயதான ஹசாரே, இந்த முறை தனது சொந்த கிராமமான ராலேகான் சித்தியில் உண்ணாவிரதத்தைத் தொடங்குகிறார்.
2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் புதுடில்லியில் ராம்லீலா மைதானத்தில் ஹசாரே காலவரையற்ற உண்ணாவிரதம் நடத்தியருந்தார். அப்போது அவருக்கு நாடு முழுவதிலும் இருந்து ஆதரவு பெருகியது. மத்திய அரசு அவரிடம் பேச்சு நடத்தி லோக்பால் மசோதாவை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளித்தது. அதையடுத்து 16 நாள்களாக தொடர்ந்த உண்ணாவிரதத்தை ஹசாரே முடித்துக் கொண்டார். அதன்பின் மக்களவையில் நிறைவேற்றப்பட்ட லோக்பால் சட்டத்திருத்தம் மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை. அதை உடனடியாக நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தியே ஹசாரே மீண்டும் உண்ணாவிரதத்தைத் ஆரம்பிக்க உள்ளார். (ற)

## பா.ஜ.கவுடன் இணைகிறார் எடியூரப்பா



பெங்களூர், டிசெ.7
கர்நாடக ஜனதா கட்சித் தலைவர் எடியூரப்பாவை பாரதிய ஜனதா கட்சியில் மீண்டும் சேரும்படி முறைப்படி அழைப்பு விடுக்கப்படவுள்ளது என்று அந்தக் கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
அது தொடர்பாக மேலிடத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக பா.ஜ.க. பொதுச்செயலர் அனந்த் குமார், கர்நாடக பா.ஜ.க. தலைவர் பிரஹலாத் ஜோஷி, மூத்த தலைவர் ஈஸ்வரப்பா, தேசிய செயற்குழு உறுப்பினர் அரவிந்த் லிம்பாவளி ஆகியோர் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
அதில் எடியூரப்பாவை மீண்டும் பாஜகவில் சேர அழைப்பு விடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.
அதேவேளை எடியூரப்பாவும் பா.ஜ.க.வுடன் சேர விரும்புவதுடன் கட்சி மேலிடம் நேரடியாக அழைக்க வேண்டுமென அவர் விரும்புகின்றார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## ஜப்பான் உதவியுடன் தொழில் நிறுவனங்கள்

*சுதர்சன நாச்சியப்பன் கூறுகின்றார்*

சென்னை, டிசெ.7
தமிழகத்தில் ஜப்பான் உதவியுடன் பெரும் அளவில் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்படும் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் .
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"தமிழகத்தில் ஜப்பான் நாட்டு துணையுடன் பெரிய அளவில் தொழில்நிறுவனங்கள் தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளன. அது தொடர்பாக சென்னை வந்துள்ள ஜப்பான் நாட்டு மன் னர் மற்றும் அந்நாட்டு உயர் அதிகாரிகளை சந்தித்து பேசினேன். அதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. இந்திய மீனவர்கள் பிரச்சினையில் நிரந்தர தீர்வு காண இலங்கை-இந்திய மீனவர்கள் சந்திக்கும் பேச்சு இந்த மாத இறுதிக்குள் நடக்கும்.
மீனவர்கள் பிரச்சினையில் உண்மைநிலையை கண்டறிய 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு உள்ளது. அவர்கள் விசாரணைநடத்திஅறிக்கையை இரு நாட்டு அரசுகளுக்கும் தருவார்கள். அதில்உள்ளபிரச்சினைகளை இருநாடுகளும் பரிசீலித்து நிரந்தர தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளார். (ற)

## அமெரிக்காவைப் பின்தள்ளவுள்ள இந்தியா

புதுடில்லி, டிசெ.7
இந்தியாவில் அண்மைக் காலங்களில் இணையத்தளப் பயன்பாடு அதிகரித்து வருகின்றது. இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் ஜூன் மாதக் காலாண்டு அறிக்கையின்படி 198.30 மில்லியன் மக்கள் இணையத்தளங்களை உபயோகிப்பவர்களாக இருக்கின்றனர்.
இது முந்தைய காலாண்டை விட 20 சதவிகித அதிகரிப்பாகும். இதே விகிதத்தில் வளர்ச்சி நிலைமை இருந்தால் 260 மில்லியன் பயன்படுத்துபவர்கள் கொண்ட அமெரிக்காவை இந்தியா விரைவில் முந்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் 68 மில்லியன் என்ற இந்த எண்ணிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் 72 மில்லியனாக மாறும் வாய்ப்பிருப்பதாக இந்திய இணையத் தளம் மற்றும் கைத்தொலைபேசிச் சங்கம் (ஐஏஎம்ஏஐ) தெரிவித்துள்ளது.
கைத்தொலைபேசி மூலம் இணைய தளத்தைப் பயன்படுத் துபவர்களே இந் தியாவில் அதிக மிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
90 சதவிகிதம் அலுவலக வேலைக்காக கைத்தொலைபேசியில் இணையத் தளங்களைப் பயன்படுத்தும் அமெரிக்க மக்களைப் போலில்லாமல் இந்தியாவில் சமூக மற்றும் வலைத்தொடர்புடைய இணையத்தளப்பயன்பாடுகளே அதிகம் காணப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (ற)

15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
23.02.1953

இறப்பு
07.12.1998

திருமதி கல்யாணி
(பரிமளம்) ஜெயம்

அன்னையே அன்பின் வடிவமே!
அரவணைப்பின் தெய்வமே!
கண்ணுக்குள் மணியாகி
பாசமதில் இதயமாகி
மண்ணில் வாழ
மாதவம் பெற்றிட்ட தாயே
ஊரறிய கருவாகி உருவாகி
உதிரம் தாங்கியவளே - நாம்
உடலாக உயிராக
உதிரம் தந்தவளே
கண்ணின் மணிபோல் - கருவில்
காத்தவளே - நாம்
பிஞ்சு மழலையாய் அவதரிக்க - நின்
மடி தந்தவளே - இன்று
உங்கள் ஐந்து பிஞ்சுகளும் - உங்கள்
மடி தேடி ஆங்காங்கே நின்று
கண்ணீரில் புலம்புகின்றோம்.
மாதவம் பெற்றிட்ட தாயே -
தண்மதியாய்
தருநிழல் விருட்சமாகி உன்
செல்வங்கள் - தான்
என்று தனிமையின்றி - பாராமல்
பசித்தவருக்குப் பசியாற்றி
எல்லோரும் என்மக்களே
என்று அரவணைக்கும்-உன்
அருமை எங்கே அம்மா! இனி!

எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்றும் உங்கள் பிரிவின் துயரில் வாழும்

ம. ஜெயம்,
[illegible]ங்கேணி, பளை.
T.P: 077 204 8546

தாய்,
கணவர், பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(33030)(10.63)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைந்தார் மண்டேலா

ஜொகன்னர்ஸ்பேர்க், டிசெ.7
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஜோகன்னெஸ்பர்க்கில் அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு உயிரிழந்தார். இந்தத் தகவலை அந்த நாட்டின் தற் போதைய ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா நேற்று உறுதிப்படுத்தினார்.
95 வயதான நெல்சன் மண்டேலா கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவு காரணமாக தொடர் சிகிச்சை பெற்று வந்தார். சில நாள்களுக்கு முன்னர் அவரது மகள் மகஸிவே



மண்டேலா, "நெல்சன் மண்டேலா அவரது மரணப் படுக்கையில் மிகவும் தைரியமான ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்" என்று கூறியிருந்தார். இந்தநிலையில் அவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு உயிரிழந்தார் என்று அந்த நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.
தென்னாபிரிக்காவின் வீதிகள் எங்கும் மக்கள் கூட்டமாகக் காணப்படுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமது தலைவருக்காக அந்தநாட்டு மக்கள் கண்ணீர் விட்டழுது அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.
மண்டேலாவின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். உலக நாடுகள் எங்கும் மக்கள் நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (ற)



*நெல்சன் மண்டேலாவின் இல்லத்துக்கு வெளியே பெருமளவான மக்கள் கூடியுள்ளனர். அவரது மறைவுச் செய்தி கேட்டு கண்ணீர் விட்டு அழும் பெண்ணொருவர்.*

தென்னாபிரிக்காவில் மட்டுமல்லாமல் உலக அளவில் அனைவராலும் விரும்பப்படும் ஒரு நபராக விளங்கியவர் நெல்சன் மண்டேலா. நெல்சன் மண்டேலாவின் இயற்பெயர் நெல்சன் ரோபிசலா மண்டேலா என்பதாகும். 1918ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி பழங்குடி இனத் தலைவருக்கு மகனாகப் பிறந்த நெல்சன் மண்டேலா, இனவெறி ஆட்சியில் ஊறிக் கிடந்த தென்னாபிரிக்காவை மக்களாட்சியின் ஒளிமயமான பாதைக்குக் கொண்டு சென்ற மகத்தான தலைவர். குத்துச் சண்டையிலும், போர்க் கலையிலும் வல்லவராகத் திகழ்ந்த மண்டேலாவுக்கு அவரது ஆசிரியர் சூட்டிய பெயரே நெல்சன் என்பது. தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய தலைவர்களில் முக்கியமானவராக விளங்கினார் மண்டேலா. அதனால் 1962ஆம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். நிறவெறி அரசு 27 ஆண்டு காலம் மிகச் சிறிய அறையில் அவரை சிறை வைத்து தனது நிறவெறியை வெளிக்காட்டியது. ராபன் தீவுப் பகுதியில் அமைந்த திறந்த வெளி சிறிய சிறை அறையில் தனது பெரும்பாலான வாழ்நாளைக் கழித்த மண்டேலா, சிறைக் காலத்தில் அனுபவித்த கொடுமைகள் சொல்லில் அடங்காதவை. எனினும், அவரது போராட்ட உணர்வு மட்டும் சோர்ந்து போகவில்லை. உலக வரலாற்றிலேயே மண்டேலாவைப் போல இத்தனை காலம் சிறையில் கழித்த தலைவர் யாரும் இல்லை எனலாம். அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்படும்போது அவருக்கு வயது 71. 1990ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலா விடுதலையா னதை உலகமே வரவேற்றது. தென்னாபிரிக்காவில் குடியரசு மலரவும் மண்டேலா காரணமானார். தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாக 1994ஆம் ஆண்டு பொறுப் பேற்றுக் கொண்டார் நெல்சன் மண்டேலா. அவரது பதவிக் காலம் முடிந்ததும் 2ஆவது முறையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட மறுத்துவிட்டார். 2008ஆம் ஆண்டு பொது வாழ்க்கையில் இருந்து விலகுவதாக அறிவித்தார் மண்டேலா. அப்போதும் ஓயாமல் பல்வேறு நலப் பணிகளுக்காக மக்கள் சேவையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார் மண்டேலா. (ற)

## தொடர்கிறது பதற்றம்

### சீனாவை எச்சரிக்கிறது அமெரிக்கா

நியூயோர்க், டிசெ.6
கிழக்குச் சீனக்கடல் பகுதியை வான் பாதுகாப்பு மண்டலமாக சீனா அறிவித்திருப்பதை அங்கீகரிக்க மாட்டோம் என்று அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
சீனா சென்றுள்ள ஜோ பிடன், ஜீ ஜின்பிங்கை நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தித்துப் பேசினார். அதன் போதே அமெரிக்காவின் நிராகரிப்பு விடயத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து பின்னர் அமெரிக்கா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,
"சீனாவின் அறிவிப்பால் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க அந்த நாடு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை துணை ஜனாதிபதி ஜோ பிடன் வலியுறுத்தியுள்ளார். இந்த விவகாரத்தில் சீனாவின் நிலைப்பாடு மற்றும் கிழக்கு சீனக் கடல் பகுதியில் நிலவும் எல்லைத் தகராறுகள் குறித்து ஜோ பிடன் விரிவாகச் சீனத் தரப்புடன் ஆராய்ந்தார்" என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.
கிழக்கு சீனக் கடல் பகுதியில் உள்ள தீவுகள் தொடர்பாக சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. அந்தக் கடற் பகுதியை தனது வான் பாதுகாப்பு மண்டலமாக சீனா தன்னிச்சையாக அறிவித்ததால், அந்நாட்டுக்கும் ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளுக்கும் இடையே தற்போது பதற்றம் நிலவி வருகின்றது. (ற)

## ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்தும் சூறாவளி

லண்டன், டிசெ.7
ஐரோப்பாக் கண்டத்தில் பிரிட்டனில் உள்ள ஸ்கொட்லாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் கடும் சூறாவளி தாக்கியுள்ளது. அதில் 4 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்துள்ளனர். மணிக்கு 228 கி.மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
சூறாவளிக்காற்றுடன் பலத்த மழையும் பெய்கிறது. அதனால் வீதியெங்கும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மக்கள் வெளியே செல்ல முடியாமல் முடங்கி கிடக்கின்றனர். அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
கடும் சூறாவளி காரணமாக பெரும்பாலான விமானப் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.
பல நாடுகளின் ரயில் போக்குவரத்துகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் மிக நீளமான பாலம் மூடப்பட்டுள்ளது. இது சுவீடனையும், டென்மார்க்கையும் இணைக்கக் கூடியது. ஐரோப்பாவில் 60 ஆண்டு கால வரலாற்றில் முன்னெப்போதும் இது போன்ற சூறாவளி தாக்கியது இல்லை என்று கூறப்படுகின்றது. (ற)

## இஸ்ரேல் - பலஸ்தீன அமைதிக்கு புதிய திட்டம்

### இருநாடுகளுக்கும் ஜோன் கெரி பயணம்

நியூயோர்க், டிசெ.7
பலஸ்தீன -இஸ்ரேல் நாடுகளுக்கிடையேயான அமைதி பேச்சுக்களில் தற்போது தேக்க நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் ஹெரி நேற்று இரு நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டார்.
அங்கு இருநாடுகளின் தலைவர்களையும் சந்தித்த அவர் அமைதி பேச்சுத் தொடர்பாக புதிய திட்டத்தை முன்மொழிந்தார். பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையேயான உரிமை பிரதேசப் பரிமாற்றம், இரு நாட்டுத் தலைநகர்களின் ஏற்பாடு போன்றவை அந்தப் புதிய திட்டத்தில் அடங்கியுள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

## அணுஆயுத திட்டங்களை வலுப்படுத்தும் இந்தியா

நியூயோர்க், டிசெ.7
சக்தி வாய்ந்த அணு ஆயுதங்களை தயாரிக்கும் வகையில், அணு ஆயுதத் திட்டங்களை இந்தியா விரிவுபடுத்தி வருவதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.
அமெரிக்காவில் உள்ள அறிவியல் மற்றும் சர்வதேச பாதுகாப்பு நிறுவனத்தை (ஐ.எஸ்.ஐ.எஸ்.) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் டேவிட் ஆல்பிரைட் மற்றும் கெல்லிஹர் வெர்ஜாண்டினி ஆகியோர் இந்தியா தொடர்பாக ஆய்வு நடத்தி சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளனர்.
கர்நாடக மாநிலம் மைசூர் அருகே யுரேனியம் செறிவூட்டும் மையத்தில் நடைபெற்று வரும் இந்தியாவின் 2ஆவது எரிவாயு பிரித்தெடுப்பு மையப் பணியை செயற்கைக்கோள் மூலம் படம் எடுத்து அதற்கு ஆதாரமாக அவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இதுகுறித்து அமெரிக்க அரசு சார்பாக எதுவித கருத்துக்களும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## உளவு பார்ப்பதை அனுமதிக்க முடியாது

### *அமெ. முன்னாள் ஜானாதிபதி கிளிங்ரன் கூறுகின்றார்*

வொஷிங்டன், டிசெ.7
உலகத் தலைவர்களின் தொலைபேசி உரையாடல்களை அமெரிக்கா ஒட்டு கேட்ட நடவடிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிங்ரன்.
அமெரிக்காவின் தேசிய உளவு நிறுவனமான என்.எஸ்.ஏ. உலக தலைவர்களின் பேச்சை ஒட்டுக் கேட்டது என்ற விடயத்தை அதன் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன் வெளிப்படுத்தினார். அதையடுத்து அமெரிக்காவின் அந்த நடவடிக்கைக்கு பல்வேறு நாட்டு தலைவர்களும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பில் கிளிங்ரன்,
"என்.எஸ்.ஏ. நடவடிக்கை முழுமையாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. உலக தலைவர்களின் பேச்சுகளை ஒட்டுக் கேட்பது தொடர்பாக வெளிப்படையான, பாதுகாப் [illegible] [illegible] ஜேர்மனியின் பிரதமர் ஏஞ்சலா, பிரேஸில் ஜனாதிபதி தில்மா ரவுசெப் ஆகியோர் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை கண்டித்துள்ளனர்.
நாம் யாருடைய பேச்சை ஒட்டு கேட்கிறோம் என்பதைப் பொறுத்து இந்த விவகாரத்தின் தன்மை அடங்கியுள்ளது. நட்பு நாடுகளே நமக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்குவது போல் நாம் கருதினால், நாம் அதை செய்யலாம். ஆனால் இதை பற்றி என்னால் உறுதியாக கூற முடியாது. இன்றைய நடவடிக்கைகளை பார்க்கும்போது, அரசுக்கு அதில் போதிய திறமை [illegible] எண்ண [illegible]" என்று தெரிவித்துள்ளார். (ற)

## உக்கிரமடைகின்றது உக்ரைன் போராட்டம்

### *முன்னாள் ஜனாதிபதிகளும் குதித்தனர் களத்தில்*

லண்டன், டிசெ.7
உக்ரைனில் நடத்தப்பட்டு வரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குத் தாமும் ஆதரவு வழங்குவதாக அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதிகள் மூவர் அறிவித்துள்ளனர். சமாதானமான, ஒன்றிணைந்த போராட்டங்களுக்கு தமது முழு ஆதரவையும் வழங்கவுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.
ஐரோப்பிய ஒன்றியத்துடனான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை என்று அறிவித்திருக்கும் உக்ரைன் அரசின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே பெருமெடுப்பிலான மக்கள் ஆர்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசால் முடக்கப்படும் இந்த ஆர்ப்பாட்டங்கள் மேலும் வலுப்பெறுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள அந்நாட்டின் சுதந்திர சதுக்க பகுதிக்கு ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார். அதேவேளை, உக்ரைனில் அரச எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் முடக்கப்படுகின்றமைக்கு நேட்டோ கண்டனம் வெளியிட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண சபை 'பட்ஜட்' நிறைவேற்றம்

மட்டக்களப்பு, டிசெ.7

கிழக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம், மூன்று மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 17 வாக்குகளும், எதிராக 14 வாக்குகளும் அளிக்கப் பட்டன. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6.20 மணிக்கு வரவு - செலவுத் திட்டம் இறுதி வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஐ.தே.கட்சியினரும் எதிர்த்து வாக்களித்திருந்தனர். கல்வி அமைச்சரின் கீழ்வரும் ஐந்து துறைகளுக்கான விவாதங்களில் எதிர்த்தரப்பில் இருந்த தமிழ் கூட்டமைப்பினர் பங்கு பற்றவில்லை. காணி மற்றும் கல்வி போன்ற முக்கிய துறைகள் இதில் உள்ளடக்கப்பட்டன. நேரம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினையால் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருந்தனர். ஏனைய துறைகளுக்கான விவாதங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களினால் சமர்ப்பிக்கப்பட்டன.

சுகாதார, சுதேச வைத்தியத் துறை, விளையாட்டு, தகவல் தொழில்நுட்ப கல்வி அமைச்சுக்கான விவாதங்களும நாளாந்த வாக்கெடுப்பும் நேற்று முன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-40)



கிழக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சால் 16 விவசாய போதனாசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை திருகோணமலை வரோதய நகர் விவசாய அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் விவசாய அமைச்சர் நசீர் அகமட் கலந்துகொண்டு நியமனக் கடிதத்தை வழங்கினார்.

## இரு தரப்பு உடன்படிக்கை ஜனவரியில் கைச்சாத்து

கொழும்பு,டிசெ.7

சவூதி அரேபியாவுக்குச் செல்லும் இலங்கைப் பணிப் பெண்கள் தொடர்பில் அந்தநாட்டுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் இருதரப்பு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட வுள்ளது.

வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் பெறவுள்ள இந்த ஒப்பந்தம் மூலம் சவூதிக்கு செல்லும் எமது நாட்டு பணிப் பெண்களின் 80 வீதமான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரெரா தெரிவித்தார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வெளிநாடுகளில் 18 லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் தொழில்புரிகின்றனர். இவர்களில் 90 வீதமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றனர். எனினும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக தற்போது பெண்களை விட ஆண்களே அதிகம் செல்கின்றனர் என்று அவர் கூறினார். இந்தநிலையில் இலங்கைக்கும் சவூதிக்கும் இடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு உடன்படிக்கை ஜனவரியில் கைசாத்திடப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த உடன்படிக்கையில் பல விடயங்கள் கைச்சாத்திடப்பட வுள்ளதால் 80 வீதமான பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இராணுவத் தலையீட்டால் நிர்க்கதி நிலையில் மக்கள்

### வீதி அகலப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்த வேண்டாம் என்கிறார் வாசு

கொழும்பு,டிசெ.7

"நெடுஞ்சாலைகளை அகலப்ப டுத்தும் பணிகளில் சீருடை தரித்த இராணுவத்தினரை ஈடுபடுத்த வேண்டாம்" என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்றுமுன்தினம் சபையில் கோரிக்கை விடுத்தார்.

சிவில் நிர்வாகத்தில் இடம்பெறும் இராணுவத் தலையீட்டால் மக்கள் நிர்க்கதி நிலையை அடைகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை, சிவில் விமானசேவைகள், வலுசக்தி, பெற்றோலியக் கைத்தொழில்கள் முதலான அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிகளில் சீருடை தரித்த இரா ணுவத்தினரை ஈடுபடுத்தவேண் டாம். இந்த நடவடிக்கைகள் கட்டளை இடுதலினூடாக இடம்பெறக்கூடாது. சிவில் நிர்வாகம் மூலமே இது இடம்பெற வேண்டும்.

இந்த அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவதால் பொதுமக்கள் தமது அபிப்பிராயங்களைக் கூறமுடியாதுள்ளனர். சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டால்தான் அவர்கள் தமது அபிப்பிராயங்களை முன்வைக்க முடியும். இராணுவத் தலையீட்டால் மக்கள் நிர்க்கதி நிலையை அடைகின்றனர். எனவே, நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிகளில் சீருடை தரித்த இராணுவத்தினரை ஈடுபடுத்த வேண் டாம்.

ஒன்று முதல் 60 வரையான மின் அலகுகளைப் பயன்படுத்தும் வறிய குடும்பங்களுக்கு மின்சார சபையின் கணிப்பீட்டு முறையால் அதிகமான கட்டணம் அறவிடப்பட்டு, அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளதால் எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் எமக்குப் பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், ஈரானி லிருந்து இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெயை மட்டுமே எமது நாட்டில் சுத்திகரிப்புச் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்நிலையில், ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யமுடியாத காரணத்தால் வேறு நாடுகளிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை இறக்குமதி செய்யவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக நாம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட நேர்ந்துள்ளது. எனவே, இந்த மேலதிக செலவுகளை அமெரிக்காவே செலுத்த வேண்டும். ஏனெனில், ஈரானுக்குப் பொருளாதாரத் தடை விதிப்பதில் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளே பாதிப்படைகின்றன.

ஒன்று முதல் 60 வரை மின் சாரத்தைப் பயன்படுத்தும் மின் பாவ னையாளர்களின் மின் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என ஜனாதிபதி கூறினார். ஆனால், மின் சார சபையின் கணிப்பீட்டு முறையில் வறிய மக்களிடமிருந்து அதிகமான கட்டணங்கள் அறவிடப்படுகின் றன. இதனால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் நான் இதைக் கூறுகின்றேன். எனவே, குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இந்த மின்சாரக் கட்டண விவகாரத்தில் உரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் -என்றார். (ச-சி)



## மருந்துகளில் மோசடி செய்த இருவர் கைது

கொழும்பு,டிசெ.7

காலாவதியான மருந்துகள் அடங்கிய பெட்டிகள் மீது புதிய லேபல்களை ஒட்டிக் கொண்டிருந்த இருவரை வலன குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

நாரஹேன்பிட்டி பகுதியில் வைத்தே இவர்கள் இருவரையும் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில் நுட்பப் பிரிவு, விநியோகப் பிரிவு மற்றும் வலன குற்றத் தடுப்புப் பிரிவும் சேர்ந்து ஒரு தனியார் மருந்து இறக்குமதி கம்பனியில் நடத்திய சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தங்கத்தின் விலை வீழ்ச்சி

கொழும்பு,டிசெ.7

சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்று இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

தங்கத்துக்கு விதிக்கப்பட்டிருந்த வரி இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டதையடுத்து, விலையும் குறைவடைந்துள்ளது.

வெளிநாட்டுச் சந்தைகளிலும் தங்கத்தின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் கொள்வனவின் போது தரமான தங்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச)


**காணி விற்பனைக்கு** சாவகச்சேரி, பருத்தித்துறை வீதியை முகப்பாகக் கொண்ட கெருடாவிலில் 5 பரப்பு சதுரமான வெற்றுக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: யோகா-077 160 1115, மகா -2367436/071 410 3461

(சி/14149)(4.6.3)



**தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு**

எம்மிடம் நல்லினத் தென்னம் நாற்றுக்களும், குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய ஏனைய நல்லின நாற்றுக்களும் விற்பனைக்குள்ளன.

தொடர்பு: 077 659 2044



**வேலை வாய்ப்பு**

வவுனியா தனியார் வர்த்தக நிறுவனத்தில் கணக்குப் பிரிவிலும், விற்பனைப் பிரிவிலும் கடமையாற்ற உயர் தரத்தில் கணக்கீடு, வணிகக் கல்வி கற்று பரீட்சைக்கு தோற்றிய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும். தேவைப்படின் தங்குமிடம் தரப்படும்.

தொடர்பு: D.H.A.D.சில்வா &கோ

64,பசார் வீதி, வவுனியா



**மணமகள் தேவை**

- 81இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 27பாவம் உடைய டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 80இல் பிறந்த 12இல் செவ்வாய் 30பாவம் உடைய விவாகரத்துப் பெற்ற டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 81இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 11 பாவம் உடைய டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை
- 83இல் பிறந்த 4இல் சூரியனும், செவ்வாயும் 34 பாவம் உடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 77இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 23 பாவம் உடைய BSC ஆசிரியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 81இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 34 பாவம் உடைய ஆசிரிய ஆலோசகருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 81இல் பிறந்த 10இல் சூரியனும் செவ்வாயும், 21½ பாவம் உடைய BSC,MSC ஆசிரியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:

[illegible]

0776070862



**கண்ணீர் அஞ்சலி**



வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சியின் கணக்குக் கிளையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் **இராசதுரை யோகேஸ்வரன்** அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சிவபாக்கியம் இராசதுரை**

அவர்கள் 05.12.2013 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலயக்கல்விப் பணிமனை, கிளிநொச்சி.

(40915) (10.6.3)



**அன்பொளி கல்வியகம்**

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, வைத்திய வீதி, யாழ்ப்பாணம்

**2014 இல் தரம் 2,3**

*மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.*

காலம்: இன்று (07.12.2013) சனிக்கிழமை

சின்னவிழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

தரம் 4,5 வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இயக்குநர்.

(சி/14290)(4.6.3)



**BASIC ENGLISH & SINHALA PERSONAL CLASSES**

அடிப்படையிலிருந்து கிரமமான பாடங்கள், பயிற்சிகள் ஊடாக இரு மொழிகளும் G.C.E.(O/L) வரை கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை விலகியோர், அரச மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எவ் வயதினரும் எத் திகதியிலும் இணைந்து கொள்ளலாம்

நேரம்: வெள்ளி தவிர மு.ப.8.45 - 10.30, பி.ப.02.45 - 05.30

**மொழிபெயர்ப்பு வேலைகள்**

கடிதங்கள், ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், இணையத்தளக் குறிப்புக்கள் உட்பட்ட பிரத்தியேக மொழிபெயர்ப்பு வேலைகள் மூன்று மொழிகளிலும் செய்து தரப்படும்.

T.SAGATHEVAN, B.A.London.
Trilingual Tutor / Translator (PVT)
46, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P: 021-2223520 / 077-8210178


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி நகரில் வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பன தற்போது பெய்யும் மழையினால் வெள்ளக்காடாகியுள்ளன.

# வெள்ளத்தில் கிளிநொச்சி நகர்

அக்கராயன், டிசெ.7
கிளிநொச்சி நகரில் தற்போது பெய்யும் மழை காரணமாக வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பவற்றை சூழ வெள்ளம் நிரம்பியுள்ளது.
கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதி, ரயில் பாதை என்பன அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அண்டி உள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பன தற்போது பெய்யும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

"-"
**நகரப் பகுதியில் உள்ள கால்வாய்கள் சீராகப் புனரமைக்கப்படாததால் வெள்ளம் வழிந்தோட முடியாது தடைப்பட்டுள்ளது.**

நகரப் பகுதியில் உள்ள கால்வாய்கள் சீராகப் புனரமைக்கப்படாததால் வெள்ளம் வழிந்தோட முடியாது தடைப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது.
இங்கு புதிதாக கட்டடங்கள், வீதிகள் என்பன அமைக்கப்பட்ட நிலையில் வெள்ளம் வழிந்தோட சீரான வாய்க் கால்கள் அமைக்கப்படாமையால் இந்த அவல நிலை தோன்றியுள்ளது.
எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வெள்ளம் வழிந் தோடுவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-எ-18)

## கிளிநொச்சி புடைவைக் கடையில் தென்பகுதிப் பெண்கள் கைவரிசை

கிளிநொச்சி, டிசெ.7
கிளிநொச்சி நகர் ஏ-9 வீதியிலுள்ள புடைவைக் கடையொன்றில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான துணிகள் திருடப்பட்டுள்ளன.
கிளிநொச்சி நகரிலுள்ள கந்தசாமி ஆலயத்துக்கு முன்பாகவுள்ள புடைவைக் கடைக்கு கடந்த செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் தென்பகுதியைச் சேர்ந்த மூன்று பெண்கள் வந்துள்ளனர்.
அப்போது கடையில் ஒருவர் மட்டுமே நின்றுள்ளார். அந்தப் பெண்களில் ஒருவர் கடைக்குள் நுழைந்து புடைவை வகைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளை கடையில் நின்றவரும் புடவை களைத் தேர்ந்தெடுக்க அப்பெண்ணுக்கு உதவிக் கொண்டிருந்தார்.
ஏனைய இரு பெண்களும் கடைக்கு முன்புறம் வந்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த துணி வகைகளைத் தாம் வந்த ஓட்டோவில் ஏற்றியுள்ளனர்.
இதையடுத்து உள்ளே நின்ற பெண்ணும் கடைக்கு வெளியே பாய்ந்து வந்து தயார் நிலையில் நின்ற ஓட்டோவில் ஏறிச் சென்றுள்ளார். வெளியில் நின்றவர்கள் இதை அவதானித்துக் கூறியதன் பின்னரே கடையில் பொறுப்பாக நின்றவருக்கு உண்மை தெரிய வந்தது.
உடனடியாக அவர் ஓட்டோ சென்ற வழியில் தேடுதல் நடத்திய போதிலும் அப் பெண்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. (க-426)

## மயக்க மருந்து தெளித்து பணம், நகை அபகரிப்பு

*முல்லைத்தீவு, டிசெ.7*
*வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது மயக்க மருந்து தெளிக்கப்பட்டு அவர்களை மயங்கவைத்து பெரும்தொகையான பணம், நகைகள் என்பன அபகரிக்கப்பட்டுள்ளன.*
*மேற்படி சம்பவம் முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.*
*கடந்த 3 ஆம் திகதி இரவு வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கு உறங்கிக்கொண்டிருந்த கணவர், மனைவி, குழந்தை ஆகியோர் மீது மயக்க மருந்தைத் தெளித்து விட்டு பெரும் தொகை யான நகை, பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.*
*மேற்படி திருட்டுச் சம்பவம் முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த விடயம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-421)*

### தண்டவாளத்தை கடப்பதில் பெரும் இடர்

அக்கராயன், டிசெ.7
கிளிநொச்சி பொன்னகர் கிராம மக்கள் ரயில் தண்டவாளத்தை கடப்பதில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
சுமார் 70 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் வசித்து வருகின்றன.
திருமுறிகண்டியிலிருந்து பரந்தன் வரையான பகுதியில் இந்தக் குடும்பங்கள் ரயில் தண்டவாளத்தை கடப்பதில் இடர்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது. (க-18)

## கிளிநொச்சி முழங்காவில் வீதி புனரமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன், டிசெ.7
கிளிநொச்சி நகரில் இருந்து முழங்காவில் வரையான 50 கிலோமீற்றர் நீளமான வீதியைப் புனரமைக்குமாறு கிளிநொச்சி அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
தற்போது கிளிநொச்சி கனகபுரம் வீதியின் புனரமைப்புப் பணிகள் புதுமுறிப்புடனும், திருமுறிகண்டி வீதியின் புனரமைப்பு அக்கராயனுடனும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் முழங்காவில் மருத்துவமனையின் அம்புலன்ஸ் வாகனம் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.
30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.
எனவே அரச அதிபர் இந்த வீதியைப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மேற்குப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள் விசேட நிகழ்வுகள் நாளை கிளிநொச்சியில்

கிளிநொச்சி, டிசெ.7
பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு வாரம் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 10 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.
இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பால், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்பாட்டுக் குழுவினர் நாளை 8 ஆம் திகதி விசேட நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளனர்.
காலை 9 மணி முதல் மு.ப.10 மணி வரை முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பாலியல் வன்புணர்வு சார்ந்த விடயங்களைக் காட்சிப்படுத்திவரும் வரும் ஊர்தி பரந்தன் குடியிருப்பில் வரவேற்கப்படும்.

"-"
**பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு வாரம் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 10 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.**

பின்னர் மு.ப. 10 மணியிலிருந்து 10.30 மணி வரை கரடிப்போக்கில் வீதி நாடகம் இடம்பெறும்.
மு.ப. 10.30 மணியளவில் கிளிநொச்சிச் செயலகம் வரை பேரணியொன்று இடம்பெற்று அங்கு அரச அதிபரிடம் மனுவொன்று கையளிக்கப்படும்.
மு.ப. 11.45 மணியில் இருந்து 12.15 வரை கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், உள மருத்துவர் மா.ஜெயராசா, சட்டத்தரணி திருமதி சதீஸ்குமார் விஜயராணி ஆகியோர் கருத்துரைகளை வழங்குவார்கள். 12.15 மணியிலிருந்து நண்பகல் 12.45 மணி வரை வீதி நாடகம் இடம் பெறும்.
பி.ப. 2.30 மணியிலிருந்து 3.30 மணி வரை ஊர்தி சாந்தபுரத்தை வலம் வருவதுடன் வீதி நாடகம் உட்பட வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
பி.ப. 3.30 மணியிலிருந்து 4.30 மணி வரை ஊர்தி கிருஷ்ணபுரத்தை வலம் வருவதுடன் வீதி நாடகம் உட்பட ஏனைய நிகழ்வுகளும் இடம்பெறும்.
இந்த நிகழ்வுகளில் மக்களைக் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட பால், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க-18)

"நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்..."
II தீமோத்தேயு 4:7

**45ஆம் வருடம் — 40ஆம் வருடம்**



**முருகுப்பிள்ளை ஜேம்ஸ் நாகலிங்கம் | றோஸ் சற்குணம் நாகலிங்கம்**

| | | |
|---|---|---|
| பிறப்பு: | 07-08-1901 | 08-03-1914 |
| கர்த்தருக்குள் நித்திரை: | 27-08-1968 | 09-12-1973 |

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்"
I தெசலோனிக்கேயர் 4:16-17

எம்மைவிட்டுக் கடந்துசென்ற எமதன்புப் பெற்றோரை இயேசுவின் வருகையின் நாளில் சந்திக்கும் வரை பாசமுடன் நினைவுகூரும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(C14152)(10.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன் பெண் கைது

அம்பாறை,டிசெ.7
அம்பாறை, மத்தியமுகாம் பிரதேசத்தில் சட்டவிரோதமாக கஞ்சா மற்றும் மான்தோல், முதலைத்தோல் என்பன வைத்திருந்த பெண் ஒருவர் புதன்கி ழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று மத்தியமுகாம் பொலிஸார் தொவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மத்தியமுகாம், 26 ஆம் கொலனிப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றை புதன்கிழமை பொலிஸார் சுற்றி வளைத்து மேற்கொண்ட தேடுதலின்போது 22 கிராம் கஞ்சா, மற்றும் மான்தோல், முதலைத் தோல் ஆகியவற்றைக் கைப்பற்றியதுடன்,பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## கிட்டங்கி தாம்போதி நீர்மட்டம் உயர்வு

### போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாயம்



அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் அடை மழையால் நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்றக் கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் பிரதான வீதியிலுள்ள கிட்டங்கி தாம்போதியின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.
அதனால் இந்த வீதியூடான போக்குவரத்து துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
தினமும் விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பல்லாயிரக் கணக்கானோர் பயணிக்கும் இந்த வீதியினூடாக வெள்ளம் பாய்ந்து செல்கிறது. அதனால் இந்த வீதியூடாக பயணிக்கும் மத்திய முகாம், மண்டூர், சவளக்கடை, சாளம் பைக்கேணி, 6 ஆம் கொலனி போன்ற பிரதேசங்களில் வாழுகின்ற பொது மக்கள் பயணங்களை மேற்கொள்வதில்சிரமங்களைஎதிர்கொண்டு வருகின்றனர். (ச-30)

## ரூ.20,000 அபராதம்

அம்பாறை,டிசெ.7
அம்பாறை, இறக்காமம், வரிப்பத்தான்சேனை பிரதேசத்தில் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ். பிரிங்கி புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.
தமண பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து செவ்வாய்க்கிழமை இரவு வரிப்பத்தான்சேனை பிரதேசத்தில் 10 கிராம் மற்றும் 5 கிராம் கஞ்சாபோதைப் பொருளுடன் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது மற்றும் 23 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.
இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் புதன்கிழமை அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச)

## சுற்றுலா மையங்கள் அரசிடம் கையளிப்பு

### மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, டிசெ.7
கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான சுற்றுலா மையங்கள் அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை பட்டினமும் சூழலும், பிரதேச சபைக்கு சொந்தமான கன்னியா வெந்நீர் ஊற்று சுற்றுலாப் பிரதேசம், தொல் பொருளியல் எனும் பெயரில் அரசின் தொல்பொருளியல் திணைக்களத்துக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் குற்றம் சாட்டியுள்ளார்.
2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதம் கிழக்கு மாகாணசபையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிழக்கு மாகாண சுற்றுலாத் தலம் இந்துக்களுக்கு சொந்தமானது. கன்னியா வெந்நீர் ஊற்று சுற்றுலாப் பிரதேசத்தின் பராமரிப்புக் கட்டணம் அறவிடும் பொறுப்பை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபைக்கு வழங்க வேண்டும்.
அங்கு புதிதாகக் கட்டப்பட்ட பௌத்த விகாரை மிகக் கரிசனையாகப் பராமரிக்கப்படுகின்ற போதிலும் அங்கு காலம் காலமாக இருந்து வந்த பிள்ளையார் கோயில் இடிக்கப்பட்டமை கவலை அளிக்கின்றது.
பௌத்த மதத்தையும், புத்தரின் சிலைகளையும் தமிழர்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பின் அடையாளமாக மாற்ற வேண்டாம்.
உல்லாசப் பயணிகள் தங்கும் இடங்களில் கண்காணிப்புக் குறைவால் எமது பிர தேசத்தில் பல்வேறு விதமான கலாசார சீர்கேடுகள் அதிகரித்துச் செல்கின்றன.-என்றார்.(ச-40)

## கொட்டும் மழையால் சம்பூர் மக்கள் அவலம்

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கவலை


திருகோணமலை,டிசெ.7
கிழக்கு மாகாணத்தில் தற்போது பெய்து வரும் அடை மழையால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டி, பட்டித்திடல் உட்பட இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள சம்பூர் பிரதேச மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போருக்கு பின்னர் மீள்குடியேற்றம் பூர்த்தியடைந்துள்ளதாக அரசு அறிவித்துள்ள போதிலும் சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு மற்றும் கடற்கரைச் சேனை ஆகிய கிராமங்களை சேர்ந்த சுமார் 825 குடும்பங்களின் மீள்குடியேற்றம் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.
இந்தக் கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயமாகவும் இந்திய உதவியுடனான அனல் மின் உற்பத்தி நிலையத்துக்கான ஒதுக்கீடு எனக் காணிகள் அடையாளமிடப்பட்டுள்ளது.
தமது சொந்தக் கிராமங்களில் மீள்குடியேற்றம் தடைபட்டுள்ள

“ - ”

சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு மற்றும் கடற்கரைச் சேனை ஆகிய கிராமங்களை சேர்ந்த சுமார் 825 குடும்பங்களின் மீள் குடியேற்றம் தொடர்ந் தும் தடைப்பட்டுள்ளது.

நிலையில் கிளிவெட்டி, கட்டைபறிச்சான், மணல்சேனை மற்றும் பட்டித்திடல் இடைத்தங்கல் முகாம்களில் 888 குடும்பங்கள் தற்போது தங்கியுள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட மற்றும் பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.
கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் மழையால் இடைத் தங்கல் முகாம்களில் தங்கியிலுள்ளவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
இந்த தற்காலிக கொட்டில்களை புனரமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இராணுவத்தினால் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பழைய கூரைத்தகடுகள் மற்றும் மரங்கள் போன்றவை முகாம் அமைக்கப்பயன்படுத் தப்பட்டமையால் அவை திருப்திகரமானவையாக இல்லை.
இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கலாம். அவர்களிடம் அதனைச் செய்வதற்கான மனித வளம் இருக்கின்றது.-என்றார். (ச)

## யானை தாக்கி ஒருவர் காயம்



காட்டுயானை தாக்கி கடந்த புதன்கிழமை ஒருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர், மூதூர் வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பெரியவெளி, மல்லிகைதீவு பகுதி யைச் சேர்ந்த சிற்றம்பலம் கனகலிங்கம்(வயது-36) என்பவரே யானையின் தாக்குதலுக்கு இலக்கானவராவார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



கடற் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதால் ஒலுவில் மீனவர்கள் தொழிலில் ஈடுபடாது தமது படகுகளை துறை முகத்தில் நிறுத்தியுள்ளனர்.

## மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை வழங்குங்கள்

### காரைதீவு பிரதேசசபை தவிசாளர் வலியுறுத்து

அம்பாறை,டிசெ.7
திருக்கோயில் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த விநாயகபுரம் மீனவர்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு கண்டு அவர்களது தொழில் உரிமைக்கு உத்தரவாதம் வழங்க பொலிஸாரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் முன்வர வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையா வலியுறுத்தியுள்ளார்.
கடந்த முப்பது வருட காலமாக விநாயகபுரம் மீனவர்களால் [illegible] இறங்கு துறைப் பிரதே சத்தின் பெரும்பாலான பகுதிகளையும், பொதுப் பாதையையும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தனிநபர் ஒருவர் ஆக்கிரமித்து முட்கம்பி வேலிகளையும் அமைத்துள்ள பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.
தமது பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமென தெரிவித்து மீனவர்கள் புதன்கிழமை திருக்கோயில் பிரதேச செயலக முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.
இதன்போது திருக்கோயில் பிரதேச சபைத் தவிசாளர் வீ.புவிதராஜன் சகிதம் வருகை தந்து பிரச்சினைகளைக் கேட்டறிந்த [illegible]. தவிசாளர் [illegible] ஆகியோர் மீனவர்களுடன் சென்று பிரச்சினைக்குரிய இடத்தையும் பார்வையிட்டார்.
இதன் பின்னர் அங்கு தவிசாளர் இராசையா கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விநாயகபுரம் தாழையடி இறங்கு துறைப் பிரதேசத்தை தமது தொழில் நடவடிக்கைகளுக்காக நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.
ஆனால் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த தனிநபர் ஒருவர் இந்தப் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதியையும், மீனவர்களின் புழக்கத்திலிருந்த வீதியையும் அடாவடித் தனமாக ஆக்கிரமித்து முட்கம்பி வேலியையும் அமைத்துள்ளார்.
இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலுள்ள வீதி நெடுகிலும் சம்பந்தப்பட்ட நபர் தென்னங்கன்றுகளையும் நட்டுள்ளதையும் காண முடிந்தது.
இந்த அத்துமீறல் கண்டிக்கப்பட வேண்டிய செயற்பாடாகும். கரையோர பாதுகாப்பு சட்டத்தை மீறும் வகையில் கடலிலிருந்து 100 மீற்றருக்கு உட்பட்ட கரைப் பிர தேசமும் ஆக்கிரமிக்கப்பட்டு இங்கு முட்கம்பி வேலியும் அமைக்கப்பட்டுள்ளது.
நியாயப்படுத்தப்பட முடியாத இந்த அத்துமீறல் செயற்பாட்டினால் மீனவர்களின் தொழிலும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன.
குறிப்பாக அந்தப் பகுதியிலுள்ள 250 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.-என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை வேடத்தில் செயற்படுகிறது அரசு

## மனோவுடனான சந்திப்பில் வடக்கு முதல்வர் தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.7
சர்வதேசத்துக்கு ஒன்றை சொல்லுவதும், உள்நாட்டில் இன்னொன்றைச் செய்வதுமாக அரசு இரட்டை வேடம் போடுவதாக வடக்கு மாகாண முதல்வர் குற்றம் சாட்டியுள்ளார் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வட மாகாணசபை முதல்வர் விக்கினேஸ்வரனை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள இடதுசாரிகள் மற்றும் ஜனநாயக சக்திகள் மத்தியில் ஒரு சிறு புரிந்துணர்வு தென்படுகிறது. குறிப்பாக அமைச்சர்கள் திஸ்ஸ விதாரண, வாசுதேவ ஆகியோர் தம்முடன் புரிந்துணர்வை ஏற்படுத்தி வருகின்றனர் என்றும் கூறினார்.

வடக்கின் உண்மை நிலைமைகள் பற்றி ஜனநாயக மக்கள் முன்னணி சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவதை வரவேற்ற அவர், இந்த பணியை இன்னமும் வலுவாக முன்னெடுத்து, உண்மைத் தகவல்களை சாதாரண சிங்கள மக்களுக்கு எடுத்து கூறும்படி வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கில் மக்கள் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கூட்டமைப்பு நிர்வாகத்தை, முடக்கும் அரசின் செயற்பாடுகள் பற்றிய நிலைமைகளை முதல்வர் விளக்கிக் கூறினார்.

எதிர்வரும் மேல்மாகாண சபைத் தேர்தலில், மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நமது கட்சி போட்டியிடுவது குறித்து நான், முதல்வருக்கு எடுத்து கூறினேன்.

தத்தமது பிராந்தியங்களில் இரண்டு கட்சிகளும் பலமாக இருப்பது காலத்தின் கட்டாயம் என்றும் கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பில் நான் கடந்த மாதம் முதல்வருக்கும், ஜனாதிபதிக்கும் எழுதி அனுப்பியிருந்த கோரிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கைதிகள், தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான விவ ரங்களை சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் எதிர்பார்த்துள்ளதாக முதல்வர் கூறினார்.

இது தொடர்பில் விரைவில் ஒரு செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டு, விடயங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மக்களின் ஜனநாயக போராட்டங்களுக்கு எமது கட்சி அளித்து வரும் ஆதரவை நாம் தொடர்ந்து வழங்கி வரும் அதேவேளையில், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பிலும், வடக்கு மாகாண சபை முடக்கப்படு வது தொடர்பிலும் உண்மை நிலைவரங்களை நாம் தொடர்ந்து சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவோம் என்று நான் முதல்வருக்கு உறுதியளித்தேன். - என்றார். (ச)

# புலிகளின் பெயரைக் கூறாமல் முடிந்தால் வாக்கு கேளுங்கள்

## அரசுக்கு கூட்டமைப்பு சவால்



கொழும்பு,டிசெ.7
"ஒருவேளை கஞ்சிக்குக்கூட வழியின்றி இருக்கும் எமது மக்களின் பிரச்சினைகளை இந்தச் சபையில் கூறினால் எம்மீது புலி முத்திரை குத்துகிறீர்கள்.

புலிகளை அழித்து விட்டதாகக் கூறும் நீங்கள் உங்கள் வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இன்னமும் புலிகளின் பெயரைக் கூறுகிறீர்கள். புலிகளின் பெயரைக் கூறாமல், முடிந்தால் வாக்குக் கேட்டுப் பாருங்கள்."

இவ்வாறு அரசுக்கு நேற்று முன்தினம் சவால் விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன்.

மீண்டும் ஒரு போர் வரும் அல்லது வர வேண்டும் என்பதற்காகவும் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கவேண்டும் என்பதற்காகவுமா இந்த வரவு - செலவுத்திட்டத்திலும் இராணுவத்துக்காக அதிக நிதி ஒதுக்கியுள்ளீர்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துறைமுகங்கள், நெடுஞ்சாலை கள் மற்றும் கப்பல்துறை உள்ளிட்ட அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எமது மக்களின் அபிவிருத்திக்காக எந்தவொரு திட்டமும் முன்வைக்கப்படவில்லை. அவர்களுக்கென நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார். (ச-சி)

# சட்டவிரோதமாக எத்தனோல் இறக்குமதி

கொழும்பு,டிசெ.7
மலேசியாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 74 ஆயிரத்து 480 லீற் றர் எத்தனோல் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. ஊறுகொடவத்த கொள்கலன் களஞ்சிய சாலையிலிருந்தே இவற்றை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். சோதனையிடப்பட்ட 7 கொள்கலன்களில் ஒன்றினுள்ளேயே இந்த எத்தனோல் காணப்பட்டது.

தார் இறக்குமதி செய்வதாக இதன் உரிமையாளர் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்தே எத்தனோலை இறக்குமதி செய்துள்ளார்.

அதன் காரணமாக எத்தனோல் இறக்குமதிக்காக அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரிப்பணமான 112 மில்லியன் ரூபாவை அவர் செலுத்தத் தவறியுள்ளார் என்று சுங்க அத்தியட்சகர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

# கடலில் மூழ்கி ரஷ்யப் பிரஜை உயிரிழப்பு

காலி, ஹிக்கடுவை கடலில் நீராடிக் கொண்டிருந்த வெளிநாட்டு நபர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 43 வயதான ரஷ்யப் பிரஜை இவ்வாறு உயி ரிழந்துள்ளார் என்று ஹிக்கடுவை பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

**தேவை**

றொசானி காமென்சுக்கு
தையல் தெரிந்த பெண்கள்
தேவை.
தொடர்பு: றொசானி காமென்ஸ்,
263/1,இராஜகாரியார் லேன்,
மானிப்பாய்.
(சி/14265)(3.6.4)
கிளை: சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில், கிழக்கு, சுன்னாகம்.

**இலவசம்**

வீடு, கட்டட நிர்மாண வேலைகளில் அனைத்து விதமான தேவைகளுக்கும் 10 வருட அனுபவம் மிக்க ஆலோசகரினால் தொலைபேசி மூலம் இலவசமாக ஆலோசனை வழங்கப்படும்.
* வீடு கட்டட வேலைகளுக்கான மதிப்பீடு தயாரித்தல்
* வேலைகளை மேற்பார்வை செய்தல், ஆலோசனை வழங்குதல்
* கட்டட வேலைகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.

(40732)(7.6.3) தொடர்பு: 077 349 6085

**German Lecturer**

Do you need
Professional Lecturer? for
Institute or School.
Call : 077 835 0478
(40891)(7.6.3)

**கடை வாடகைக்கு**

அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரம் பிரதான வீதியில் புதிதாக கட்டப்பட்ட 4 கடைகள் வாடகைக்கு உள்ளன. (சிகை அலங்கரிப்புக் கடை Saloon) நடத்துவதற்குரிய சகல வசதிகளும் உண்டு.
தொடர்பு:076 603 9334
(40692)(4.6.3)

**கல்வீடு வாடகைக்கு**

ஈச்சமோட்டை சுண்டுக்குளியில்
2 அறைகள், ஒரு கோல், ஒரு டைனிங்
கோல், சமையலறை, மின்சாரவசதி,
நல்ல தண்ணீர் சுவாத்தியமான வீடு
வாடகைக்குண்டு. (40890)(4.6.3)
தொடர்பு:077 835 0478

**வீடு விற்பனைக்கு**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்,
தபால்கந்தோர் அருகில் உள்ள
2 பரப்புக் காணியில் அமைந்த வீடு
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:071 894 6461
(40902)(4.6.3)

**புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு**

எந்தநாளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
சுத்தம் செய்தவை - 400 .00
உயிருடன் - 260.00
உரிமையாளர்: பி.பிற்றர்தாஸ்
077 609 5749
கிளை
2ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்.
380, பலாலி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**உடன் விற்பனைக்கு-கிளிநொச்சியில்**

* ஹை ஏஸ் வான் XX-XXXX
* ரேபிள்ட்றில்
* கொம்போசர்
* ஒயில் வெல்டிங் பிளான்ற்
* டீசல் என்ஜின்

தொடர்பு:077 632 0345,
077 062 9798
(37598)(4.6.3)

**லக்ஸ்மி காகிதாதிகளின் அதிரடி மலிவு விற்பனை ....**

2014 ஆம் ஆண்டின் வருகையை முன்னிட்டு பாடசாலை மாணவருக்கான அனைத்து வகையான
அப்பியாசக் கொப்பிகள் , எழுது கருவிகள், கொப்பிகளை அழகாக்கும் வர்ணக் கவர்கள், ஸ்ரிக்கர் வகைகள்
தரம் 1- 5 வரையான மாணவருக்குரிய பயிற்சிப் புத்தகங்கள் , அலுவலகங்களுக்குத் தேவையான காகிதாதிகள்

அதிரடி விலையில்:
கொப்பிகள்
5 கட்டு No.I 48 /=
4 கட்டு No.I 38 /=

நத்தார் புதுவருட பிறப்புக்காலத்தை முன்னிட்டு
றெஜிபோம், வர்ண எழுத்துக்கள், அலங்காரப் பொருள்கள்
அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்......

லக்ஸ்மி காகிதாதிகள், இல.2, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4375
(அண்ணாகோப்பி அருகில்)
(40894)(45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உலகுக்கோர் உதார புருஷர் நெல்சன் மண்டேலா

உலகில் விடுதலைக்காக ஏங்கி நிற்கும் அனைத்து மக்களும் இன்று கண்ணீர் வடித்து நிற்கிறார்கள். உலகத் தலைவர்கள் ஒருகணம் தமது பணிகளை ஓரம்கட்டிவிட்டு இரங்கல் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆம், உலகத் தலைவர்களில் ஒருவரும் தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைக்காக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து போராடி வெற்றி கண்டவருமான நெல்சன் ரோர்பிசலா மண்டேலா நேற்று அதிகாலையில் இவ்வுலக வாழ்வைத் துறந்து சென்று விட்டார் என்ற செய்தி வெளியாகி இருப்பதுதான் இதற்குக் காரணம்.

1918 ஆம் ஆண்டு ஆபிரிக்க அரச பின்னணி கொண்ட குடும்பம் ஒன்றில் பிறந்தவரான நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்க நிறவெறி வெள்ளையர் ஆட்சியாளரின் பல்வேறு தடங்கல்கள், எதிர்ப்புகள், இடையூறுகளை மீறி உயர் படிப்பை முடித்து சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். அந்தப் பட்டத்தை தனது சொந்த வாழ்க்கையின் மேம்பாட்டுக்கோ சொத்துச் சேர்ப்புக்கோ பயன்படுத்தாமல் கறுப்பின மக்களின் மேம்பாட்டுக்கும் அவர்களின் விடுதலைக்கும் மட்டுமே பயன்படுத்தினார். அதன் காரணமாக அவர் எதிர்கொண்ட துன்பங்கள் அனந்தம். ஆரம்பத்தில் தங்கச் சுரங்கமொன்றில் அதிகாரியாக பணிசெய்த மண்டேலா நாட்டுக்கும் மக்களுக்கும் பணிசெய்ய வேண்டிய கடமையை உணர்ந்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அமைப்பில் இணைந்து கொண்டார். அதன் வாயிலாக அவ்வமைப்பு மேற்கொண்ட விடுதலைப் போராட்டங்களில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டது மட்டுமன்றி பல போராட்டங்களை தாமே முன்நின்றும் நடத்தினார்.


ஆபிரிக்க தேசத்தின் சொந்தக்காரர்களும், பெரும்பான்மை இனத்தவர்களுமான கறுப்பின மக்கள் அங்கு குடியேறி தொழில் புரிந்த மேட்டு வர்க்கத்தினரான வெள்ளையர்களால் அடிமைகளாக நடத்தப்பட்டதையும், ஆட்சிப் பொறுப்பில் சற்றேனும் இடம் தராமல் ஆக்கிரமிப்பு செலுத்தியதையும் மண்டேலா போன்றவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் 1956 ஆம் ஆண்டு முதல் அங்கு அறப் போராட்டம் ஆரம்பமானது. அதனால் அவரும் சகாக்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். 1969 ஆம் ஆண்டு சிறையிலிருந்து வெளியில் வந்த பின்னர் தமது போராட்ட முறையில் மாற்றம் செய்து தீவிரப்படுத்தினார் மண்டேலா. இதன் காரணமாக சதிக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றார் அவர்.

தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சிக்கு எதிராக உலகம் முழுவதும் எதிர்ப்புகள் கிளம்பின. நீதிக்காகப் போராடிய விடுதலை வீரர்கள் கண்ணியமின்றி சிறையில் அடைக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்படுவதை உலகத் தலைவர்கள் கண்டித்தார்கள். தென்னாபிரிக்க அரசு உலக நாடுகள் பலவற்றாலும் ஒதுக்கப்பட்டது. நாகரிக உலகம் அந்த நாட்டுடன் உறவு வைத்துக் கொள்வதையே அவமானம் என்று கருதி துண்டித்துக் கொண்டது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நெருக்குதல்கள் அதிகரித்தமையால் தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சியாளர்கள் பணிய வேண்டி ஏற்பட்டது. சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வாடிய மண்டேலாவும் சகாக்களும் விடுதலையா னார்கள்.


1998 ஆம் ஆண்டு விடுதலை வீரரான நெல்சன் மண்டேலாவை அந்த நாட்டு மக்கள் தமது நாட்டின் அதிபராக பதவியில் அமர்த்தி மகிழ்ந்தார்கள். வேறு நாட்டவர்கள் போல் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு தொடர்ந்து ஆட்சியில் இருக்க விரும்பாத மண்டேலா 1999 ஆண்டு வரையிலுமே பதவியலிருந்தார். பின்னர் ஏனையவர்களுக்கு வழிவிட்டு பதவி துறந்தார்.

தென்னாபிரிக்காவின் விடுதலைக்காக இளம் வயது முதலே அயராது உழைத்த மண்டேலா பதவியில் அமர்ந்த அதேவேளை தம்மையும் தமது இன மக்களையும் கொடுமைப்படுத்திய வெள்ளை இனத்தவர்களை பழிதீர்த்துக்கொள்ள முயலவில்லை. மாறாக அவர்களுக்கும் சம உரிமை வழங்க வழி செய்தார். வெள்ளையர் ஆட்சியில் அதிபராக இருந்த வரையே தமது உதவி அதிபராக நியமித்துக் கொண்டார்.

உலகத் தலைவர்களுக்கும், விடுதலைப் போராட்டங்களுக்கும் முன் உதாரணமாக விளங்கிய நெல்சன் மண்டேலா தமது 95 ஆவது வயதில் உலக வாழ்வைத் துறந்துள்ளார். கொடுங்கோல் ஆட்சிகளிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடி வரும் உலக அமைப்புகளுக்கு மண்டேலாவின் போராட்ட வாழ்வும் வழிமுறையும் என்றுமே உதாரணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.



# மறைந்தும் மறையாத மண்டேலா



இவரது பெருமைகளை உயர்த்தும் வகையில் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக் கப்பட் போதிலும், மண்டேலா அவற்றைக் கண்டு ஒரு போதுமே பெருமிதம் கொள்ளவில்லை.

ராஜராஜன்

உலகம் முழுவதும் பரந்து வாழும் ஒடுக்கப்பட்ட மக்களை தமது சிறகுகளால் அரவணைத்துப் பாதுகாத்த அந்தக் கறுப்புப் பறவை விண்ணுலகு நோக்கிப் பயணித்து விட்டது. ஆம், ஒடுக்கப்பட்ட மக்களின் அடையாளமாகத் திகழ்ந்த தொன்னாபிரிக்க நாட்டின் முதல் கறுப்பின அதிபரான நெல்சன் மண்டேலா எம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அவரது மறைவு உலகின் சகல பாகங்களிலும் வாழுகின்ற. பல்வேறு வகையிலும் ஒடுக்கப்பட்டு, நசுக்கப் பட்டு, உரிமையிழந்து வாழும் கோடான கோடி மக்களை மாறாத சோகத்தில் ஆழ்த்தி விட்டது.

95 வயதான மண்டேலா நுரையீரல் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையிலேயே சாவைத் தழுவிக்கொண்டார்.

### வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கிய மலை

அவரது வாழ்க்கை வரலாறு பல வேதனைகளையும், சோதனைகளையும் உள்ளடக்கிய அத்தியாயங்களைக் கொண்டது. அவர் மகிழ்ச்சியாக இருந்த தருணங்கள் மிகக் குறைவானவை. தமது கொள்கைகளில் விடாப்பிடியாக நின்ற அவர் எந்த வேளையிலும் சோரம் போகாது அவற்றின் வெற்றிக்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டே இருந்தார். இதனால் அவரது வாழ்வு ஒரு போராட்டக் களமாக மாறியது. ஆனால் இறுதியில் வெற்றி அவருக்கே கிடைத்தது.

நெல்சன் மண்டேலா 1918 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி தென்னாபிரிக்காவிலுள்ள ஒரு கிராமத்தில் மண் குடிசையொன்றில் பிறந்தார். இவரது தந்தையார் பழங்குடி மக்களின் தலைவராவார்.

மண்டேலா தமது இளம் பராயத்தில் தமது குல வழக்கப்படி ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு பாடசாலைக்கும் சென்று வந்தார். அத்துடன் போர்க் கலைகளையும் கற்றுக் கொண்டார். இதனால் இவரது மனதைப் போன்று உடலும் உறுதியாக மாறியது. ஆனால் அவர் தாம் கற்ற போர்க் கலையை ஒருபோதுமே தீய வழிகளில் பயன்படுத்தியதில்லை.

மண்டேலா 1941 ஆம் ஆண்டில் ஜோகன்ஸ்பார்க் சென்று ஒரு தங்கச் சுரங்கத்தின் பாதுகாப்பு அதிகாரியாகவும், வேறு தொழில்களும் புரிந்த [illegible] சட்டக்கல்வியும் கற்று வந்தார். இந்த [illegible] தான் அவரது முதலாவது திருமணம் இடம்பெற்றது.

### கறுப்பின மக்களுக்காக போராடினார்

அந்த வேளையில் தென்னாபிரிக்க பெரும்பான்மை கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராக ஆட்சி அதிகாரம் புரிந்த சிறுபான்மை வெள்ளை இனத்தினர் பல்வேறு வகையிலும் கொடுமைகளை இழைத்து வந்தனர். இதற்கு எதிராக அமைக்கப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கம் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தது. மண்டேலாவும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார். அத்துடன் அதன் செயற்பாடுகளில் தம்மை முழுஅளவில் அர்ப்பணித்துக் கொண்டதுடன், தீவிரமாகச் செயற்படவும் ஆரம்பித்தார். இதனால் அவரது மனைவி அவர் மீது கருத்துவேறுபாடு கொண்டார். ஆனால் மண்டேலா தமது கொள் கையிலிருந்து நழுவிவிடவில்லை.

இந்த நிலையில் தென்னாபிரிக்க சிறுபான்மை வெள்ளையர் அரசு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தை முற்றாகத் தடை செய்தது. மண்டேலா மீதும் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 1958 ஆம் ஆண்டு வின்னியை அவர் மணந்தார். வின்னியும் அவருக்கு ஒத்த கொள்கைகளை உடையவராகத் திகழ்ந்தார். மண்டேலாவுக்கு முதல் மனைவி மூலமாக மூன்று குழந்தைகளும் இரண்டாவது மனைவி மூலமாக இரண்டு குழந்தைகளும் பிறந்தன.

### 27 வருடங்கள் சிறை வாழ்வை அனுபவித்தார்

இந்த நிலையில் சிறுபான்மை வெள்ளை அரசின் ஒரு தலைப்பட்சமான வழக்கு விசாரணைகளின் பின்னர் 1964 ஆம் ஆண்டு நாசவேலைக் குற்றச்சாட்டின் பேரில் ஆயுள் சிறைத் தண்டனை மண்டேலாவுக்கு வழங்கப்பட்டது. மண்டேலா சிறைக்குள் அடைக்கப்பட்டதால் வெள்ளையர் அரசு நிம்மதிப் பெருமூச்சு விட்டது. பெரும்பான்மை கறுப்பு இனத்தவர்களுக்கு எதிரான அதன் கொடுமைகள் தங்கு தடையின்றி அரங்கேற்றப்பட்டன. சிறைக்குள் அடைபட்டுக் கிடந்த மண்டேலா தமது இனத்தவர்களுக்கு எதிராக வெள்ளையர்கள் மேற்கொள்ளும் இன்னல்களைத் தடுக்கும் சக்தியற்ற தமது நிலையை நினைத்து மனம் வெதும்பினார்.

பல ஆண்டுகள் அவர் இருள்படர்ந்த தனிமைச் சிறையில் வாடினார். மனைவியைச் சந்திப்பதற்குக் கூட வெள்ளையர் அரசு அவருக்கு அனுமதி வழங்கவில்லை. இந்த நிலையில் 1988 ஆம் ஆண்டு கடுமையான காசநோயினால் அவர் பீடிக்கப்பட்டு வேதனையை அனுபவித்தார். அப்போது அவர் மரணத்தின் வாசல்வரை சென்று திரும்பி வந்தார். இந்த நிலையில் அவரை விடுதலை செய்யவேண்டுமென்ற கோரிக்கை உலகம் முழுவதும் எழுந்தது. தென்னாபிரிக்கா ஏனைய நாடுகளால் ஒதுக்கி வைக்கப்பட்டது. மன்னிப்புக் கேட்டால் விடுதலை செய்வதாக அரசு கூறியது. ஆனால் மண்டேலா அதனை முற்றாக நிராகரித்தார். இந்த நிலையில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்த தென்னாபிரிக்க அரசு வேறு வழியின்றி 1990 ஆம் ஆண்டு அவரை விடுதலை செய்தது.

27 ஆண்டுகால சிறைவாசம் மண்டேலாவின் உடல் நிலையைப் பெரிதும் பாதித்து விட்டது. ஆனால் அவரது மனவுறுதி இறுகிய கற்பாறை போன்று உறுதியாகக் காணப்பட்டது.

### தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பினத் தலைவர்

1994 இல் தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின அதிபராக அவர் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். 1999 இல் அதிபர் பொறுப்பிலிருந்து அவர் விலகிக் கொண்டார். இவரது பெருமைகளை உயர்த்தும் வகையில் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போதிலும் மண்டேலா அவற்றைக் கண்டு ஒரு போதுமே பெருமிதம் கொள்ளவில்லை.

இந்த வரலாற்று நாயகரைப் பற்றி இன்னமும் கூறிக்கொண்டே போகலாம். வெள்ளையர்கள் தமக்குப் பல்வேறு இன்னல்களைப் புரிந்த போதிலும் மண்டேலா அவர்களைப் பழிவாங்குவதற்கு ஒரு போதுமே நினைக்கவில்லை. அவர்களும் தென்னாபிரிக்கர்களே என்ற எண்ணத்தை அவர் கொண்டிருந்தார். அவரது இந்த மன்னிக்கும் உயர்ந்த பண்பு உலகெங்கும் பாராட்டப்பட்டது. மண்டேலாவின் பெருமையும் எட்டாத உயரத்துக்குச் சென்றது.

தென்னாபிரிக்க மக்கள் நிறவெறி காரணமாகவே வெள்ளையர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டனர். பல்வேறு அடக்கு முறைகளுக்கும் ஆளாகினர். ஆனால் உலகின் ஏனைய சில நாடுகளில் மொழி, இனம், மதம் என்பவை காரணமாகக் கூறப்பட்டு சிறுபான்மை இன மக்கள் கொடுமைப் படுத்தப்படுகின்றனர். இவர்களை மீட்பதற்கு பல நெல்சன் மண்டேலாக்கள் இந்த உலகில் பிறக்க வேண்டும் என்பதே பாதிக்கப்படுபவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இறுதியாக சுதந்திர கீதம் இசைத்துக் கொண்டிருந்த அந்தக் கருங்குயில் எங்கோ கண்காணாத தொலைவுக்குப் பறந்து சென்றுவிட்டது. அதனை நாம் மீண்டும் ஒருமுறை காண முடியாது. ஆனால் இந்தக் குயில் போன்று ஏராளமான குயில்கள் இந்தப் பூமியில் தோன்றி சுதந்திர கீதம் இசைக்க வேண்டும்.

மண்டேலா எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவரது நினைவுகள் எப்போதுமே அழியாது நிலைத்து நிற்கும். கறுப்புக் காந்தியின் கொள்கைகளைப்பற்றி நிற்பதே அவருக்கு நாம் செலுத்துகின்ற இறுதி அஞ்சலியாக இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிக்கலைத் தரும்

# மலச்சிக்கல்

மருத்துவர்
திருமதி அ.சுதர்மன்







எமது நாளாந்த செயற்பாட்டில் மலம் கழிப்பது மிகவும் முக்கியமானது. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் நாளாந்தம் மலம் கழித்தல் வேண்டும். இவ்வாறு மலங் கழிக்கும் முறையில் தடையேற்படும் போது மலச்சிக்கல் (Constipation) என்று கூறுகின்றோம்.

நாம் எமது வாழ்க்கையில் எந்த ஒரு விடயத்தையும் ஒரு ஒழுங்கு முறையில் செய்வதற்கு சிறு வயதில் இருந்தே பழகி வருதல் வேண்டும். அவ்வாறே மலங் கழிக்கும் வழக்கத்தையும் நாம் ஒரு நேர ஒழுங்கு முறைப்படி கடைப்பிடித்துவரல் வேண்டும்.

பொதுவாக அதிகாலை நித்திரை விட்டெழுந்ததும் மலங் கழிக்கும் முறையை பின்பற்றி வருவது சிறப்பானது.

நாம் தினமும் உணவு உண்கின்றோம். எமது உணவின் சத்து குடலினால் அகத்துறிஞ்சப்பட்ட பின்பு கழிவு மலமாக மலவாசல் ஊடாக வெளியேற்றப்படுகின்றது. இந்தச் செயற்பாட்டில் தடங்கல் ஏற்படும் போது எமக்கு மலச்சிக்கல் ஏற்படுகின்றது.

நாம் உண்ணும் உணவானது நார்ச்சத்து மிகுந்தவையாக இருத்தல் வேண்டும். வாழைப்பூ, வாழைக்காய், வாழைக்கிழங்கு இவைகளில் அதிகளவு நார்ச்சத்து உள்ளது. மற்றும் இலைக்கறிவகைகள் வல்லாரை, அகத்தி, கீரை, பொன்னாங்காணி, கங்கூன், மணித்தக்காளி, சண்டியிலை, தவசி முருங்கை போன்றவைகளில் ஏதேனும் ஒன்றை எமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். கிழங்கு வகைகளில் கருணைக் கிழங்கு, கோகிலாக் கிழங்கு, தாமரைக் கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு என்பவை மலச் சிக்கலைக் குணப்படுத்த வல்லமை

பழ வகைகளில் அன்னாசி, மாம்பழம் தவிர்ந்த பழங்கள் நன்று. அதிலும் குறிப்பாக பப்பாசி, கதலி, மருத்துவ வாழைப்பழங்கள் மிக நன்று.

மாமிச வகைகள் உண்போர் கோழி இறைச்சியைத் தவிர்த்தல் வேண்டும். ஏனைய மாமிச மீன் வகைகள், கணவாய் உண்பது நல்லது. ஆனால் மாமிச உணவுகளுக்கு அதிக காரம் சேர்த்து பாவிப்பதும் கூடாது.

அதிகமாக உணவில் சீரகம், மல்லி, மஞ்சள், பெருங்காயம், உள்ளி, வேர்க்கொம்பு இவைகள் சேர்த்து மசாலாவாக அல்லது அரைத்து கூட்டாக பாவிப்பது நல்லது. சீரகம், அகத்தினை சீர் செய்வதனால் ஏற்பட்ட காரணப் பெயராகும். அதாவது எமது சமிபாட்டுத் தொகுதியை (Gastro Intestinal Tract) சீராக தொழிற்படச் செய்கின்றது என்பது பொருளாகும்.

### நீர் அருந்தும் பழக்கத்தை உருவாக்க வேண்டும்

நாம் வெப்ப வலய நாட்டில் (Tropical Country) வாழ்கின்றோம். எமது உடம்பில் இருந்து அதிகளவு நீர் வியர்வையாக வெளியேற்றப்படுகின்றது. எனவே நாம் நாளாந்தம் அதிகளவு நீரை அருந்துதல் வேண்டும். எம்மில் பலர் நீர் அருந்தும் பழக்கம் குறைந்தவர்களாக உள்ளோம். அதற்கு முதலாவது காரணம் சோம்பேறித் தன்மையே ஆகும். நாம் வேலை செய்யும் இடங்களில் போதியளவு குடிதண்ணீர் வசதி இல்லாவிடின்ல் நாம் தண்ணீர் அருந்துவதைத் தவிர்க்கின்றோம். தண்ணீரைத் தேடி எடுத்து அருந்துவதில் சோம்பேறித் தன்மை, தூய நீர் கிடைக்காமை, தண்ணீரை எடுத்துச் சென்று அருந்துவதில் கவனமின்மை இவையே குடிதண்ணீரை அருந்துவது குறைவதற்கான காரணங்களாகும்.

எமது உடம்பின் உருவத்தின் தன்மைக்கு நீர்த்தன்மை மிகவும் முக்கியமானது. எனவேதான் நாம் தீவிரமாக வாந்தி, வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்படும்போது எமது தோல் சுருங்கி நீர்த்தன்மையை இழந்துவிடுகின்றது. தோலைப் பிடித்துப் பார்க்கும் போது ஒட்டுந் தன்மையுள்ளதாக காணப்படும். போதுமான அளவு நீரை நாம் அருந்தும்போது எமது உடல், [illegible] [illegible] அதிகளவு நீர் அருந்துவோர் எப்போதும் புத்துணர்ச்சியுடன் சுறுசுறுப்பாக காணப்படுவர். எனவே நாம் நாளாந்தம் 8-10 கோப்பைகள் நீர் அருந்துதல் வேண்டும். இந்த நீரானது எமது சமிபாட்டுத் தொகுதிக்கும் மிகவும் இன்றியமையாதது.

உணவு சமிபாடு அடைவதற்கு நீர் போதுமானளவு இருத்தல் வேண்டும். போதுமானளவு நீர் கிடைக்காவிடில் சமிபாட்டில் தடங்கல் ஏற்பட்டு கழிவு அகற்றப்படமாட்டாது. இதுவே மலச்சிக்கல் தோன்றுவதற்கு பிரதான காரணம் ஆகும். ஆக நாம் போதுமான அளவு நீரை நாள் தோறும் அருந்துதல் வேண்டும்.

யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான இடங்கள் போதிய குடிதண்ணீர் கிடைக்கின்ற இடங்களாகவே உள்ளன. (தீவுப் பகுதிகளை தவிர்த்து). எனவே நாம் நாளாந்தம் தண்ணீர் தாகம் இருக்காவிடிலும் நீரை அருந்திக் கொள்ளல் வேண்டும்.

வயது செல்லச் செல்ல எமது உடற் தொழிற்பாடுகளில் (Physiology) பாதிப்பு ஏற்படுகின்றது. குடலின் மீள் தன்மை அற்றும் போகின்றது. இதனாலும் எமது சமிபாட்டுத் தொகுதியின் செயற்பாட்டில் மந்த நிலை தோன்றி கழிவு அகற்றும் செயற்பாடும் குறைவுபடும். இதற்கு நாம் தேகப் பயிற்சி, வயதுக்கேற்ற உணவு (கஞ்சி, கூழ், களி, சூப்) வகைகளை உண்ணுதல் வேண்டும்.

சிறுவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படக் காரணம் அவர்கள் மலம் கழிப்பதை (பொறுமையாக) தவிர்த்தல் மற்றும் அதிக கொக்கோ சேர்ந்த உணவுகளை உண்ணுதல், சில வகை பால்மா வகைகளை உண்பது என்பவை ஆகும். சிறுவர்களுக்கும் நாம் சிறு வயது முதற்கொண்டு குறித்த நேரத்தில் மலம் கழிப்பதற்கு பயிற்றுவித்துக் கொண்டு வருவதுடன் அதிகளவு நீர் அருந்துவதற்கும் பழக்குதல் வேண்டும். சிறுவர்கள் நீரைப் போதியளவு அருந்துவதற்குப் பின்னடிப்பார்கள். அவர்களுக்கு நீரைப் பழ ரசமாக , சூப் வகைகளாக பால், மோர் போன்ற விதத்தில் அருந்தக் கொடுக்கலாம்.

> எமக்கு உடம்பில் இருந்து அதிகளவு நீர் வியர்வையாக வெளியேற்றப் படுகின்றது. எனவே நாம் நாளாந்தம் அதிகளவு நீரை அருந்துதல் வேண்டும். எம்மில் பலர் நீர் அருந்தும் பழக்கம் குறைந்தவராகவே உள்ளோம்.

### பெண்களுக்கு ஏற்படும் மலச்சிக்கல்

பெண்களுக்கு குழந்தை வயிற்றில் வளரும் போது, பிரசவத்தின் போது மலச்சிக்கல் ஏற்படுவது வழமை. இவர்களுக்கு குழந்தை பிறந்த பின்பு மலச்சிக்கல் இல்லாது போய்விடும். பிரசவத்தின்போது ஏற்பட்ட நோ மற்றும் பிறப்புறுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக மலம் கழிக்கும் போது ஏற்படும் வேதனை, இவற்றினால் மலங் கழிக்கும் செயற்பாட்டை தள்ளிப் போடும்போது மலச்சிக்கல் அந்தச் சமயங்களில் பெண்களுக்கு ஏற்படுகின்றது. இதற்கு அந்தக் காலங்களில் பெண்களுக்கு போதிய ஓய்வும், மலச்சிக்கலைத் தவிர்க்கும் மேற்கூறிய உணவு வகைகளையும் கொடுத்தல் வேண்டும்.

மலச்சிக்கல் எமக்கு இருக்கும் போது எமக்கு வாயில் துர்நாற்றம், வாயில் புண், கோபம், இருப்புக் கொள்ளாமை, எரிச்சல், பதட்டம், பசி இன்மை இவைகள் ஏற்படும். மலச் சிக்கல் நீண்ட நாள்கள் இருக்கும் போது நாம் மலத்தை எமது பலத்தை பிரயோகித்து வெளியேற்ற முற்படும் போதும் மூல வருத்தம் (Haema rrhoids) ஏற்பட ஏதுவாகின்றது.

குரக்கன், ஒடியல், பயறு, கடலை, கௌபீ, அவல் இவைகளில் செய்யப்பட்ட ஆகாரங்கள் மலச்சிக்கல் ஏற்படாது தவிர்க்க வல்லமை.

கோதுமை மா, பாண், வெள்ளை அரிசி, சம்பல், எண்ணெயில் பொரித்த உணவுகளான றோல்ஸ், பேஸ்ரி, பற்றீஸ், மிக்சர் இவைகள் மலச்சிக்கலுக்கு ஆகாது.

எது எவ்வாறாயினும் எமது நாளாந்த உணவுப் பழக்கத்தை இலைக் கறிகள் சேர்ந்ததாக, நார்ச்சத்து உள்ள மரக்கறி வகைகள் சேர்ந்ததாக, அதிகளவு காரமில்லாத உணவுகள் சேர்த்து சாப்பிடுவதுடன் போதியளவு நீரும் அருந்துதல் வேண்டும். தினந்தோறும் மலம் கழிக்கும் பழக்கத்தை சிறுவயது முதற் கொண்டு பழகிவரல் வேண்டும். தேகப்பியாசம், சைக்கிள் ஓட்டம் (Cycling) செய்து வருவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**இடபம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**மிதுனம்:** எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து நீங்கும். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். சிலரின் நயவஞ்சகச் செயலை நினைத்து வருந்துவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பதற்றமடைவீர்கள்.

**கடகம்** : உங்களது குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிட்டும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்

**சிங்கம்:** அதிரடித் திட்டங்களை தீட்டுவீர்கள். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கன்னி:** அதிகாரப்பூர்வமாக செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**துலாம்:** உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும்.

**விருச்சிகம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**தனுசு:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.

**மகரம்:** மற்றவர்களை நம்பிப் பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். அடுத்தவர்களைக் குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். நண்பர்கள் சிலர் உங்களை உதாசீனப்படுத்தும் வகையில் நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மீனம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பகர்களின் வருகையுண்டு.

# யோக விஞ்ஞானம்



விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி கலிபோர்னியாவைச் சேர்ந்த அலமேடா நகரத்து டக்கர் மன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு.

யோகம் என்பது சமஸ்கிருதச் சொல்; மிகப் பழைய சொல். (சித்த விருத்தி நிரோதம்) என இது விவரிக்கப்படுகிறது. அதாவது சித்தத்தை அடக்கும் முறையைக் கற்பிக்கும் சாஸ்திரம் என்பது இதன் பொருள். சித்தம் என்பது மனம் தோன்றுவதற்கு ஆதாரமானது; உள்ளும் புறமும் உள்ள சூழ்நிலைகளால் அலைக்கப்படுவது. இவ்வாறு அலை மோதுவதால் தன் நிலை மாறாமலிருக்கும் வண்ணம் மனத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதை யோகம் கற்பிக்கிறது.

இதன் பொருள் என்ன? ஆரம்ப நிலையிலிருக்கும் சமயவாதி ஒருவருக்கு மதத்தைப் பற்றிய நூல்களும் கருத்துகளும் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஊகமே; கற்பனையே. ஒருவர் ஒரு விதமாகச் சொல்வார். மற்றொருவர் இன்னொரு விதமாகச் சொல்வார். அறிவில் சிறிது ஆற்றல் மிகுந்தவன் பிறரை வெல்வான்; புதிய ஒன்றைக் கூறுவான். சென்ற இரண்டாயிரம் வருடங்களாக, நாலாயிரம் வருடங்களாக, இப்படித்தான் மத ஆராய்ச்சி நடந்து வந்திருக்கிறது. எவ்வளவு காலமாக இவ்வாறு நடைபெற்று வந்துள்ளது என்பதைக் கூற முடியாது....காரண காரிய முறையில் தர்க்கம் செய்ய முடியாத போது 'நான் சொல்வதை நம்பு' என்று சொன்னார்கள். பலசாலிகள் தங்கள் நம்பிக்கையைப் பிறர்மீது திணித்தார்கள். இப்போதும் இவ்வாறு நடைபெறுகிறது.

இதில் சிறிதும் திருப்தி அடையாத சிலர் இருந்தனர். 'இந்தச் சிக்கலில் இருந்து வெளியேற வழி இல்லையா?' என்று அவர்கள் கேட்டனர். 'பௌதிக இயலில் கற்பனைக்கும் ஊகத்துக்கும் இடம் உண்டா? இரசாயனத்தில் ஊகிப்பது உண்டா? கணிதத்தில் ஊகிப்பது உண்டா? இல்லையே. எனவே மதத்தில் மட்டும் ஊகம் எதற்கு? கற்பனை எதற்கு? மதமும் மற்ற விஞ்ஞானங்கள் போல ஏன் இருக்கக் கூடாது?' என்று அவர்கள் எண்ணினர்.

இந்த வழியை வகுத்தனர்; ஆன்மா என்ற ஒன்று இருப்பது உண்மையானால், அது அழியாத ஒன்றானால், பிரபஞ்சத்தை ஆட்சி செலுத்தும் ஆண்டவன் ஒருவன் இருப்பது உண்மையானால் அவனை இங்கே உணர்ந்து அறிதல் வேண்டும். எல்லாவற்றையும் உங்கள் அறிவாலேயே அறிய வேண்டும்.

புறக்கருவிகளால் மனத்தை ஆராய முடியாது. நான் சிந்திக்கும் போது எனது மூளையை உங்களால் பார்க்க முடியுமானால் அங்கே என்ன காண்பீர்கள். சிந்தனையையா? உணர்வையா? உருவத்தையா? எதையும் இல்லை. சில மூலக்கூறுகள் இடம் மாறுவதை மட்டுமே காண்பீர்கள். பௌதிக, இரசாயன மாறுதல்கள் இவற்றின் சில அசைவுகளை மட்டுமே காண்பீர்கள். எனவே இத்தகைய ஆராய்ச்சி போதாது என்பதை இந்த உதாரணங்களிலிருந்து அறியலாம்.

# 5 கிரகங்களில் தண்ணீர்; நாசாவின் கண்டுபிடிப்பு

மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்ற, ஐந்து கிரகங்களை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் பல்வேறு கிரகங்களில் மனிதன் வாழ்வதற்குரிய சூழல் குறித்து ஆய்வு செய்து வருகிறது.

இந்த ஆராய்ச்சியின் பயனாக சூரிய மண்டலத்துக்கு வெளியில் உள்ள ஐந்து கிரகங்களில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

உலகம் முழுவதிலும் இருந்து கிடைத்த பல்வேறு ஆய் வறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்தக் கிரகங்களில் தண்ணீர் இருப்பது உறுதியாகி உள்ளது.

ஆனால், ஒவ்வொரு கிரகத்திலும் வெவ்வேறு அளவில் தண்ணீர் உள்ளது. நாசா மையத்தின் சார்பில் விண்வெளியில் 'ஹப்பிள்' தொலைநோக்கி நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் உதவியுடன் ஐந்து கிரகங்களில் தண்ணீர் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



### நாளை

கார்த்திகை-22 ஞாயிற்றுக்கிழமை
08.12.2013
திதி: ஷஷ்டி மா.05.12 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
மு.இ.09.16 வரை
சுபநேரம்:
09.17 - 10.47 வரை
இராகுகாலம்: 04.47 - 06.17 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 6 | 9 | | | | | 2 |
| 9 | | | | 4 | | | | |
| | 4 | | | | 1 | 9 | | |
| | | 5 | 7 | | | 1 | 3 | 9 |
| | | 9 | | | | 2 | | |
| 2 | 1 | 4 | | | 3 | 5 | | |
| | | 8 | 3 | | | | 2 | |
| | | | | 6 | | | | 1 |
| 1 | | | | 7 | 2 | 8 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள் கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இ...

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 4 | 1 | 3 | 9 | 6 | 2 | 7 |
| 1 | 2 | 9 | 6 | 8 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 3 | 6 | 4 | 2 | 5 | 9 | 1 | 8 |
| 9 | 1 | 7 | 2 | 6 | 4 | 8 | 3 | 5 |
| 5 | 6 | 8 | 3 | 9 | 1 | 4 | 7 | 2 |
| 2 | 4 | 3 | 5 | 7 | 8 | 1 | 9 | 6 |
| 6 | 9 | 5 | 7 | 1 | 2 | 3 | 8 | 4 |
| 3 | 8 | 2 | 9 | 4 | 6 | 7 | 5 | 1 |
| 4 | 7 | 1 | 8 | 5 | 3 | 2 | 6 | 9 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] இல் ஜப்பானிய நிறுவனம் [illegible] காலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அங்கப் பிரதட்சணம் ஆண்களுக்கு மட்டுமே

இந்து மதத்திலே வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் யாவும் அர்த்த முள்ளதாகவே அமைந்துள்ளன. அதனடிப்படையில் ஆண்களுக்கு அட்டாங்க நமஸ்காரம், பெண் களுக்கு பஞ்சாங்க நமஸ்காரம் என ஆலயங்களில் வணங்கும் முறையும் வகுக்கப்பட்டுள்ளதும் அர்த்தத்தோடு தானே. பெண்க ளுடைய மார்பகங்கள் பூமியிலே படுதல் ஆகாது என்பதாலேயே பெண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்தலாகாது. இப்படியிருக்க அண்மைக் காலமாக- பெண்கள் ஆலயங்களில் அங்கப் பிரதட் சணம் செய்வதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இது மிகவும் தவறான ஒன்று மட்டுமல்ல பாவத்தைத் தேடும் விடயமாகும். தொலைக்காட்சி நாடகங்களிலும், சினிமாப் படங்களிலும் இவ்வா றான காட்சிகள் இடம்பெறுவ தாலேயே பெண்கள் அங்கப் பிர தட்சணம் செய்கிறார்கள்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலில் அங்கப் பிரதட்சணம் செய்த ஒரு பெண்ணுக்கு ஆலயத் தைச் சார்ந்த ஒருவர் தவறைத் தெளிவுபடுத்தி கூறியதைக் கவனித் தபடியால் நான் இதனை எழுது கின்றேன். அனைத்து இந்துப் பெண்களும் இதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆலய நிர்வா கங்களும் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் கவனிக்க வேண்டும்.

*த.மாலதி, கோண்டாவில்*

தொலைக் காட்சி நாட கங்களி லும், சினிமாப் படங்களிலும் இவ்வா றான காட்சி கள் இடம் பெறுவ தா லேயே பெண்கள் அங்கப் பிர தட்சணம் செய்கிறார்கள்.



பெண் களுக்குப் பஞ்சாங்க நமஸ்காரம் என ஆலயங்களில் வணங்கும் முறையும் வகுக்கப்பட்டுள்ளதும் அர்த்தத்தோடு தானே. பெண்க ளுடைய மார்பகங்கள் பூமியிலே படு தல் ஆகாது என்பதாலேயே பெண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்தலாகாது.

# வாக்குவாதம் வாழ்க்கைக்கு ஆகாது!

எப்ப பார்த்தாலும் சண்டைதான், எதற்கெடுத்தாலும் வாக்குவாதம் வீட்டில் நிம்மதியே இல்லை என்று புலம்புபவரா நீங்கள்? கண்டிப்பாக இதைப் படியுங்கள்..

குடும்பத்தில்இணக்கம் ஏற்படவும், குடும்பத்தில் அமைதி நிலவவும் எதற்கெடுத்தாலும் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவேண்டும் என்கின்றனர் உளவியலாளர்கள். அவமதிப்பது ஆபத்து, பேச்சு வார்த்தை சின்னதாக தொடங் கும்போதே அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வழியைத் தேடவேண் டும். அதை விடுத்து ஒருவருக்கு ஒருவர் எதிர்ப் பேச்சுப் பேசி அவமதிக்கும் வகையில் பேசுவது மிகப்பெரிய பிரச்சினைக்கு வழி வகுக்கும். எனவே பேசிய பின்னர் இப்படிப் பேசி விட்டோமே என்று நினைத்து வருந்துவதை விட எதையுமே பேசும் முன்பு யோசித் துப்பேசுவது இருவருக்குமேநல்லது.

**உண்மையைக் கண்டறியுங்கள்**

கண்ணால் காண்பதும் பொய், காதல் கேட்பதும் பொய். எனவே உங்கள் துணைவரைப் பற்றி உங்களுக்குத்தான் முழுதாக தெரிந்திருக்க வேண்டும். உங்கள் வீட்டுக்காரரை அங்கே பார்த்தேன், இங்கே பார்த்தேன், பக்கத்தில ஒரு பெண் இருந்தது என்று யாராவது கொளுத்திப் போட்டால் அதையே சாட்டாக வைத்து வீட்டுக்கு வந்த உடன் குடையக்கூடாது. அவராக ஏதாவது சொல்கிறாரா என்று அமைதி காக்கவும். இல்லையா வேறு தலைப் பில் ஏதாவது பேசிவிட்டு அதோடு சேர்த்து மெதுவாகக் கேட்கவும். அப்புறம் சண்டைக்கு ஏது வழி? எது உண்மை என்று தெரிந்து கொண் டால்மகிழ்ச்சியான ஆரோக்கிய மான வாழ்க்கை உங்களுடையதுதான்.

# ஏழு மணிநேரம் தூங்குங்கள்



பெண்கள் தினசரி இரவில் ஏழு மணி நேரம் தூங்கு வது அவசியம். இல்லை யெனில், அவர்களின் கண் கள் சோர்ந்து, உடல் நிலையில் பாதிப்பை ஏற் படுத்தும். ஆனால், இது ஆண்களுக்கு பொருந் தாது. குறைந்த நேர தூக் கம், குறைந்த வயதி லேயே சாவை ஏற்படுத்த வும் வாய்ப்பு உண்டு. ஆண், பெண் இருபாலாருக் கும் தூக்கத்தில் வேறுபாடு மற்றும் உயர் ரத்த அழுத் தத்தில் மாறுபாடு உள்ளதா என்று ஆய்வு செய்தோம். தினசரி இரவில் ஏழு மணி நேரம் தூங்கும் பெண் களை விட, ஐந்து மணி நேரம் அல்லது அதற்கும் குறைவாக தூங்குபவர் களுக்கு உயர் ரத்த அழுத்தம் மற்றும் இதயம் தொடர்பான நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இரண்டு மடங்காக அதிக ரிக்கிறது. போதிய தூக்கம் இல்லாத பெண்கள், உடல் ரீதியாகவும், உணர்வு ரீதி யாகவும் ஆண்களை விட அதிகமாக பாதிக்கப்படு கின்றனர். பெண் களுக்கு உயர் ரத்த அழுத் தம் ஏற்படுவதற்கும், போதிய தூக்கமின்மைக்கும்இடையே நெருங்கிய தொடர்பு உள் ளது. ஆனால், இது போன்ற நெருங்கிய தொடர்பு ஆண் களிடம் காணப்பட வில்லை. ஆழ்ந்த தூக்கதுக்கு இடைஞ் சலைஏற்படுத்துவதில் இரைச் சல் முதலிடமும், குழந்தை யின் அழுகை இரண்டா மிடமும் பெறுகின்றன.

போதிய தூக்கம் இல்லாத பெண்கள், உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் ஆண்களை விட அதிகமாக பாதிக்கப்படு கின்றனர்.

வாடகை
Attached bathroom
உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு.
(ஒரு நாள் 500/=)
Hotel Villa City,
422 Galle Rd, Colo 6
0722 552 222

LOLC
மாபெரும் வாகனச்சந்தை கிளிநொச்சியில்
LANKA ORIX FINANCE
LOLC மைக்ரோ கிரெடிட்
உங்களுக்கு உகந்த வகையில் உபயோகிக்கப்பட்ட அநேகவிதமான மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் டிமோபட்டா உள்ளடங்கலாக 50 வாகனங்கள்,அவ்விடத்திலேயே கொள்வனவு செய்யக்கூடியதொரு அரிய சந்தர்ப்பம்.
2013 டிசெம்பர் மாதம் 09ம் திகதியிலிருந்து
2013 டிசெம்பர் மாதம் 20ம் திகதி வரை.
A-9 ,கண்டி வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில்
தொடர்புகளுக்கு
மயூரன் - 0776 50 68 39
சந்திமா - 0665 11 80 80
(C14128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமம் இரட்டைக் கொலை; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, டிசெ.7
கொடிகாமத்தில் தாயையும் மகளையும் வெட்டிக் கொலை செய்த நபரைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.
கடந்த செப்ரெம்பர் 10ஆம் திகதி கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள வீட்டில் வைத்து லோகேந்திரன் ஜெயமேரி (வயது-38), லோகேந்திரன் நிலோஜினி (வயது-18) ஆகியோரை வெட்டிக் கொலை செய்துவிட்டு தலைமறைவான நபரை திருகோணமலை தம்பலகாமம் பொலிஸார் கடந்த 20ஆம் திகதி அங்கு வைத்து கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
கொடிகாமம் பொலிஸார் குறித்த நபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## செயலமர்வு

2013 ஆம் ஆண்டு புதிதாக நியமனம் பெற்ற உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா ஆசிரியர்களுக்கான சேவை முன்னாயத்த வதிவிட செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தமது வாண்மை விருத்தியை அதிகரிப்பதற்காக இந்தச் சேவை முன்னாயத்த வதிவிடப் பயிற்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
எனவே இந்தப் பயிற்சி நெறியில் 2013 ஆம் ஆண்டு புதிதாக நியமனம் பெற்ற உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக் கொண்டுள்ளார். (ந-86)

## பரிசளிப்பு நிகழ்வுகள்

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிறுவர் தின விழாவும், வனிதா வாசனா சீட்டிழுப்பில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது. (ந)

◆ ◆ ◆

கொழும்புத்துறை, டிசெ.7
கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் பா.வின்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.அருணகிரிநாதனும் , சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண் முககுமாரும், கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், பாஷை யூர் பங்குத் தந்தை அருட்திரு. றோய் பேர்டினன்ட் அடிகள் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-135)

◆ ◆ ◆

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும், பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜாக்ரட் சைத்தன்ய சுவாமியும், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி க.அப்பாத்துரையும் கலந்து கொள்வர். (ந)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், டிசெ.7
காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சு.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண காணி ஆணையாளர் பொ.தயானந்தனும், சிறப்பு விருந்தினராக தீவக வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.தனிநாயகமும் கலந்து கொள்வர். (ந)

## கௌரவிப்பு நிகழ்வு

பளை, டிசெ.7
இயக்கச்சி ஊர் வணிகன் பற்று ஆதவன் முன்பள்ளியில் கல்வி பயின்று அடுத்த வருடம் பாடசாலையில் தரம் 1 வகுப்பில் இணையவுள்ள மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு வியாழக்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது.
முன்பள்ளி சமூகத்தினால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்களான லீலாவதி பேரம்பலம், திருமதி நிஷாந்தினி ஆகியோரும் முன்பள்ளி சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். (ந-9)

## இந்து இளைஞர் மன்றம் ஆரம்பம்

தென்மராட்சி, டிசெ.7
வரணிப் பிரதேசத்தில் உள்ள எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி இந்து இளைஞர் மன்றம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.
தாவளை-இயற்றாலை, வரணி-இயற்றாலை, வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, நாவற்காடு, குடமியன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடல்

தென்மராட்சி, டிசெ.7
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவருக்கு இன்றும் நாளை மறுதினமும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருந்த மெய்வன்மைப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத் தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. (வ-9)

## பண்ணிசைப் போட்டி

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் திருவாசக விழாவை ஒட்டிய பண்ணிசைப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.
தரம் 5 தொடக்கம் 10 வரையான மாணவர்களிடையே நடத்தப்படும் இந்தப் போட்டியில் சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி ஆகியவற்றில் நடுவர்கள் கேட்கும் பாடல்களை மோகன இராகத்தில் பாடிக்காட்ட வேண்டும். அத்துடன் சமய பாடம் தொடர்பான பொது அறிவும் மாணவர் களிடையே எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும்.
போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்காக பரிசில்கள் இந்த மாத நடுப் பகுதியில் இடம் பெறும் திருவாசக விழாவில் வைத்து வழங்கப்படும். (ந-8)

## கலந்துரையாடல்

'மரணம் இழப்பு மலர்தல்', 'பிரக்ஞை ஓர் அறிமுகம்' ஆகிய இரு நூல்களின் அறிமுகமும், கலந்துரையாடலும் தியாகி அறக்கட்டளை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்.பல்கலைக் கழக பிரதான நூலகர் சிறி அருள் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும். (ந)

◆ ◆ ◆

சர்வதேச மார்க்சிய குழுவின் கலந்துரையாடல் டி.சி.எம் தனியார் கல்வி நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் 2014 வரவு -செலவுத் திட்டம் நுகர்வோர் நோக்கிய பார்வை என்ற தலைப்பில் கருத்துரையை ஏ.சி.ஜோர்ஜ் வழங்குவார். (ந)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.ஆ. நாகராசா
பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் முதல்நிலை அடையச் செய்து சிறந்த பொது முகாமையாளராக உயர்ந்து 05.12.2015 இல் நடைபெற்ற கூட்டுறவாளர் தின விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
பணியாளர்களாகிய நாங்களும் இவரை நலமுடனும் புகழுடனும் நீடூழி வாழ நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

பணியாளர்கள்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்.



யா/வண். நாவலர் மகா வித்தியாலயம்
அதிபர் சுந்தரம் சிவபாதசுந்தரம் (SLPS - I) அவர்களின்
மணிவிழா சிறப்புமலர் - 07.12.2013

**அருளாசிச் செய்தி**

சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபட்ட நாவலர் உருவாக்கிய பாடசாலையில் அதிபராகப் பதவியேற்று கல்விச்சேவை புரிந்த உயர்திரு சிவபாதசுந்தரம் அவர்களுக்கு மணிவிழா நடத்தி கௌரவிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.
அவருவடைய அகவை அறுபது மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறோம். நாவலர் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவர் இன்னும் நீண்ட நாள் வாழ்ந்து அறப்பணி ஆற்ற எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானின் திருவடி பணிந்து அருளாசி நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.
"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
- ஆதீன குரு முதல்வர்

**வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**

யா/வண்.நாவலர் மகா வித்தியாலயத்தினது அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் அதிபர் சுந்தரம் சிவபாதசுந்தரம் அவர்களது சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.
24.01.2006 தொடக்கம் 06.12.2013 வரை அதிபராகவும், தர்மகர்த்தா சபையினது செயலாளராகவும், பொருளாளராகவும் கடமையாற்றி ஓய்வுபெறும் சுந்தரம் சிவபாதசுந்தரம் அவர்களது பணியை பாராட்டுகின்றேன். இவர் அதிபராக கடமையாற்றிய காலத்தில் பாடசாலையினதும் தர்மகர்த்தா சபையினதும் செயற்பாடுகள் சிறப்புற அமைந்திருந்தன. இவரது ஓய்வுகாலம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.
- வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார்.

**வாழ்த்துச் செய்தி**

சிவபாதசுந்தரம் அவர்களது மணிவிழாவினை முன்னிட்டு வெளிவரும் "சுந்தரம்" என்ற மலரூடாக அவரை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். "செயற்கரிய செய்வர் பெரியார்" என்ற வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து வருபவர் இவர். எமது கழகத்தின் போஷகராக விளங்கியவர்
வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் எட்டு வருடங்கள் சேவையாற்றி கல்வித்தரத்தை மேம்படுத்த உழைத்தது மட்டுமல்லாது பாடசாலையின் கவின் நிலையை மிளிர வைத்த பெருமை அவரைச்சாரும். அவரது சேவையை ஆசிரிய நலன்புரிக்கழகத்தின் சார்பில் பாராட்டி நன்றி தெரிவிப்பதுடன் இவர் சுகதேகியாக இன்னும் பல்லாண்டுகள் சமூகப்பணியாற்றி நூற்றாண்டு விழாக் காண இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
- ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

**வாழ்த்துப்பா**

சைவமும் தமிழும் ஓங்க
தரணியில் தோற்றுவித்த நாவலர்
வித்தியாலய 8 ஆவது நல் அதிபராக
பற்பல சேவையாற்றி
பண்புடன் பணிபுரிந்த நம் அதிபர் வாழ்க
ஏழைப் பிள்ளைகளை
அன்புடன் அரவணைத்து
இன்முகம் காட்டி நின்று
நல்வழி காட்டிய
நம் அதிபர்
ஏற்றமுடன் பல்லாண்டு வாழ்கவே.




பிறப்பு : 07.12.1953
ஆரம்பக் கல்வி : பதுளை/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி : பதுளை/ஊவாக் கல்லூரி
உயர்கல்வி : யா/மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்.
முதல் நியமனம் : 01.06.1976 கணித விஞ்ஞான ஆசிரியர்

சேவை விவரம்
ஆசிரியர் சேவை: பண்டாரவளை சாகிரா கல்லூரி 01.06.1976 - 31.12.1979
ஆசிரியர் பயிற்சி: பலாலி ஆசிரியர் கலாசாலை 01.01.1980 - 31.12.1982
ஆசிரியர் சேவை:
- இர/மில்லவிட்ட தமிழ் கலவன் பாடசாலை
- இரத்தினபுரி 01.01.1983 - 31.12.1987
- யா/உயரப்புலம் M.M.T.S. 01.01.1988 - 31.12.1988
- யா/நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம் 01.01.1989 - 30.05.1991

பிரதி அதிபர் : யா/நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம் 01.06.1991 - 09.09.2001
யா/செங்குந்தக் கல்லூரி 10.09.2001 - 30.09.2002
அதிபர் சேவை : யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் 02.10.2002 - 23.01.2006
யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் 24.01.2006 - 06.12.2013

பாடசாலைச் சமூகம்

**உளம் அறிந்து செயலாற்றும் உன்னத பண்பாளர்**

யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் அதிபர் சுந்தரம் சிவபாதசுந்தரம் அவர்கள் 8 வரு டங்களாக அர்ப்பணிப்பு மிக்க பணியினை ஆற்றிய மைக்காக இவ் வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். வித்தியாலய சமூகத்தின் நல் லெண்ணத்தையும் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்ட வர். அன்புள்ளமும், மாணவ நலனில் மிகுந்த அக்கறையும் கொண்டவர். மாணவர் உளம் அறிந்து செயலாற்றும் உன்னத பண்புள்ளவர். வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி மணிவிழாக் காணும் அதிபரை பாராட்டி வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.
வ.செல்வராசா, மாகாணக்கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.

**காரியங்களை திடமாகச் செய்பவர்**

2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இப் பாடசாலையின் அதிபராக எட்டு வருடங்கள் பணியாற்றியுள்ளார். இவரது சேவைக்காலதில் ஆறு வருடங்கள் ஒன்றிணைந்து கடமையாற்றி வருகிறேன். பாடசாலையில் நடைபெறும் எந்த விழாவானாலும் தானே முன்னின்று இரவு பகல் பாராது நடத்தி முடிப்பதில் வல்லவராகக் காணப்பட்டார். இவரது அளப்பரிய பணியை பாராட்டுவதோடு அவரது எதிர்காலம் நோய் நொடியின்றி சிறந்த உடல் ஆரோக்கியத்துடனும் தனது குடும்பத்தினருடன் பல்லாண்டு வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.
- சி. கணேசலிங்கம், பிரதி அதிபர்

**வாழ்த்துச் செய்தி**

"தோன்றிற் புகழொடு தோன்றுக அன்றில் தோன்றாமலே விடுக" என்ற வாக்கிற்கமைய தன்னலமற்ற கல்விச்சேவைப் பயணத்தில் கண்ணியமான சேவையாற்றியவர் எமது அதிபர். தன் சேவைக்காலத்தில் தன்னால் இயன்ற பணிகளை ஆற்றியவர். தன்னலமற்றசேவை, தளராத மனம், எதையும் துணிந்து செயலாற்றும் தன்மை கடமையுணர்வு என்னும் நற்பண்புகளால் தனியிடத்தை பெற்றவர். மாணவர் நலனில் பெரிதும் அக்கறையுள்ளவர்.
அதிபர் சேவை தரம் - 1 இல் நீண்ட கால அனுபவ முதிர்ச்சி கொண்டு சைவமும் தமிழும் தழைத்தோங்க வழி சமைத்த நாவலர் வழியில் நின்று கடந்த எட்டு வருடங்களாக நற்பணியாற்றிய அதிபரின் ஓய்வு காலம் சிறந்து நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.
- பழைய மாணவர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வின் போது பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 7ஏ, 1பி,1சி பெற்று சாதனை படைத்த மாணவி ஜேசுதாஸ் சுகன்யாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பரிசில் வழங்கி மதிப்பளித்தார். (ந-8)

# சிறந்த வீட்டுத் தோட்டம்: கிளிநொச்சியில் போட்டி

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த வீட்டுத் தோட்டப் போட்டி முதலில் மாவட்டத் திலுள்ள விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு தெரிவுசெய் யப்பட்டவர்களுக்கு மாவட்ட மட்டத்தில் மதிப்பீடு மேற்கொள் ளப்பட்டு முதல் மூன்று இடங் களைப் பெறும் சிறந்த செய்கையாளர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர். சகல வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களும் இந்தப் போட்டியில் பங்குகொள்ள முடியும்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கு முதலாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது பரிசாக 12 ஆயிரம் ரூபாவும், மூன்றாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்திலும், மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்திலும் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தையும் , போட்டி விதிமுறைகள் பற்றிய முழுமையான விவரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர் அலுவலகம் அல்லது மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்துக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாவட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு தைப்பொங்கல் தினத்தையொட்டி நடைபெறும் உழவர் விழாவில் வட்மாகாண விவசாயம் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட விவ சாய உதவிப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார். (க)

# மருத்துவ சேவை வாரத்தில் 2 நாள்

நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் இடம்பெற்று வரும் ஆயுள் வேத மருத்துவ சேவையை, வாரத்தில் இரு நாள்களுக்கு நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனு மதியை வடமாகாண சுதேச மருத்துவ திணைக் கள மாகாண ஆணையாளர் திருமதி சி.துரை ரட்ணம் வழங்கியுள்ளார்.

இதுவரை காலமும் பிரதி வியாழக்கிழமை தோறும் நடைபெற்று வந்த மேற்படி மருத்துவ சேவையை நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலை யினை கருத்தில் கொண்டே வாரத்தில் இரு நாள்கள் என்ற அடிப்படையில் பிரதி திங்கட்கிழமை, வியாழக்கிழமைகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ)

# மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் மூவர் காயம்

வலி. வடக்கு, டிசெ.7

மோட்டார் சைக்கிளால் மோதுண்ட நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை மாலை ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட முதியவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்துக்கு முன்னால் நேற்றுமுன் தினம் மாலை 6 மணியளவில் இடம் பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.கலியுக வரதன் (வயது -73) என்பவராவார்.

தெல்லிப்பழை பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டுள்ளார்கள். (ந-86)

◆ ◆ ◆

மோட்டார் சைக்கிளால் மோதுண்ட நிலையில் படுகாயத்துடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பாடசாலை சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டி தவளகிரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம் அடைந்தவர் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த உருத்திரன் லோகிதா (வயது-10) என்பவராவர்.

குறித்த சிறுமி உறவினருடைய வீட்டுக்குச் சென்று விட்டுத் திரும்பும் வழியிலேயே இந்த விபத்து இடம் பெற்றதாகவும் இது தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. -(ந-86)


◆ ◆ ◆

மோடடார் சைக்கிளால் மோதுண்டு தலையிலும் காலிலும் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் இளம் பெண்ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சைக்கிளில் வந்த பெண்ணை சன நடமாட்டம் அதிகம் உள்ள இடத்தில் மோதிய மோட்டார் சைக்கிளோட்டி அந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் .காங்கேசன்துறை வீதியில் மல்லாகம் பிள் ளையார் ஆலயத்துக்கு அண்மையாக இந்த விபத்து இடம் பெற்றது. மல்லாகத்தைச் சோந்த ஜெயராசா கஜிதா (வயது-23) என்பவரே விபத்தில் படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ந-86)

இருபத்தாறாவது ஆண்டு நினைவு நாள்

அமரர்
வே.த.தணிகாசலம் (தருமாமணி)
(முன்னாள் அதிபர். யா/ஸ்ரீலங்கா வித்தியாசாலை)



மலர்வு 12 . 09 . 1928
உதிர்வு 07 . 12 . 1987

அகிலத்தின் ஒளி விளக்காய் அகத்தின் சுடர் விளக்காய்
பாசத்தின் பகல் விளக்காய் குணத்தின் கோபுர கலச விளக்காய்
குன்றாத மணிவிளக்காய் சுகந்தத்தின் ஏகாந்தமாய்
வாழ்வில் எமைக்காத்த தெய்வமே!
என்றென்றும் உமை மறவோமே!

இராஜஸ்தலம்,
மனோகரா,
அல்வாய்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு முன்பள்ளிச் சிறார்கள், பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**முன்பள்ளி சிறார்களுக்கான சொல்வளப் போட்டி**

செ.அபினயன்-கொடிகாமம் மத்தி முன்பள்ளி, பெ.கிஷானா-கொடிகாமம் அன்னை திரேசா முன்பள்ளி, தெ.டினோஜா-கொடிகாமம் அன்னை திரேசா முன்பள்ளி, து.டிவேதா-கொடிகாமம் மத்தி முன்பள்ளி, ஜெ.யதுர்சிகன்-கொடிகாமம் மத்தி முன்பள்ளி.

**பாடசாலை மாணவர்களுக்கான வாசிப்பு (தமிழ்) பிரிவு-I**

உ.பிரதீஸா-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, ர.புகழினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, ச.வேணுஜா-கச்சாய் அ.த.க.பாடசாலை.

**வாசிப்பு (ஆங்கிலம்) பிரிவு-II**

ஸ்ரீ. வினுஜா-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி, கி.தர்சினி-கொடிகாமம் திரு நாவுக்கரசு ம.கல்லூரி, க.கினோஜா-கொடிகாமம் அரசினர் வித்தி.

**பேச்சு பிரிவு-III**

த.கீர்த்தாயினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி, பூ.டிலக்ஸனா-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி, பு.ஜீவிதா-கச்சாய் அ.த.க. பாடசாலை.

**பொதுஅறிவு பிரிவு-IV**

கோ.டினோஜா-கொடிகாமம் அரசினர் வித்தி., ச.பிரியஷாளினி-கொடிகாமம் திரு நாவுக்கரசு ம.கல்லூரி, நா.தனுஜா-கொடிகாமம் அரசினர் வித்தி., சி.பவித்திரன்-அல்லாரை அ.த.க.பாடசாலை, சு.பரணிதரன்-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி.

**கட்டுரை பிரிவு-V**

யே.மேரிலுவீனா-கொடிகாமம் அரசினர் வித்தி., ந.கோபிகா-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி, ச.துஷாயினி-கச்சாய் அ.த.க.பாடசாலை, இ.பிரியங்கா-அல்லாரை அ.த.க. பாடசாலை.

**சிறுகதை பிரிவு-VI**

கு.தேவகி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி, க.கிருஷா-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி, ச.சர்மினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி.

**சுவரொட்டிப் போட்டி பிரிவு-I**

சி.நிதுஷன்-கொடிகாமம் அரசினர் வித்தி., ந.மீதுஷா-கச்சாய் அ.த.க.பாடசாலை.

**பிரிவு-II**

உ.சாயனா-கச்சாய் அ.த.க. பாடசாலை, ச.சஜீபா-கொடிகாமம் அரசினர் வித்தி., உ.குருஷன்-கொடிகாமம் அரசினர் வித்தி., சு.விதுர்ஸன்-கொடிகாமம் அரசினர் வித்தி.

**பிரிவு-III**

ந.ஆரதி-கொடிகாமம் திருநாவுக் கரசு ஆரம்பப் பாடசாலை, இ.ரிஷாந்த்-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, இ.டிலக்ஸனா-கச்சாய் அ.த.க.பாடசாலை.

**பிரிவு-IV**

ப.அஜித்-போக்கட்டி அ.த.க. பாடசாலை, ச.நிஷானி-கொடிகாமம் அரசினர் வித்தி., அ.தனுஷன்-கச்சாய் அ.த.க.பாடசாலை.

**பிரிவு-V**


அ.புவிதரன்-கச்சாய் அ.த.க. பாடசாலை, றோ.றேணுஜன்-கச்சாய் அ.த.க.பாடசாலை, பொ.சச்சீனா-கச்சாய் அ.த.க. பாடசாலை.

**பிரிவு-VI**

ம.மகிந்தன்-கச்சாய் அ.த.க. பாடசாலை, செ.செல்வகுமார்-கச்சாய் அ.த.க.பாடசாலை, ரா.அகிலன்-கச்சாய் அ.த.க. பாடசாலை. கு.குஜிந்தன்-கச்சாய் அ.த.க.பாடசாலை. (ந-9)

நன்றி நவிலலும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
முத்தையா
மகேந்திரராசா (சிறி)



கடந்த 08-11-2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து உதவிபுரிந்தும், இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கொக்குவில் இந்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், உள்நாட்டு, வெளி நாட்டிலிருந்து மின்னஞ்சல், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு

இன்று (07.12.2013) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில்

எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சேச லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(40912)(12.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசை நிகழ்வு

சைவப் பெருவள்ளலார் சேர் பொன். இராமநாதனின் குருபூசைத் தினவிழா இன்று சனிக்கிழமை நடை பெறவுள்ளது. குருபூசையை முன்னிட்டு காலை 7 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமாலுக்கு 108 சங்காபிஷேகமும், விசேட பூசை வழிபாடுகளும் நடை பெறும். தொடர்ந்து காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சேர் பொன். இராமநாதனின் உருவச்சிலைக்கும், பல்கலைக் கழக சபா மண்ட பத்தில் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தர் வசந்தி அரசரெட்ணம் மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.
மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகக் கேட்போர் கூடத்தில் இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறையினர் மற்றும் நடனத் துறையினர் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

சர்வோதய நீதிச் சேவைகள் இயக்கத்தின் அனுசரணையுடன் பதிவாளர் நாயகம் திணைக்களமும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ் போன்ற ஆவணங்கள் தொலைந்திருந்தால் அவற்றைப் பெற்றுக் கொள்வதோடு இதுவரை பதியப்படாத பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுகளையும் மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தேசிய அடையாள அட்டை சம்பந் தமான நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படும் என்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## வாய்த் தர்க்கம் கை கலப்பில் முடிந்தது

வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தால் ஒருவரின் கை அடித்து டைக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. கை முறிந்த நிலையில் குறித்த நபர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சுன்னாகம் நகரப்பகுதியில் அமைந்துள்ள வாழைக் குலைச் சந்தைக்கு அருகாமையில் உள்ள இரும்புக் கடையில் உள்ள ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையில் இடம் பெற்ற வாய்த்தர்க்கமே கைகலப்பு வரை சென்று முடிவடைந்துள்ளது.
இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த நிலையில் சுன்னாகத்தைச் சோந்த சின்னத்துரை அன்பழகன் (வயது - 55) என்பவர் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ந-86)

## மரண அறிவித்தல்



### கந்தசாமி தங்கராஜா

உடுப்பிட்டி வாசிகசாலையடியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தங்கராஜா 05.12.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பூங்கமலாவின் அன்புக் கணவரும், நடராசாவின் அன்புச் சகோதரரும், தேவகி ரவீந்திரகுமார், தங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார், விஜயநாயகி, அசோக்குமார், ஜீவகுமார், சுதாகரன், பிறேம்குமார், சுதர்சினி, பிரியதர்சினி ஆகியோரின் பெரிய தந்தையும், வாகிஸ்வரனின் சிறிய தந்தையும், லவன், லக்மன், தனேஸ், காயத்திரி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச் சாலையில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி14150) (12.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்வராசா கிருபாகரன் (கிரு)

391, நாவலர் றோட், நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா கிருபாகரன் நேற்று (06.12.2013) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நல்லூர், யாழ்ப்பாணம். (40914) (4.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## நாடகமும் பட்டிமன்றமும்

யாழ்ப்பாண சர்வ மத குழுவினரின் ஏற்பாட்டில் 'கல்வி கலாசாரத்தை மீள் எழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் நாடகம், பட்டிமன்றம் என்பன நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வு கலைத்தூது கலையகத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந)

## ஒளிவிழா

தென்னிந்தியத் திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய முன்பள்ளிச் சிறார்களின் ஒளிவிழா இன்று சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-9)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தில்லைநாதன் [காந்தி]

(இளைப்பாறிய உத்தியோகத்தர் நெடுந்தீவு பிரதேச செயலகம்)



நெடுந்தீவு மேற்கு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 309, கரும்புள்ளியான், நட்டாங்கண்டலை வதிவிடமாக வும் கொண்ட சின்னத்தம்பி தில்லைநாதன் 03.12.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-பராசக்தி தம்பதி யரின் அன்பு மகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம்- வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி :
077 310 1110
077 326 2057

(சி/14294)(7.6.3) தகவல் : குடும்பத்தினர்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முறைசாராப் பிரிவில் 3 மாத கால சிங்கள மொழிப் பாட நெறியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. (க-402)

## மரண அறிவித்தல்கள்

### அப்புக்குட்டி சிவராஜசிங்கம் நெவின்ஸ்

( முன்னாள் உரிமையாளர் -
மல்லிகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், கொழும்பு - 12)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி சிவராஜசிங்கம் நெவின்ஸ் 04.12.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார்-காலஞ்சென்ற அற்புதம் அவர்களின் கணவரும், லெனின்ராஜ், ஜெயராஜ் (YFC & LPF), லவன்ராஜ் (ஜேர்மனி), சுகுணராஜ் (BTTB), ராஜ்கண்ணா (Charm Advertising ) ஆகியோரின் தந்தையும், எமிலி, வள்ளி, சசிகலா, நெலுனிகா, சங்கீதா ஆகியோரின் மாமனும், ஜோயல், அயலீன், கேனாஷ், அக்ஷா, மெலனி, அந்தனி, சந்தோஷ் ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற சிவரூபலீலா மற்றும் சிவஞானசுந்தரம், சிவமங்கையர்க்கரசி, காலஞ்சென்ற ஜெயசிங்கம் மற்றும் ஜெயமணிதேவி, காலஞ்சென்ற சிவஞானசுப்பிரமணியம் மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.12.2013) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு. மாதம்பிட்டிய பொது மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.80, Walls lane,
Colombo - 15

(40885) (45.6.3) தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சரவணமுத்து



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சரவணமுத்து 03.12.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான காளிப்பிள்ளை-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நேசரத்தினம் மற்றும் சபாரத்தினம், காலஞ்சென்ற விஜயம்மா மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான முருகேசு, கந்தையா, பொன்னையா, செல்லையா, தம்பிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், ஜெயராசா (கனடா), ஜெயராணி, ஜெயகாந்தன் (லண்டன்), ஜெயமோகன், ஜெயமணி (கனடா), ஜெயமாலினி (கனடா),ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றைய தினம் அச்சுவேலி பத்தமேனியில் உள்ள பெறாமகன் செல்வராசாவின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி,
அச்சுவேலி.

(40881)(7.6.3) தகவல் : பொ. செல்வராசா

## கஜமுக சங்காரம்

வவுனியா, டிசெ.7
வவுனியா-வைரவப் புளியங்குளம் ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை 4 மணிக்கு கஜமுக சூரசங்காரம் நடைபெறும்.
இந்த ஆலயத்தில் திருவெம்பாப் பூசைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி பத்து நாள்கள் நடைபெறும். இந்த வைபவத்தின் போது பிரதம குருவாக ஸ்ரீ சிதம்பரலஷ்மி திவாஹரக்குருக்கள் பணியாற்றுவர். (ந-402)

* * *

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை கஜமுக சூரசங்கார விழா இன்று சனிக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெற வுள்ளது. (ஒ)

## தம்பு கந்தையா

(முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினரும், சமாதான நீதிவானும்)



கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கந்தையா 03.12.2013 செவ்வாய்க்கிழமை ஹொலண்ட்டில் சிவபதம் எய்திவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-பார்வதி தம்பதியரின் பாசமிகு புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், நவகுமாரி (ஹொலண்ட்), கமலாதேவி (ஹொலண்ட்), கலாமதி (ஹொலண்ட்), அருள்நேசர் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தியாகராசா (B.A) மற்றும் சிவபாக்கியம் (இலங்கை), கனகசபை (L.L.M - கனடா), நடராசா (மிருக வைத்தியர்-கனடா), சரஸ்வதி (கனடா), புவனேஸ்வரி (இலங்கை), சுப்பிரமணியம் (BSc.Eng-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திராணி (இலங்கை), காலஞ்சென்ற சண்முகராசா (இலங்கை) மற்றும் இரஞ்சிதமலர் (கனடா), நாகேஸ்வரி (கனடா), சுப்பிரமணியம் (கனடா), கணபதிப்பிள்ளை சட்டத்தரணி (BA.JPUM-இலங்கை), விஜயலட்சுமி (லண்டன்), காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, கணேசலிங்கம், லோகநாதன் (எழுத்தாளர்), சாவித்திரி மற்றும் மகேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஜெயக்குமார் (ஹொலண்ட்), வடிவேல் (ஹொலண்ட்), மகிந்தன் (ஹொலண்ட்), சௌதாமினி (BSc-ஹொலண்ட்) ஆகியோரின் மாமனாரும், சிவாஜினி, விதுசன், கஜந்தன், கிரிஷாந்த், வாசுகி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (11.12.2013) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஹொலண்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
0031 251 243 462 (ஹொலண்ட்)
0031 619 804 485

(40897)(7.6.3) தகவல் : மனைவி, பிள்ளைகள் மற்றும் சகோதர, சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. தென்மேற்கு வீதிகளை பார்வையிட்டனர் அதிகாரிகள்

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மீள்எழுச்சி (புறநெகும) திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் வீதிகளை நேரில் சென்று பார்வையிட்ட மீளெழுச்சித் திட்ட அதிகாரிகள் இது தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

புறநெகும திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஐந்து வீதிகள் சுமார் 6 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக கனரக வாகனங்கள் மூலம் கருங்கற்கள் பறிக்கப்பட்டுப் பார்வையிட வசதியாக குவித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வலி.தென்மேற்குப் பிரதேசத்துக்கு வருகை தந்த மீளெழுச்சித் திட்ட அதிகாரிகள் புனரமைக்கப்படவுள்ள ஐந்து வீதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டதுடன் பிரதேச சபை உறுப்பினர்களை நேரில் சந்தித்துத் தற்போதைய நிலை குறித்துக் கலந்துரையாடினர்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் இடம்பெறும் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் எந்தவிதமான குறைபாடுகளுமின்றிக் குறித்த தினங்களுக்குள் செய்து முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் கண்காணிப்பு குழுக்களின் உறுப்பினர்களும் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்று அதிகாரிகள் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டனர்.

> “ - ” புறநெகும திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்குப் பிரதேசத் தில் ஐந்து வீதிகள் சுமார் 6 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

# நம்பகம் மிக்க சேவையை கூட்டுறவு வழங்க வேண்டும்

## வடமாகாண கூ. அ. ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் தற்போது பல்வேறு முன்னேற்றங்கள் காணப்பட வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் நம்பகத்தன்மையுடன் மக்களுக்கான சேவையை கூட்டுறவுத் துறை வழங்க வேண்டும் என்று வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் 49 ஆவது நினைவு தினமும் 91 ஆவது சர்வதேச கூட்டுறவுத்தின விழா பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் கூட்டுறவுச் சபை செயற்பட்டு வரு கிறது.

அந்தவகையில் பணியாளர்கள், அங்கத்தவர்கள், பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து கூட்டுறவு தினத்தை முன்னிட்டு போட்டிகளை நடத்தியமை பாராட் டக் கூடிய விடயம். இதனைவிட கூட்டுறவுச் சங்கங்களில் நீண்டகாலமாகப் பணிபுரிந்த பணியாளர்கள் கௌரவிக்கப்படுவதும் வரவேற்கத்தக்கது.

இத்தகைய செயற்பாடுகள் கூட்டுறவுத்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள் வதற்கு வாய்ப்பாக அமைவதுடன் அதன் விளைவுகளையும் அனுபவிக்க வாய்ப்பை ஏற்படுத்தி வைக்கிறது.

எனினும் யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கூட்டுறவுத் துறை இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறது.

இதற்கான மாற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது- என்றார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் வடமா காண சபையின் அவைத் தலை வர் சி.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபை உறுப்பினர்கள், கூட்டுறவாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-14-21)

# தனங்கிளப்பு வீதியிலுள்ள மதகு விரைவில் புனரமைப்பு

தென்மராட்சி, டிசெ.7

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு சேதமடைந்த மதகு புனரமைக்கப்படவுள்ளது. இதனால் மதகு புனரமைப்புக்காக வீதிக்கு அருகில் தற்காலிக பாதை அமைக்கப் பட்டுள்ளது. தற்காலிக பாதையின் அகலம் போதாததால் பஸ்கள் மற்றும் பார ஊர்திகள் செல்வதில் சிரமங்கள் ஏற்படலாம் என்று தெரிவிக் கப்பட்டது.

வயல் வேலைகள் நடைபெற்று வரும் இந்த வேளையில் மதகு புனரமைப்பு இடம்பெற்றால் நெற் செய்கையாளர்களும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக் கப்பட்டது. அத்துடன் சாவகச்சேரியிலிருந்து தனங்கிளப்பு வரையான 3 கிலோமீற்றர் தூரம் வரையான வீதியின் பல இடங்கள் சேதமேற்பட்டு, மழை வெள்ளம் தேங்கி நிற்பதைக் காண முடிகிறது. (வ-9)



# கூட்டுறவு நிகழ்வில் சுடச்சுடப் பால்

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்திய நிகழ்வில் சுடச்சுடப் பால் வழங்கப்பட்டமை நிகழ் வில் கலந்து கொண்டோரால் பாராட்டுக்கு உட்பட்டது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை ஏற்பாடு செய்த கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் 49 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டுறவுப் பணி யாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், அங்கத்தவர்கள், விருந்தினர்கள் உட்பட அனைவருக்கும் ஒரு மித்ததாக பால் வழங்கப்பட் டது.

யாழ்.மாவட்டத்தில் நடைபெறுகின்ற விசேட நிகழ்வுகளில் குளிர்பானத் துக்காக மென் பானங்கள் வழங்கப் பட்டு வரும் நிலையில் இதற்கு முன் மாதிரியாக கூட்டுறவுச் சபை நடத்திய நிகழ்வில் குடி பானத் துக்காக சுடச்சுட பால் வழங்கப்பட்டமை அனைவ ராலும் பாராட்டப்பட்டது. (வ-14)



உங்கள் குடும்ப நற்செய்தி

உங்கள் குடும்பத்தின் நீ 1 சஞ்சிகை ஒளி அரசி வெளிவந்துவிட்டது.

இல்லத்தரசிகளின் தோழி (தனித்துவ சஞ்சிகை)

டிசம்பர் மாத இதழ்

வரையறுக்கப்பட்ட பிரதிகளே அச்சிடப்பட்டுள்ளதால் உடன் பத்திரிகை முகவர்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

இதன் உள்ளடக்கங்கள்

1
- பெண்ணின் / தாயின் பெருமையை தெளிவாக விளக்கும் கட்டுரைகள்.
- குடும்பத்தின் வெற்றிக்கு பெண்களுக்கு தேவையான முக்கிய ஆலோசனைகள், வழிகாட்டல்கள்.
- பெற்றோர்கள் சிந்திக்க வேண்டிய சமூகப் பொறுப்புக்கள்.
- மூன்று மதங்களுக்குமான சமய அனுஷ்டானங்கள்.
- இல்லத்தரசிகளுக்கான அறிவியல், நகைச்சுவைகள்.
- சுவையாக சமைப்பது எப்படி?
- மருத்துவ ஆலோசனைகள்.

உட்பட குடும்பத் தலைவிகளுக்கான 75% ஆக்கங்கள்

2
ஏனைய அங்கத்தவர்களுக்கான பயன்மிக்க 25% ஆக்கங்கள்
- நங்கையர்களுக்குரிய அழகுக்கலைக் குறிப்புகள்.
- விளையாட்டுச் செய்தித் தொகுப்பு. (நவம்பர் மாதம்)
- ஆரோக்கிய விளையாட்டு கட்டுரைகள்.
- தந்தைக்குரிய முக்கிய கடப்பாடுகள்.
- விரிவான இராசி பலன்கள். (டிசம்பர் மாதம்)

3
- குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் அறிவியல் ரீதியாகப் பயன் பெறக் கூடிய பணப்பரிசிற்குரிய போட்டிகள்.
- மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டிகள்.
- குறுக்கெழுத்துப் போட்டிகள்.
- கவிதைப் போட்டி - பேசும் படம்
- சொற்றொடர் ஆக்கப் போட்டிகள்
- விளையாட்டுப் பிரியர்களுக்கான போட்டிகள்.

இவை அனைத்தும் 60/= ரூபாவில்

4
- சிறுவர்கள், வளர்ந்தோருக்கான கல்வி, அறிவு ரீதியான தகவல்கள்.
- மழலைகளுக்கான நற்பழக்கங்கள் - படவிளக்கம்
- தரம் 4, 5, 6 மாணவர்களுக்கேற்ற Moral Stories - ஆங்கிலம், தமிழ் வேறுபாடுகளை இனம்காணும் திறன்
- அறிவியல் விடுகதைகள்
- சிறுவர்களுக்கான நல்வழிக் கதைகள்
- Grade 5, O/L, A/L மாணவர்களுக்கான நேரடியான கல்விசார் தரமான சில வினாக்களின் தொகுப்பு - விடைகளுடன்.

மொத்தத்தில் அரசியல், பாலியல் கலவையற்ற ஒரு படைப்பு. குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் சந்தோசமாகப் படித்து பயன் பெறக்கூடிய ஒரு பரிணாம படைப்பே 'ஒளி அரசி'

விநியோக, விளம்பரத் தொடர்புகள் : தலைமை அலுவலகம் - 011 5737592 / 071 4273035 / 071 4114997
யாழ் - 021 5677222 / 071 6182182 கிளிநொச்சி, முல்லைத்தீவு - 021 2280065 வவுனியா, மன்னார் - 077 0274025

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியை
திருமதி பத்மா முருகதாஸ் அவர்களின் அன்புத் தாய்

திருமதி தங்கம்மா தம்பிராசா

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை,
கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## FACULTY OF SCIENCE
## UNIVERSITY OF JAFFNA

General Degree Examination in Science - 2012 Levels 1G, 2G, 3G Degree of Bachelor of Science in Computer Science Examination Levels - 2012 1S, 2S, 3S, 4S

Special Degree Examination in Science - 2012 Levels 3M, 4M

### END OF COURSE EXAMINATION IN SECOND SEMESTER COURSE UNITS

End of Course Examinations in the Course Units conducted in the Second Semester will commence in **February 2014**.

Students who wish to sit for the above End of Course Examinations as Repeat Candidates are requested to submit their duly filled Examination Entry Forms along with receipt for payment of examination fee at the Office of the Dean/Science on or before **20th December 2013**. Examination Entry Forms could be obtained from the Office of the Dean/Science.

06.12.2013 (கீ/14295)(10.14) **Registrar.**

### சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து) பாரவூர்தி விற்பனைக்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்துக்கு சொந்தமான 48-1105 இலக்க அசோக் லேடன் பாரவூர்தி விற்பனை செய்யப்படவுள்ளது. இப்பாரவூர்தியை கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கூறு விலைகளை 23.12.2013 ஆம் திகதிக்கு முன்னதாக பொது முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கூறுவிலை கோரல் பாரவூர்தி விற்பனை'' எனக் குறிப்பிட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1. பாரவூர்தியின் செயற்பாடு, தன்மையினை காரியாலய நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.
2. கூறுவிலை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

சாவகச்சேரி
ப.நோ.கூ.சங்கம். (சி/2800) (10.6) பொதுமுகாமையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு தாதியருக்கு பயிற்சி

*பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தோருக்கு வழங்க ஏற்பாடு*

கொழும்பு,டிசெ.7
வெளிநாட்டு தாதியர் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் செயற்றிட்டத்தை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.
இதன்கீழ், பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ் தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

"-" பாகிஸ்தான்,பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைய, இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பாகிஸ்தான்,பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைய, இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சின் பயிற்சி மற்றும் ஆய்வுகள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் சுனில் டி அல்விஸ் குறிப்பிட்டார்.
நாட்டின் சுகாதார சேவைகள் தொடர்பில் சர்வதேச நாடுகளில் கிடைத்த அங்கீகாரம் இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கு முக்கிய காரணம் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# விரிவுரையாளர்கள் நாடு திரும்பவில்லை

கொழும்பு,டிசெ.7
மேலதிக கல்வியைப் பெற்றுக்கொள்ள புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்றுள்ள சுமார் 500 விரிவுரையாளர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை என்று உயர்கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
அவர்களுக்கு நாடு திரும்புமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டதையடுத்து, சுமார் 20 பேர் நாடு திரும்பியுள்ளனர் என்று அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.
நாடு திரும்பியுள்ள விரிவுரையாளர்களுக்கு மீண்டும் பல்கலைக்கழகங்களில் பதவிகளை வழங்குவதில் சிக்கல் தோன்றியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)



பிலிப்பைன்ஸில் அண்மையில் வீசிய புயலால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு சுகாதார வசதிகள் வழங்கும் நோக்கில் இலங்கையில் இருந்து வைத்தியக் குழுவொன்று பிலிப் பைன்ஸ் செல்லவுள்ளது.
இந்த வைத்தியக் குழு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தனர்.



யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையால் கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 49ஆவது நினைவுதின நிகழ்வும் 91 ஆவது கூட்டுறவு தினைத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன. யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும், கௌரவ விருந்தினர்களாக தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவர் சந்திர பண்டாரவும் சிறப்பு விருந் தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், எஸ்.சுகிர்தன், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை பிரதம முகாமையாளர் சுசிந்திரன், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்த வநாதன், முன்னாள் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ.கனகசபாபதி ஆகியோரும் கலந்து கொண்டனர். யாழ்.மாவட்ட கூட்டுற வுச் சங் கங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற தலைவர்கள், பொது முகாமையாளர்கள் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ந-135)

## கஜமுக சங்காரம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 07
நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய கஜமுக சங்காரம் இன்று சனிக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதேவேளை, விநாயகர் விரதப் பெருங்கதைப் பூர்த்தி நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் 108 சங்காபிசேகமும், 52 திரவிய கணபதி ஹோமமும் இடம்பெறவுள்ளது. (த-400)

# இந்தியாவுடன் முரண்பட்டால் முழு நஷ்டம் இலங்கைக்கே

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.7
"இந்தியாவுடனும் ஐரோப்பாவுடனும் மோதிக்கொண்டும், முரண்பட்டுக் கொண்டும் இலங்கையால் வர்த்தகத் தில் ஈடுபடமுடியாது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமான சேவைகள் உள்ளிட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
துறைமுகங்களைப் பொறுத்தவரையில் இலங்கை இன்று 32ஆவது இடத்தில் இருப்பது உண்மை. எனினும், இலங்கைத்துறை முகங்கள் ஏற்றுமதி இறக்கு மதியிலன்றி இடைத் தங்கல் நடவடிக்கைகளிலேயே தங்கி யுள்ளது.
இந்தியரின் நடவடிக்கைகளிலும் இலங்கையின் துறைமுகங்கள் தங்கியுள்ளன.
தமது துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் 5 வருட திட்டமொன்றை இந்தியா முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டம் எந்த அரசு வந்தாலும் நடை முறைப்படுத்தப்படும்.
அந்தவகையில், சேது சமுத்திரத் திட்டத்தை இந்தியா ஆரம்பித்துள்ளது. அந்தத் திட்டம் பூர்த்தியானால் மேற் குலகுக்கும், கிழக்குலகுக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்தப்படும் - என்றார். (ச)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு
தொடர்பு: 077 0090 425, 077 7741 750
(40929) (10,14)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுன்னாகம், கே.கே.எஸ் வீதி, ஜெற்மோட்டோர்ஸ் அருகில் சுற்றுமதிலுடன் கூடிய பெரிய நாட்சார் வீட்டுடன் பதினான்கு பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
(40919) (10,14) 021 321 2863, 0041795993592

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் அச்சக வீதியில், சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 0090 425, 077 7741 750
(40923) (10,14)


## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா தம்பிராசா



சரவணை கிழக்கு, மயிலப்புலத்தைப் பிறப்பிடமாகவும் 25,மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்கமா தம்பிராசா நேற்று முன்தினம் (05.12.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி -தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், பத்மா (ஆசிரியை, யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை), திருச்செல்வம் (சுவிஸ்), நந்தகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற சிறிகாந்தன் மற்றும் கௌசலாதேவி, சிறிசெல்வம் (ஆசிரியர், யா/ வேலணை கிழக்கு மாகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், முருகதாஸ் (சாரங்கா நகை மாடம்), பாம கேதினி (சுவிஸ்), ருபராணி (சுவிஸ்), சந்திரலிங்கம் (ஞானா கலஞ்சியம்), துஷாந்தினி (அபி விருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியும், துளசி (முகாமைத்துவ உதவியாளர், கல்வி அமைச்சு வடமாகாணம்), தனுஜா (A/L 2013 யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை), கஜானன் (சுவிஸ்), ஆருதி (சுவிஸ்), நிதுஜன் (தரம்-4 மாணவன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), அபிஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் தம்பு, இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்ற யோகராசா மற்றும் தங்கம்மா, செல்லம்மா, இராசம்மா, கந்தசாமி, சந்திரகாந்தா, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**25, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி** தகவல்: குடும்பத்தினர்.

# கொலை, கொள்ளை, வன்முறையை வடக்கு, கிழக்கில் தடுத்துநிறுத்துக

## அரசை வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.



கொழும்பு,டிசெ.7
முழுமையான இராணுவ நிர்வாகம் நிலவும் வடக்கு மற்றும் கிழக்கில் எவ்வாறு கொலை, கொள்ளை மற்றும் வன்முறைகள் இடம்பெறு கின்றன. இந்தச்செயற்பாடுகளை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தி அங்கு சிவில் நிர்வாகத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.
இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி வலியுறுத்தியுள்ளார்.
வடக்கு, கிழக்கில் போர் நிறைவடைந்து 5 வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் ஒரு மோதலை ஏற்படுத்தும் நோக்கிலேயே அரசு செயற்படுகின்றது. மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்று அங்கு ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதாக வெளியுலயகுக்கு காட்டப்படுகின்றபோதிலும் அங்கு ஜன நாயக மீறல்களே இடம்பெற்று வருகின்றன.
குறிப்பாக மாகாண சபைத் தேர்தலின்பின்னர் மக்களால்தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களின் வீடுகள் மீது தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. கடந்த 25ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச சபை யின் ஆளும்கட்சி உறுப்பினர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள் ளார்.
இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவின ரால் சூழப்பட்டு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ள வடக்கு, கிழக்கில் மனிதக் கொலைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களை யார் முன்னெடுக்கின்றனர். இவ் வாறான செயற்பாடுகளுக்கு யார் உத்தரவிடுகின்றனர் என்பதை நாட்டு மக்களுக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும்.
பொதுநலவாய மாநாட்டிற் காக இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டன. ஆனால் யாழ். பல்கலைக்கழ கத்திற்கு மாத்திரம் நீண்ட தொரு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. என்ன காரணத்துக்காக அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு, கேப்பாப் பிலவு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் மக்கள் தமது வருமானத்திற்காக வளர்த்த மூவாயிரம் மாடுகளை இராணுவத்தினர் பிடித்து பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அம் மக்களின் வருமானம் சுரண்டப்படுகின்றது.
வடக்கு கிழக்கில் இடம்பெறும் மனிதக் கொலைகள், பொது மக்களின் சொத்துக்களைச் சூறையாடுதலைத் தடுத்து நிறுத்தி அங்கு சிவில் நிர்வாகத்தை உடனடியாக ஏற்படுத்தவேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் படுகொலையில் அரசு சிக்குவது உறுதி

## ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.7

"திருகோணமலை, மூதூரில் 17 தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் சுயாதீனமான உள்ளக விசாரணையை இலங்கை அரசு நடத்தாவிடின் சர்வதேச விசாரணையில் சிக்குவது உறுதி. இதில் எவ்வித மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை" என ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்தது.

"போரின்போது மீறப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமாகவும் அரசுக்கு மார்ச் மாதத்தில் பலத்த அடி காத்துக் கொண்டிருக்கிறது" என்றும் அது தெரிவித்தது.

நாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்கூட்டத்தொடரின் போது அரசுக்கு சர்வதேச அழுத்தங்கள் குவியும் எனத் தற்போது எதிர்வு கூறப்படுகிறது.

இந்நிலையில், 2006 ஆம் ஆண்டுமூதூரில்தனதுதொண்டு நிறுவன பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை தொடர்பாக சர்வதேச விசாரணையில் ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தயார் என அக்ஷம் பாம் (ஏ.சி.எவ்) நிறுவனம் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுபோன்ற சிக்கல்கள் தொடர்பாக வினவியபோதே ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான லால் காந்த மேலும்தெரிவித்தவைவருமாறு:

அரசு, சர்வதேச விசாரணைகள் குறித்து அக்கறை செலுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஒரு நாட்டைப் பொறுத்த மட்டில் போர் செய்ய மாத்திரமே உரிமையுண்டு. மாறாக போர்க் குற்றம் புரியும் உரிமை அதற்கு இல்லை. ஆனால், இலங்கையோ இரண்டையும் செய்து விட்டது. இதை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். இதனாலேயே தற்போது உள் நாட்டுப் பிரச்சினைக்குள் உலக நாடுகள் மூக்கை நுழைக்கின்றன.

இதற்கு இந்த அரசும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுமே காரணம். இவர்களின் செயற்பாட்டால் இன்று நாட்டிலுள்ள அனைவருமே பாதிக்கப் பட்டுள்ளோம். சென்ற வருடமே போர் குற்றச்சாட்டு குறித்து சுயாதீன விசாரணை நடத்துமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா. பல முறை கோரிக்கை விடுத்தது.

அதுமட்டுமல்லாமல், ஐ.நாவின்மனிதஉரிமைகள்ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தந்து அரசு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என மீண்டும் வலியுறுத்தி விட்டுச் சென்றார். ஆனால், அரசோ இன்னமும் இதுவிடயத்தில் அக்கறை கொள்ளவேயில்லை.

தற்போது மூதூர் கொலை தொடர்பிலும் அரசுக்கு அழுத்தம் வந்து விட்டது. இப்படியே பிரச்சினைகள் நீடித்துக் கொண்டே போனால் நாட்டு மக்கள் எவ்வாறு நிம்மதியாக வாழமுடியும்? ஆனால், அரசுக்கு 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பெரியதோர் ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது என் பது மட்டும் இவற்றிலிருந்து தெளி வாகத் தெரிகிறது.

இதிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமெனில் மூதூரில் 17 பேர் கொல்லப்பட்டமை மற்றும் போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து உடனே சுயாதீன உள்ளக விசாரணையை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் சர்வதேசம் பொறுமை மீற வேண்டி ஏற்பட்டு விடும்" என்றார். (சி)

# நெல்சன் மண்டேலாவுக்கு நாடாளுமன்றில் அஞ்சலி

கொழும்பு, டிசெ. 7

நிறவெறிக்கு எதிராகப் போராடி கறுப்பின மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த உன்னத தலைவ ரும், தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியுமான மறைந்த நெல்சன் மண்டேலாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜனநாயகத் தேசியக் கூட்டணியும் நேற்று சபையில் வீர வணக்கம் செலுத்தின.

நாடாளுமன்றில் நேற்று இடம் பெற்ற கல்வி, உயர்கல்வி உள்ளிட்ட அமைச்சுகள் மீதான குழுநிலை விவா தத்தில் உரையாற்றியபோதே மேற்படி வீரவணக்கம் செலுத்தப் பட்டது.

"நிறவெறியை எதிர்த்து கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடிய அமரர் நெல்சன் மண்டேலா நேற்று (நேற்றுமுன்தினம்) தனது 95ஆவது வயதில் காலமாகியுள்ளார். உலக மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த உன்னதத் தலைவருக்கு நாம் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்" எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொன் செல்வராசா, ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் சுனில் ஹந்துன்நெத்தி கூறி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன், ஆளுந்தரப்பு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வரும் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தினார். (சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நெடுந்தீவை

ஆகியோர் இக் குழுவில் அடங்கியிருந்தனர்.

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேறிய அதே நேரத்தில் தீவகத்தில் ஊர்காவற்றுறை தவிர்ந்த ஏனைய கட்சி அலுவலகங்களை இழுத்து மூடுவது எனவும் அக் கட்சி முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சகோதரப் படுகொலையில் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் ஈடுபட்டதை அடுத்து தீவக மக்கள் மத்தியில் எழுந்துள்ள கடும் எதிர்ப்பு உணர்வலைகளே ஈ.பி.டி.பியின் இந்த முடிவுக்கு காரணம் என்று சொல்லப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் சகோதரப் படுகொலையைக் கண்டித்து வந்த ஈ.பி.டி.பியின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர் அதே சகோதரப் படுகொலையில் ஈடுபட்டமை மக்கள் மத்தியில் விசனத்தையும் கடும் எதிர்ப்பையும்ஏற்படுத்தியுள்ளது. (உ-7-400)

### கடனுக்காக

பணத்தைத் தனது மனைவி மூலம் பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானித்தார் கணவன்

இதனையடுத்து அவரது வீட்டுக்கு வந்து செல்லும் வவுனியா யுவதி ஒருவரைப் போன்று தனது மனைவியையும் தகாத நடத்தையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தியுள்ளார் கணவன். குறித்த யுவதி வவுனியாவில் தகாத நடத்தையில் ஈடுபட்டு வருபவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மனைவியை இவ்வாறு செய்வதன் மூலம் பெறப்படும் பணத்தைக் கொண்டு வங்கிக் கடனை அடைக்க முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி இது தொடர்பில் அவரது மனைவி யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்தார். இதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட கணவனை எதிர்வரும் வியாழக் கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த-4-86)

### 23 ஆவது

ஐந்து நாள் பயணமாக நாளை இலங்கை வரும் அவர் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவராக யசூசி அகாஷி 2002 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டதன் பின்னர் 23 ஆவது தடவையாக அவர் இலங்கைக்குப் பயணம் செய்கிறார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றார்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் யசூசி அகாஷி முதன் முறையாக இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதால் அவருடைய வருகை முக்கியமானதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-5)

### குடாநாட்டு

யப்பட்டு ஒன்றரை மாதங்களாகும் நிலையில் அதே கட்சியைச் சேர்ந்த உறுப்பினரான றெக்ஷயன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

றெக்ஷயனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடமாகாண சபை எதிர்க் கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்), மற்றொரு உறுப்பினரான ஜசிந்தன், றெக்ஷயனின் மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர். 9 மில்லி மீற்றர் கைத் துப்பாக்கியாலேயே றெக்ஷயன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2006,2007,2008,2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் பலர் கடத்தப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில்பலர் 9 மில்லி மீற்றர் கைத் துப்பாக்கியாலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைகளுக்கும் இப்போது கைதாகியுள்ளவர்களுக்கும் தொடர்பு உள்ளதா என விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா? என்று ஊடகவியலாளர்கள் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர், நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் றெக்ஷயனின் கொலை தொடர்பில் விசாரணை நிறைவடைந்துள்ளது. ஆனால் அவரது கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கமல் உட்பட்டவர்களிடம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவினர் பல கோணங்களில் விசாரணை முன்னெடுப்பர். விசாரணையின் மூலமாகவே மிகுதி விடயங்கள் தெரிய வரும் - என்றார். (த-4)

### சட்டவிரோத ஆயுதம்

குற்றச்சாட்டில் ஈ.பி.டி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் உட்பட மூன்று பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒக்ரோபர் 12 ஆம் திகதியும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரின் உதவியாளர் ஒருவரை யாழ்.நகரில் பிஸ்டலுடன் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

கமலேந்திரனின் உதவியாளர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டபோது அந்தக் கட்சி அலுவலகங்களில் பொலிஸார் தேடுதல், விசாரணை நடத்தியிருந்தால் நெடுந்தீவில் றெக்ஷயனின் கொலையைத் தடுத்திருக்கலாம் அல்லவா என்று செய்தியாளர்களால் பொலிஸ் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்கள், யாழ்ப்பாணத்தில் சட்ட விரோத துப்பாக்கிகள் எத்தனையோ உள்ளன . இவை தொடர்பில் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர்தான் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அதில் தமது பங்கு குறைவானதே என்று தெரிவித்தனர். (த-4)

### [illegible]

இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை கடந்த வாரமே முற்றுப் பெற்றதாகவும், இந்த வார ஆரம்பத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நடத்தி குறித்த அறிக்கையை வெளியிடவுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் விசாரணை அறிக்கையை வெளியிடுவதில் ஏன் தாமதம் என்பது தொடர்பில் அமைச்சின் செயலாளரிடம் கேட்ட போது,

இது தொடர்பில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தி விரைவில் அறிக்கையை வெளியிடுவார் என்று தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் ப. சத்தியலிங்கத்துடன் தொடர்பு கொள்ள முயன்ற போது, அவர் கூட்டம் ஒன்றில் இருப்பதாகத் தெரிவித்த அவரது உதவியாளர், விரைவில் ஊடகவியலாளர் சந்திப்பில் அறிக்கை வெளியிடப்படும் என்பதை மட்டுமே தெரிவிக்கச் சொன்னதாகவும் குறிப்பிட்டார்.

கட்டாயக் கருத்தடை செய்து கொண்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்று சுகாதார அமைச்சின் செயலர் இ.ரவீந்திரனிடம் கேட்டபோது,

அவர் நிமோனியாவினால் இறந்ததாக வைத்தியசாலை அறிக்கை கூறுகின்றது. நீங்கள் (ஊடகங்கள்) தேவையில்லாமல் செய்தி போடுகிறீர்கள் என்று கூறினார்.

அப்படியானால் அவரது வயிற்றில் கரு இருக்கும்போது கருத்தடை செய்தது சரியா ? இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுமா என்று மீண்டும் அவரிடம் கேட்ட போது, விசாரணை நடத்தப்படும் என்று மட்டும் பதிலளித்தார். (த-5)

### சட்டவிரோத

[illegible] என்று [illegible]கேசன்துறைப் [illegible] அத்தியட்சகர் தமயந்த விஜயஸ்ரீ தெரிவித்தார்.

நேற்று நடந்த வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கடந்த வருடம் 700 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த வருடம் 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

எனவே யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தல் வேண்டும். கால அவகாசம் நிறைவடைந்த பின்னர் கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் - என்றார். (த-4)

### நல்லிணக்கத்து

கும் இடையே சம்பந்தனின் இல்லத்தில் நேற்று மாலை முக்கிய சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, அரசு இவ்வாறு தொடர்ந்து பயணிக்குமானால் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்ற விடயத்தை அமெரிக்கக் குழுவிடம் சுட்டிக்காட்டினார் சம்பந்தன்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பூர்விக நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுப்பதற்கும், இராணுவ முகாம்கள் அமைப்பதற்குமே இந்தக் காணி அபகரிப்பு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வடக்கிலிருந்து இராணுவத்தினர் தொகை குறைக்கப்படவில்லை. இதனால் சிவில் விடயங்களிலும் இராணுவத்தினர் தலையீடு செய்கின்றனர். மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத அளவுக்கு இராணு வத் தலையீடு உள்ளது. இவற்றை அமெரிக்கக் குழுவுக்குச் சுட்டிக் காட்டினோம்.

வலி.வடக்கில் மக்களின் காணிகளை அபகரித்தது மட்டுமல்லாமல், அங்குள்ள தமிழ் மக்களின் வீடுகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளையும் இராணுவத்தினர் முன்னெடுக்கின்றனர். இதனைத் தடுப்பதற்கு ஜனாதிபதியுடன் பேசியும் பயனில்லை. தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்கள் இதுவரையில் அரசால் வெளிப்படுத்தப்படவில்லை. அவர்களை விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுக் காணமற் போனவர்கள் தொடர்பிலும் எந்தவித முன்னேற்றகரமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்ற விடயத்தையும் அவர்களுடனான பேச்சில் விளக்கினேன்.

அத்துடன் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. நல்லிணக்கத்துக்கான முனைப்புக்கள் எதனையும் அரசு இதுவரை வெளிப்படுத்தவில்லை. அரசு இதே போக்கில் சென்று கொண்டிருக்குமானால் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

கடந்த இரண்டு தடவைகள் இலங்கைக்கு எதிராக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு முழுமையான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. மாறாகச் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக ஒன்றிரண்டு விடயங்களை, எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் செய்து முடிக்க அவரசப்படுகிறது என்றும் இந்தச் சந்திப்பில் எடுத்துரைத்தேன்.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்பதையும் அவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தேன் - என்றார்.

இன்றையதினம் அமெரிக்க குழுவினர் யாழ்ப்பாணத்துக்க வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இமையாணன், சென்.சேவியர் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.7
நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் 'மைலோ' வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், சென். சேவியர் விளையாட்டுக் கழகம் ஆகியன அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

நேற்று முன்தினம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகமும், சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதனை நிரூபிக்கும் வகையில் மோதினர். ஆட்டத்தின் இறுதியில் இரு அணியினரும் தலா 2 கோல்களைப் போட்டமையால் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. இதில் பொமர்ஸ் அணி சார்பாக சாரங்கன் இரண்டு கோல்களைப் பெற்றுக் கொடுத் தார். சென்.சேவியர் அணி சார்பாக அனஸ்ரின், நிரோஜன் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டனர்.

இதனை அடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதையில் 3:2 என்ற கோல் அடிப்படையில் சென். சேவியர் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகமும் மோதின.

**மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் தமது அபார திறமைகளை வெளிக்காட்டினர்.**

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் தமது அபார திறமைகளை வெளிக் காட்டினர். இருந்தபோதும் முதல் பாதி ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ராம்கி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி கோல் ஒன்றைப் பெற்றுக் கொண்டார். இதுவே அந்த அணியின் வெற்றிக் கோலாகவும் அமைந்தது.

இதன் பின்னர் இரு அணியினரின் கோல் பகுதிக்குள்ளும் பந்து அடிக்கடி சென்ற போதும் கோல் காப்பாளர்களின் திறமையால் அவை கோலாக்கும் முயற்சிகள் தடுக்கப்பட்டன. இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-23-86-400)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.7
முல்லைத்தீவு 591ஆவது இராணுவப் படைப் பிரிவு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளம் பறவை விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## ஞானமுருகன் அணியை வென்றது பாடும்மீன்

யாழ்ப்பாணம், டிசெ.7
யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.



இதில் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோலைப் பெற் றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

**இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோலைப் பெற் றமையால் ஆட்டம் சம நிலையில் முடி வடைந்தது.**

வெற்றி தோல்வியைத் தீர்மானிப் பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மாகாண சபை உதைபந்தாட்டம்; பொறியியல் பிரிவு சம்பியனானது



யாழ்ப்பாணம், டிசெ.7
வட மாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் பிரிவு அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் பிரதம செயலாளர் அணியை எதிர்த்து பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் பிரிவு அணி மோதிக் கொண்டது. இதில் பிரதம செயலாளர் பொறியியல் பிரிவு அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.7
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

அல் - இக்பால் விளையாட்டுக் கழக அணிக்கும், ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மாறன் 17 ஓட்டங்களையும், கண்ணா 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் அல் - இக்பால் விளையாட்டுக் கழக அணி சார்பில் மயூரன், தர்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினார்கள்.

40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அல் - இக்பால் விளையாட்டுக் கழக அணி எந்தவித இலக்குகள் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் வினோத் 18 ஓட்டங்களையும் , நிஷாந்தன் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

த மல்ரி விளையாட்டுக் கழக அணிக்கும் இளையதாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தமல்ரி விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் முசா 21 ஓட்டங்களையும், றுமேஸ் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்

பந்துவீச்சில் இளைய தாரகை விளையாட்டுக் கழக அணி சார்பில் கார்த்திக் 2 இலக்கையும் , வினோத் ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

44 ஓட்டங்களைப் பெற்றால்



வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இளைய தாரகை விளையாட்டுக் கழக அணி 3:1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 21 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் வினோத் 12 ஓட்டங்களையும் , கார்த்திக் 4 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் த மல்ரி விளையாட்டுக் கழக அணி சார்பில் அஷன், றோகன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், முசில் ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

த மல்ரி விளையாட்டுக் கழக அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யுனைட்டட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், கலைமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத் தாடிய யுனைட்டட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றயன் 22 ஓட்டங்களையும், றொபேட் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கலைமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி சார்பில் சசி 2 இலக்கையும் , வினோத் ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 4:2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கையும் இழந்து 36 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் யோன்சன் 24 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் யுனைட்டட் விளையாட்டுக் கழக அணி சார்பில் றாயன் 2 இலக்கையும், றொபேட், விஷால் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

யுனைட்டட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

செவ்வானம் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும், கலைமகள் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய செவ்வானம் விளையாட்டுக் கழக 'பி' அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்கை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றொசான் 21 ஓட்டங்களையும் தாஸ் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கலைமகள் விளையாட்டுக் கழக 'பி' அணி சார்பில் வசந்தன், நிலக்சன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

44 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டுக் கழக 'பி' அணி 4:3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 35 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் வசந்தன் 11 ஓட்டங்களையும், பூவி 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் செவ்வானம் விளையாட்டுக் கழக 'பி' அணி சார்பில் தினேஸ் 2 இலக்கையும் , சுதர்சன், தாஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

செவ்வானம் விளையாட்டுக் கழக அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவை சாய்த்தது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது. இதன் முதலாவது போட்டி நேற்று முன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தது.

அதன்படி தென்னாபிரிக்காவைச் சேர்ந்த அம்லா, டி கொக் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் தொடக்கம் முதல் நிதானமாக விளையாடி வந்தனர். இதனால் இந்திய வீரர்கள் இந்த ஜோடியைப் பிரிக்கச் சிரமப்பட்டனர்.

தொடர்ந்து விளையாடிய கொக் 54 பந்தில் அரைசதம் அடித்தார். அவரைத் தொடர்ந்து அம்லாவும் அரைச்சதம் கடந்தார். அவர் 73 பந்தில் 4 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் அந்த இலக்கை எட்டினார். தொடர்ந்து விளையாடிய அம்லா 65 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

கொக் 101 பந்தில் சதம் அடித்தார். அதில் 15 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கும். தொடர்ந்து விளையாடிய அவர் 135 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அப்போது தென்னாபிரிக்க அணி 41.5 பந்துப்பரிமாற்றங்களில் 247 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நான்காவது இலக்குக்கு டி வில்லியர்சுடன், டுமினி ஜோடி சேர்ந்தார். இவர்களும் இந்திய பந்து வீச்சை துவம்சம் செய்தனர். டி வில்லியர்ஸ் 38 பந்திலும், டுமினி 25 பந்திலும் அரைச் சதம் அடித்தனர். 77 ஓட்டங்கள் எடுத்த டி வில்லியர்ஸ் , சமியின் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து மில்லர் களம் இறங்கினார். நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் தென்னாபிரிக்க அணி 4 இலக்குகள் இழப்புக்கு 358 ஓட்டங்களைக் குவித்தது. தென்னாபிரிக்க அணி கடைசி 10 பந்துப்பரிமாற்றங்களில் 135 ஓட்டங்களை குவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணி தரப்பில் சமி 10 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 68 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 இலக்குகள் எடுத்தார். றோகித் சர்மா 10 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 82 ஓட்டங்களை வாரி வழங்கினார்.

இதையடுத்து 359 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் களமிறங்கினர். தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க முடியாமல் இந்திய வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்கத் தொடங்கினர். ஷிகர் தவான் (12 ஓட்டங் கள்), விராட் கோஹ்லி (31 ஓட்டங்கள்), யுவராஜ்சிங் (ஓட்டமெதுவுமின்றி) ஏமாற்றி னர். அதிகபட்ச ஓட்டமாக அணித் தலைவர் டோனி 65 ஓட்டங்களைப் பெற்றார்.

41 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 217 ஓட்டங்களையே எடுத்தது. இதனால் தென்னாபிரிக்க அணி 141 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. (த)



41 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 217 ஓட்டங்களை எடுத்தது. இதனால் தென்னாபிரிக்க அணி 141 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

# மலேசியா, சிங்கப்பூரில் ஐ.பி.எல்.போட்டிகள்?

மலேசியா அல்லது சிங்கப்பூரில் ஐ.பி.எல்.போட்டிகளை நடத்தலாம் என்று இந்தியக் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் போட்டி 2008ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் நடத்தப்பட்ட இந்தப்போட்டி ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்றது. இதுவரை 6 ஐ.பி.எல். போட்டிகள் நடைபெற்றுள்ளன. ஒரே ஒரு முறை இந்தப்போட்டி இந்தியாவில் இருந்து தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக 2009ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டி தென்னாபிரிக்காவில் நடந்தது.

அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதால் 7 ஆவது ஐ.பி.எல். போட்டி இந்தியாவில் நடைபெறுவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. 7ஆவது ஐ.பி.எல். போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து ஆட்டங்களையும் அங்கு நடத்துவதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன.

இதனால் ஐ.பி.எல். போட்டியின் சில ஆட்டங்களை சிங்கப்பூர் அல்லது மலேசியாவில் நடத்தலாம் என கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. (த)




# உலகக் கிண்ண உதைபந்தின் போது போராட்டங்கள் வேண்டாம் - பிரேசில் கோரிக்கை

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும்போது போராட்டங்கள் எதனையும் நடத்த வேண்டாம் என அந்நாட்டு மக்களிடம் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுச்செயலர் ஜெரோம் வாலெக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போட்டிகளுக்கான கட்டுமானப் பணிகள், உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை ஆகியவற்றின் பின்புலத்தில் பிரேசிலில் இந்த உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்துவது மிகவும் சிரமமாகி வருகிறது. என்றாலும், அந்தப் போட்டிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவது தவறு என்றும் அவர் பி.பி.சியிடம் தெரிவித்தார்.

உலகக்கிண்ணப் போட்டிகளின் காரணமாகப் பணத்தை விரயம் செய்கிறார்கள் என்று அதன் ஏற்பாட்டாளர்களின் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதைக் காரணம் காட்டி பிரேசிலில் வன்முறையுடன் கூடிய பல போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை அடுத்த ஆண்டு கோடை காலத்தில் உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெறவுள்ள ஆறு விளையாட்டு அரங்கங்களின் கட்டுமானப் பணிகள் முடிவுறாததால் அவை டிசெம்பர் மாத இறுதிக்கு முன்னர் தயாராகாது என்று பிரேஸிலின் விளையாட்டுத்துறை அமைச்சர் அல்டோ ரெபெல்லோ அறிவித்துள்ளார். இதில் சாவ் பாலோ நகரில் ஆரம்பப்போட்டி இடம்பெறவுள்ள விளையாட்டு அரங்கும் அடங்கும்.

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் கட்டுமானப் பணிகளுக்கு விதித்த காலக்கெடுவுக்குள் அந்த ஆறு அரங்குகளும் கட்டி முடிக்கப்படவில்லை. அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் தொடங்குகின்றன.

இப்போட்டிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் பிரேசில் அரசும் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. எதிர்பார்த்ததைவிட கூடுதலான நிதிச் செலவு, தாமதங்கள் ஆகியவை குறித்தே விமர்சனங்கள் எழுந்துள் என. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைக்கு இடையூறு விளைவித்தவர் கைது

டெங்கு நுளம்புக் கட்டுப்பாடு தொடர்பாக வீடுகள் பரிசோதனைக்காகச் சென்ற பொலிஸார் மற்றும் சுகாதாரப் பகுதியினரை கடமை செய்ய விடாமல் தடுத்த இளைஞரைப் பொலி ஸார் கைது செய்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை கைதடிப் பிரதேசத்தில் டெங் குக் கட்டுப்பாட்டு பரி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டபோது குறித்த நபரின் வீட்டுடன் சேர்ந்த பகுதி துப்புரவு இன்றிகாணப்பட்டதால் அதற்கான ஆலோசனைகள் வழங்கிய போதும் அவர் அவற்றைச் செவிசாய்க்கா மல் அலட் சியமாகச் செயற்பட்டு கடமை செய்ய விடாமல் தடுத் துள்ளார். கடமை செய்ய விடா மல் தடுத்த இளை ஞரை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலை யத்துக்கு அழைத்துச் சென்ற னர். மாலையில் தனது தவறை உணர்ந்து மன்னிப் புக் கேட்ட தையடுத்து அவர் விடு விக்கப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது. (வ-9)


**VACANCIES** • STUDENT COUNSELOR • RECEPTIONIST

• Candidate should have pass in A/L'S • Positive Attitude
• Handle the customer relationship
• Free Accommodation • நேர்முகத்தேர்வு Jaffna Town இல் நடைபெறும் •
How to apply : Sent your CV through email or sent SMS with in 5 Days

VALAKAM INSTITUTE
No. 7, 57th Lane, (Rudra Mawatha) Colombo - 06.
Email : varathan1000@gmail.com
Hotline 0777 382 108

**BITSMANS**

கல்வி நிறுவனம்
மானிப்பாய் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
புதிய கல்வியாண்டு 2014 தரம் 3 முதல் O/L வரை
Grade 6 To 11 English Medium Classes
சகல பாடங்களும் எமது Super Grade ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றது
ஆரம்பம்:- 09/12/2013 திங்கள் காலை 9.30 மணி

**றோயல் அக்கடமி**

அரசடி வீதி யாழ்ப்பாணம் | நாவலர் வீதி நல்லூர்
தரம் 6 முதல் O/L வரை
தமிழ் மொழி மூல வகுப்புக்கள்
English Medium Classes
கணிதம்
நீண்ட கால கற்பித்தல் அனுபவம் கொண்ட யாழ்.மாவட்டத்தின் சிரேஸ்ட ஆசான் "மணி" வேலாயுதம் அவர்கள்
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
09.12.2013 திங்கட் கிழமை
யாழ்.றோயல் அக்கடமியில் - காலை 6.30
நல்லூர்.றோயல் அக்கடமியில் - காலை 9.00
அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம் - நிர்வாகி

தரம் 6 முதல் O/L ற்கு
யாழ் நகரின் No: 1 கல்வி நிறுவனம்

**எடிசன் அக்கடமி**

புதிய கல்வி ஆண்டு 2014 - ஆரம்பம் 09/12/2013 திங்கட்கிழமை
யாழ் - 9.30 a.m | கொக்குவில் - 12.00 noon
கலட்டி - 10.00 a.m | வட்டுக்கோட்டை - 1.00 p.m
நல்லூர் - 11.00 a.m | சுன்னாகம் - 2.00 p.m
✲ மீண்டும் கணிதம் :- திரு. B.P.பாஸ்கரன்
(தமிழ் மொழி மூலம் & English Medium)

**SHAMROCK** ஈச்சமோட்டை
புதியகல்வியாண்டு-2014
ஆரம்பம்:- 07/12/2013 சனி காலை 8.00 மணி
தரம் 1 முதல் A/L வரை
சிங்களம் - சனி ஞாயிறு 3.00 p.m
Gr 6 To 11 English Medium அனுமதிகள் வழங்கப் படுகின்றன.
(STANDARD EDUCATION WITH GOOD DISCIPLINE)

**மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

(3 Years Contract (Work Permit) Furniture Factory மரத்தளபாட உற்பத்தி உதவியாளர் Helpers -Nos 20 அதி உயர் சம்பளம் +OT+ மேலதிக உற்பத்திக்கு Commission 3வருட முடிவில் கை நிறைய சம்பளத்துடன் தொழில் ஒன்றையும் கற்றுக்கொள்ள அரியதோர் சந்தர்ப்பம் வயதெல்லை 22 - 38 ( ஒரு மாதத்துக்குள் பயணம் விரையுங்கள்)
உங்கள் Passport சகிதம் எதிர்வரும் 7 ஆம் திகதி இல. 24 Station Road வவுனியா Lanka Voice இலும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணம் Hospital வீதி ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green Grass Hotel இலும் காலை 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
வீட்டுப்பணிப்பெண்களும் உடன் தேவை. ( 2 Years work permit செய்து கொடுக்கப்படும்)
தொடர்பு : Lanka Voice 075 0650084, 024 5615610

**பிந்திய விசா ஆலோசனை வரப்பிரசாதங்கள்**

★ டென்மார்க்கில் படிக்க உழைக்க 10 பேருக்கு அரிய வாய்ப்பு - 14.12.2013 வரை மட்டுமே 20 % கட்டணக்கழிவு)
★ கனடாவில் படிக்க உழைக்க - 30% கட்டணக்கழிவு 15.12.2013 வரை மட்டுமே
★ O/L உடன் நியூசிலாந்தில் சைப்பிரஸில் படிக்க IELTS தேவையில்லை முடிவு 20.12.2013

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
021 2219016 , 021 5689090
www. thisaivisa.com

**சாரதி தேவை**

யாழ். நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு 45வயதுக்கு மேற்பட்ட கார்ச்சாரதி தேவை. அவைய அடிப்படை நாளொன்றுக்கு. 400/= வீதம் வழங்கப்படும். யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசவாசிகள் மட்டும் இணைக்கப்படுவர்.
T.P:- 078 5285342

**கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**


வயது 19 - 38 (இரண்டு வருட கால ஒப்பந்தம்) கீழ்க்காணும் வேலைவாய்ப்பு உடனடியாக காத்திருக்கின்றன.
* Electrician
* Helper
* Rigger
* General Foreman
* Painter Jobs
அதி உயர் சம்பளம் மிகக் குறைந்த கட்டணத்தில் பயணமாகலாம் Passport சகிதம் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் யாழ்ப்பாணம் Green Grass Hotel இல் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு : Lanka Voice. 075 0650084

**Sky Computers (Pvt) Ltd**

விடுமுறைக்கால கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
Ms office 2013, Mobile Repairing, DTP, Web Design, Hardware, Video Mixing, Internet & E-mail, Graphic Design, Computer Type Setting, Kids Programs.
TP:021-222-1417
சிங்களம்: புதிய பிரிவுகள் ஆரம்பம் (By:A.K.Moorthy) (09-12-2013 திங், வெள் - 4:30 pm)
89.கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)

**SUBRA சித்தன்கேணி**
கிளை - வட்டுக்கோட்டை
தரம் 1 முதல் O/L வரை
(தமிழ் - ஆங்கில மொழிமூலம்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
07.12.2013 சனி மாலை 3.30 மணி
வலி. மேற்கில் கல்விக்குத் தனியிடம் பெற்ற ஒரே நிறுவனம்
SUBRA
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
40 மாணவர்களுக்கு மட்டும் ஒரு வகுப்பில் அனுமதி
* மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள்
* நவீன கற்பித்தல் சாதனங்களுடன் புதிய பிரவேசம்
* மாணவர்களுக்கான இலவச நூலக வசதி
* கடமை - கண்ணியம் கட்டுப்பாட்டுடனான தனித்துவமான நிறுவனம்


# மரண அறிவித்தல்



## தவராஜா ரவிராஜ் (பொறியியலாளர் - கனடா)

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப் பிடமாகவும் கொண்ட தவராஜா ரவிராஜ் நேற்று (06.12.2013) கனடாவில் காலமானார்.

அன்னார் தவராஜா-ஜெகசோதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், ராஜாநந் தன்-சித்திரா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காவேரியின் அன்புக் கணவரும், விந்தியா, விமலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி. செல்வராசா பிரிய தர்சினி (கொழும்பு), திலகர் திலகராஜ் (பொறியியலாளர், TILKO UK), ரகு ராஜ் (பொறியியலாளர் UK), சுரேந்திரராஜ் (பொறியியலாளர் UK), திருமதி. சிவகுமார் உதயதர்சினி (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கோகில வாணி (பட்டயக்கணக்காளர் - UK), ரஞ்சி, இந்து, செல்வராசா (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனப் பொறியியலாளர்-கொழும்பு), சிவகுமார் (UK) சம்பத், குஷி ஆகி யோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மகேசன் (பெருந்தெருக்கள் திணைக் களம் மட்டுவில்), காலஞ்சென்ற சிவபாக்கியம் நடராஜா, அமுதரத்தினம், காலஞ் சென்ற பத்மாவதி பாலசுந்தரம், திருமதி தங்கரத்தினம் கதிரவேலு (கனடா), திருமதி சரோஜினி தேவி சண்முகலிங்கம் (கனடா), திரு.பொ.சிவனேசன் (கொழும்பு) ஆகியோரின் பெறாமகனும், செல்வகுமார் (கனடா), ஜெயந்தன் (கனடா), சாந்தாதேவி (கனடா), ஜெயந்தி (கனடா), வசந்தி (கனடா), சுகந்தி (கனடா) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், சியாமளாதேவி (கனடா), சந்திரசேகரன் (கனடா), பூர்ணிமா (கனடா), ஜெயதேவன் (கனடா), நாகராஜா (கனடா), சிவநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் Dr. மது (Consultant Nephrologist குருநாகல்), சுதா (ஆசிரியர் இந்து மகளிர் கல்லூரி-கொழும்பு), Dr.காயத்திரி (UK), பிரணவன் (UK), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கபிலன் (UK), பிருந்தன் (UK), சந்தியா (UK), அகிலன் (UK), அநந்தன் (UK), நீலன் (UK), ரோஜன் (UK) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**TILKO Jaffna City Hotel (Pvt) Ltd,**
**Contact No: 0014168042642**
**0019055420803, 0016476695932** (சி/14296) (10.14)

தகவல்:
தவராஜா திலகராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.